# வாழ்விக்க வந்த பாரதி

CONNEMARA PUBLIC LIBRARY
13 SEP 1978
MADRAS

நெ. து. சுந்தரவடிவேலு

வானதி பதிப்பகம்
சென்னை-17

முதற் பதிப்பு : செப்டம்பர், 1978
உரிமை பதிவு

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை ரூ. 4-50

3003/28
5
253132

மாருதி பிரஸ், 173, பீட்டர்ஸ் ரோடு, சென்னை—600 014.

# முன்னுரை

உயிர்வகைகளில் சிறந்தவர்கள் மக்கள். மனிதன் வெறும் பொருளல்ல; அவன் ஓர் உயிர்; ஆறுவது அறிவையும் பெற்ற உயிர். அறிவை மட்டுமா பெற்றுள்ளது மனித இனம்? இல்லை. உணர்வையும் பெற்றுள்ளது மக்கள் இனம்.

நாம் வாழும் முறையை அறிதல் வேண்டும். அதற்குத் துணை நிற்பது, அறிவு; பகுத்தறிவு. கற்கக் கற்க நம் அறிவு ஊறும். அறிவு பெருகப் பெருக, தெளிவு பிறக்கும். நல்லது எது, அல்லது எது என்று தெளிதல் முதற் பணி. அதுவே முழுப்பணியாகாது. தெளிந்து தேர்ந்த வழியே, அயராது, தொடர்ந்து நடப்பது, நம் கடமையாகும்.

அறிவு, தெளிவைக் கொடுக்க, உணர்வு உந்தாற்ற லாக உதவும். நல்லுணர்வின் உந்துதலே, நம்மை வழியில் முறியாதபடி இயக்கும். வாழ்நாள் முழுதும் இயக்கும் நல்லுணர்வுத் துடிப்பு, நம் அனைவருக்கும் தேவை.

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக, என்னை வழி நடத்துவது திருக்குறளும் பாரதியாரின் கவிதைகளும். ஞாலத்தின் தலைசிறந்த நீதி இலக்கியமாக திருக்குறள் விளங்குகிறது. அதைப் படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. தேர்வுக்காகவே சில பாக்களைக் கற்றேன். வழி அறியப் பல குறள்களைக் கற்றேன். இளமைப் பருவத்தே கற்றேன். எனவே, நினைவில் நின்று விட்டன. அப்போதைக்கப்போது குறட்பாக்கள்

மின்னுகின்றன. ஒரு பாதையைக் காட்டுகின்றன. போகக்கூடாத எல்லை எவை என்பதையும் சுட்டிக் காட்டி எச்சரிக்கின்றன.

பள்ளியில்லாத பட்டிக் காட்டிலே பிறந்த நான், கல்விநெறிக் காவலனாக வளர்ந்ததற்கு என் இயற்கை உள்ளாற்றலா பொருட்டு? இல்லை. திருக்குறள் அறிவும் உணர்வுமே.

திருக்குறள் காட்டும் உறுதியான நீண்ட ஒரு பாதையில், என் வாழ்க்கையெனும் பேரூர்தி ஓடி, உயர முடிந்தது எதனால்? யாவரும் கேளிர் என்னும் விண்வெளியில் பறக்க முடிவது எதனால்? பாரதியாரின் பாடல்களால்.

நான் கல்லூரிப் படிப்பிற்குக் கால் எடுத்து வைத்த காலம், பாரதியாரின் பாடல்கள் தடை செய்யப்பட்டிருந்த காலம். ஏன், வெளியிடக்கூடாது, விற்கக் கூடாதென்று தடை விதித்தனர்.

பாரதியாரின் பாடல்களில் பல எழுச்சி பொங்கும் பாடல்கள். அவற்றைக் கேட்கும், படிக்கும் பொது மக்கள், உரிமைக் கனல் கொண்டு விடுவார்கள் என்று அன்று நம்மை ஆண்ட ஆங்கில அரசு மிரண்டது. உரிமை வேட்கை மிகுந்தால் 'ஓயுதல் செய்யாது தலை சாயுதல் செய்யாது' இந்திய விடுதலைக்குப் போரிடு வார்கள் என்று, அன்னிய அரசு அஞ்சியதில் பொருள் உண்டு.

பாரதியாரின் பாடல்கள் உண்மையில் இருந்து கொப்பளிப்பன. அவை, 'உள்ளுவது ஒன்று; சொல்லுவது ஒன்று' என்னும் தன்மையில் ஆக்கப் பட்டவை அல்ல. உள்ளத்தில் உண்மையொளி உண்டாகும்போது, வாக்கினிலே ஒளி உண்டாகாமல் போகுமா? பாரதியாரின் பாடல்களில் இயற்கையான உயிர்த்துடிப்பைக் காணலாம்.

கவிஞன் காலத்தின் கண்ணாடி; உள்ளதை உள்ளவாறு உரைக்கும் உரம் பெற்ற கண்ணாடி. அவன் உயர்வுகளை உணர்ந்து காட்ட வேண்டும். கீழ்மை கண்டு, பொங்கிப் பாட வேண்டும். கீழ்மையை வெறுத்து ஒதுக்கும் வெறியைப் படிப்போர் பெறும் வகையில் பாட வேண்டும்.

கவிஞன், அவர் முகத்தையும் இவர் முகத்தை யும், பார்த்து மகிழ்விக்கப் பாடுதல் ஆகாது, தாட்சணி யப்பட்டுப் பாடவும் ஆகாது. தன் இயற்கையான நல்லுணர்வுகளைத் தங்குதடையின்றி ஓடவிட்டுப் பாட வேண்டும். போற்ற வேண்டியவற்றை போற்ற வேண் டிய அளவு போற்றவேண்டும். கண்டிக்க வேண்டிய வற்றை கண்டிக்க வேண்டிய அளவு கடுமையாகக் கண்டிக்கத் துணியவேண்டும்.

இவற்றிற்கெல்லாம் மேலாக, கவிஞன் ஓர் மாய வித்தைக்காரனாகவும் இருத்தல் வேண்டும். உள்ள உயர்வுகளைப் பதியவைத்து, மண்டிவிட்ட கொடுமை களைக் களையக் குரல் கொடுப்பது கவிஞனின் கடமை.

நீரை உண்ட பசு பாலைப்பொழிவதுபோல், வாழ்க்கைப்பாலையில் வளர்பல முட்களைச் செறித்து, அமுதக் கருத்துகளை வழங்குவது சிறந்த கவிஞர் களின் சீரிய தொண்டாகும்.

தேசியகவி சுப்ரமணியபாரதியார், மேற்கூறிய இலக்கணங்களுக்கு இலக்கியமாக விளங்கினார். அவர் தமிழ்ப் பொதுமக்களை எண்ணிப் பாடினார். அவர்கள் பெறவேண்டிய நல்லுணர்வுகளை அவர்களுக்கு ஊட்டு வதற்காகப் பாடினார். படிப்போர் புலவரைத் தேடி யலையாமல், அகராதியைப் புரட்டிக்கொண்டு அல்லல் படாமல், எளிதாகப் புரிந்துகொள்ளும் எளிய சொற் களால் பாடினார். உயரிய கருத்துக்களை எளிய சொற்

களால் பாடிய முதற்கவிஞன் பாரதி என்றால், மிகை யல்ல.

தடை செய்யப்பட்டதால், பாரதியாரின் பாடல்கள்பால் எங்களில் பெருக்குத் தனி ஈடுபாடு எழுந்தது. பாரதியாரின் கவிதைகளை வாங்கி ஒளித்து வைத்துக் கொண்டு படித்தவர்களில் நானும் ஒருவன். பதினாறு பதினேழு வயதில் படித்தேன். அவை, பசுமரத்தாணிபோல், என் நெஞ்சில் பதிந்தன. மீண்டும் மீண்டும் படித்து ஊக்கம் பெற்றேன். என்னையறியாமலேயே, பாரதி பாடல்கள் மனப்பாடம் ஆகி விட்டன. என்னில் இரண்டறக் கலந்துவிட்டன.

எனக்கு நாட்டுப்பற்றை ஊட்டியது பாரதியாரின் கவிதைகள். குலத்தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம் என்னும் சமத்துவ உணர்விற்கு உரமாகியவை பாரதி பாடல்கள். எல்லோரும் வாழ்வோம்; நன்றாக வாழ்வோம்; ஒன்றாக வாழ்வோம் என்னும் கோட்பாட்டிற்காக வாழவைப்பது, பாரதியின் கவிதைகள்.

'நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?' என்று பாரதியாரோடு சேர்ந்து கேட்டுக்கொள்வதால் அல்லவா, சோற்றுக்குக் கேடாக இல்லாமல் வாழ முடிகிறது?

'தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும் தருமம் மறுபடி வெல்லும், என்னும் பாடல், நான் சோர்ந்த போதெல்லாம், தன்னாற்றலாகப் பயன்பட்டு வருகிறது.

திருக்குறள் வழியில் பாரதி உணர்வோடு வாழும் என்னை வேலை வாங்கும் மந்திரவாதியாக, சத்திய கங்கை ஆசிரியர் பகீரதன் விளங்குகிறார். பத்துத் திங்கள், பாரதியாரைப் பற்றி தமது சத்ய கங்கையில்

என்னை எழுத வைத்தார். அவருக்கு எப்படி நன்றி சொல்ல!

'அக் கட்டுரைகளின் தொகுப்பை 'வாழ்விக்க வந்த பாரதி' என்னும் தலைப்பில் வெளியிட முன் வந்தார், வானதி திருநாவுக்கரசு. விரைந்து வெளியிடுகிறார். அவருக்கும் பெரிதும் நன்றியுடையேன்.

அன்பர்களின் ஆதரவு வழக்கம்போல் தாராள மாகவே இருக்குமென்று நம்புகிறேன்.

4–9–78 நெ. து. சுந்தரவடிவேலு

# பதிப்புரை

மகாகவி பாரதியார் நாட்டு மக்கள் நலமுற்று வாழவும் நானிலத்தவர் மேனிலை எய்தவும் பாடு பட்டவர். "பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திடவேண்டும்" என்று கனிவோடு கூறியவர். அவர்தம் பாடல்களால் சாதாரண மக்களின் வாழ்க்கை நாளும் உயர்வு பெற்று வருவதைக் காண்கிறோம். இதையே 'வாழ்விக்க வந்த பாரதி' என்னும் தலைப்பில் அற்புதமான கட்டுரை வடிவத்தில் தமிழ்ச் சான்றோரும் அறிஞருமாகிய உயர்திரு நெ. து. சுந்தர வடிவேலு அவர்கள், 'சத்ய கங்கை' பத்திரிகையில் தொடர் கட்டுரையாக எழுதி வந்தார்கள். அதனைப் புத்தக வடிவில் வானதி பதிப்பகத்தில் வெளியிட அனுமதியளித்த உயர்திரு நெ. து. சுந்தரவடிவேலு அவர்களுக்கும் இந்த நூல் தோன்றக் காரணமான சத்திய கங்கை பத்திரிகை ஆசிரியர் திரு. பகீரதன் அவர்களுக்கும் தமிழ் வாசகர்களுக்கும் நன்றி.

அன்பு,
ஏ. திருநாவுக்கரசு
வானதி பதிப்பகம்

# வாழ்விக்க வந்த பாரதி

## 1

சொல்லும் எழுத்தும் கருத்தைத் தெளிவாக வெளியிட உதவவேண்டும். சுரக்கும் சிந்தனைகளை மறைக்கும் சொற்கள் உயிரற்றவை; தீங்கானவை. எண்ணியதை எண்ணியவாறு எழுதாத எழுத்துக்கள், எலும்புத் துண்டுகள்.

உணர்ந்ததை உணர்ந்தவாறு உரைக்கும்போதே, சொற்கள் உயிர்ப்பைப் பெறுகின்றன; ஒளிவிடுகின்றன.

உண்மையாகக் கொப்பளிக்கும் சொற்கள் ஒளிவிடும்; நெடுநாள் ஒளிவிடும்.

சொல்லும் எழுத்தும் போலவே, கவிதைகளும் உண்மையிலிருந்து ஊற்றெடுக்க வேண்டும். நல்லுணர்வுகளாகப் பொங்கவேண்டும்.

கொதிநீர் ஊற்றுகளாகக்கூட இருக்கலாம். ஆயினும் அழுக்குநீர் ஊற்றுகளாக மட்டும் இருத்தல் ஆகாது. நன்னீராகவோ, மருந்து நீராகவோ இயற்கையாகப் பொங்குபவை, கவிதைகள். உவமை நயங்கள், கற்பனை

வளங்கள், சேரவேண்டாமா? வேண்டும். அப்படிச் சேருபவை எப்படி இருக்கவேண்டும்?

இயற்கையாகப் பொங்கும் கவிதை வெள்ளத்தை அழுக்குப்படுத்துவதாக இருக்கக் கூடாது. குடிநீரோடு கலக்கும் தண்ணீராக இருக்கலாம்; பாலாக இருக்கலாம்; பழச்சாருக்வும் இருக்கலாம்.

உணர்வின் தூய்மையை உயிர்ப்பைக் கெடுக்கும் கற்பனை கொள்ளத்தக்கது அல்ல.

உலகத்தின் தொன்மையான மொழிகளில் ஒன்று நம் தாய்த் தமிழ். அதில் பாடல்கள் செறிந்திருப்பது வியப்பல்ல.

இடைக்காலத்திலும் அதற்குப் பிறகும், புராணத்தைப் பார்த்துப் புராணம், அந்தாதி பார்த்து அந்தாதி, உலாவுக்குப் போட்டியாக உலா என்னும் போக்கிலே தமிழ்ப் பாடற் புதர்கள் பெருத்தன.

'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்; வாழவும் வேண்டும். இது மனித முயற்சிக்கு அடங்கியதே' என்பதை நம் முன்னோர் மறந்தார்கள்.

'வறுமையும் வாட்டமும், ஏழ்மையும் ஏளனமும், இழிவும் பழிப்பும் தவிர்க்க முடியாதவை' என்று எண்ணத்தலைப்பட்டார்கள்.

'இராமன் ஆண்டாலென்ன? இராவணன் ஆண்டாலென்ன?' என்னும் அலட்சிய மனப்போக்குப் பரவலாயிற்று. விளைவு?

பத்தாயிரம் கிலோ மீட்டருக்கு அப்பால் இருந்து வந்த வணிகன், நம்மை நாடாளும் நிலை உருவாகியது.

பலகோடி மக்கள், சிலவாயிரம் அன்னியர்களுக்கு அடிமையானுர்கள். இது இழிவு என்பதைக்கூடப் பொது மக்கள் உணரவில்லை.

இங்கொருவர், அங்கொருவர் மட்டுமே, நம் நாட்டிற்குத் தன்னுட்சி உரிமை வேண்டுமென்று கருதினர்; பேசினர்; எழுதினர்.

அடிமையிருளில் மூழ்கி, வறுமைச் சேற்றில் சிக்கி, தற்குறித் தன்மையில் மயங்கி, இந்தியர் வாழ்ந்த நிலையில், தெற்கிலும் இடி இடித்தது; மின்னல்கள் மின்னிக் கண்ணைப் பறித்தன.

இடியோசையைக் கேட்பதற்கும் அஞ்சிப் பதுங்கியவர்கள் பலராவார். ஒளிவீசி மின்னும் மின்னலைக் காண முடியாது, கண்களை இறுக மூடிக்கொண்டவர்களும் கணக்கில் அடங்கார்.

அந்த இடியும் மின்னலும் எவை?

தேசியகவி சுப்ரமணிய பாரதியார் பாடிய கவிதைகள் இடியென முழங்கின; மின்னலெனப் பளிச்சிட்டு ஒளி வீசின.

முன்னே பலர், தத்தம் புலமையை, கெட்டிக்காரத் தனத்தைக் காட்டவே, பாடினது உண்டு. பொருள் இதுவோ, அதுவோ என்று குழம்பும்படி பாடிய புலவர்கள் ஏராளமாக உண்டு.

பாரதியார், அந்த மரபிலிருந்து விலகினுர். உணர்வுகளை உரிய உயிர்த்துடிப்போடு வெளிப்படுத்துவதைத் தம் குறிக்கோளாகக் கொண்டார்; தமிழில் அருமையாகப் பாடினுர். அது மட்டுமா?

சாதாரணத் தமிழனுக்குப் புரியும் தமிழில் பாடினுர். அவை கேட்டாரைச் சுண்டி இழுத்தன. படித்தோரைப்

பிடித்துக்கொண்டன. காந்தமெனக் கவர்ந்த அப் பாடல் கள் சிலவற்றைக் கவனிப்போம்.

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்ற வானிலும் நனி சிறந்தனவே

என்கிறார். இதில் ஐயப்பாடு ஏது?

'இக்கரைக்கு அக்கரை பச்சை'. இம் மயக்கத்திலே, இங்கே உள்ள பசும் புல்லை விட்டுவிட்டு, எங்கோ ஏதோ புல்லாகத் தோன்றுவதைத் தேடி அலையும் போக்கு மாடு களுடையது. இந்த மாட்டு மனப்பான்மை மக்கள் போக்காகவும் மாறிவிட்டது. இந்தப் போக்கால் அல்லவா, அன்னிய ஆட்சியை ஏற்றுக்கொள்ளும் அளவிற்குத் தடித்துப் போனோம்?

தடித்த உள்ளங்களை, மேற்கண்ட வரிகளால் தட்டி எழுப்பினார், பாரதியார். எதையோ தேடிப் போய்க்கொண் டிருந்த நம்மைத் தடுத்து, நிற்க வைத்தார். விழித்தும் விழிக்காமலிருந்த நம்மைப் பார்த்து,

'பாரத நாடு பழம்பெரும் நாடு
நீரதன் புதல்வர்: இந் நினைவ கற்றுநீர்'

என்று நினைவுபடுத்தினார். கண்களைத் துடைத்து நின்ற தமிழர்களை நோக்கி,

'மன்னும் இமயமலை யெங்கள் மலையே
மாநில மீதிது போற் பிறிதிலையே
இன்னறு நீர்க்கங்கை யாறெங்கள் யாறே
பொன்னொளிர் பாரத நாடெங்கள் நாடே
போற்றுவம் இஃதை எமக்கில்லை ஈடே'

என்று நம் செல்வங்களைக் காட்டி, அறிவுறுத்தினார்.

ஆறுகள் தோன்றும் இடத்திற்கு மட்டும் உரியன வல்ல; தலை மாநிலத்திற்கு மட்டும் உரியன அல்ல;

முடிமுதல் கால்வரை ஓடும் பகுதிகளுக்கெல்லாம் உரியவை. பேராறுகளோ நாடு முழுவதற்குமே உரியன.

'வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளிலும் பயிர்செய்குவோம்'

என்று, உரிமைக்கவி, நமக்கு உரியனவற்றைச் சுட்டிக் காட்டினர்.

காஷ்மீரும் கங்கையும் நம் அனைவருக்கும் உடைமை.

'இதோ வெண்ணெய்; இனி நெய்க்கு அழாதே' என்பது போலத் தெளிவாகக் காட்டிவிட்டு,

'இன்னல்கள் உற்றிடும் போததற் கஞ்சோம்
ஏழையராகி இனி மண்ணில் துஞ்சோம்'

என்று நமக்காக, பாரதியார் கம்பீரமாகச் சூளுரைத்தார்.

பழமையும் வளமும் செறிந்த பாரதத்தின் மக்களாகிய நாம் எப்படி இருந்தோம்? பாரதியின் படப்பிடிப்பைப் பார்ப்போம்.

'எண்ணிலா நோயுடையார்—இவர்
எழுந்து நடப்பதற்கும் வலிமையிலார்;
கண்ணிலாக் குழந்தைகள்போல்—பிறர்
காட்டிய வழியிற்சென்று மாட்டிக்கொள்வார்;
.........................................இவர்
பொறியற்ற விலங்குகள் போல வாழ்வார்?

இந்தப் படப்பிடிப்பு கோரமான படம். ஏன் இத்தகைய சோக நிலையை அடைந்தோம்? பாரதியார் சுட்டிக் காட்டட்டும்:

'நெஞ்சு பொறுக்குதிலையே—இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்

அஞ்சியஞ்சிச் சாவார்—இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே;

வஞ்சனைப் பேய்களென்பார்—இந்த,
மரத்தில் என்பார்; அந்தக் குளத்தில் என்பார்'
துஞ்சுது முகட்டில் என்பார்—மிகத்
துயர்ப்படுவார் எண்ணிப் பயப்படுவார்''

*இந்த அவலம் இன்றும் தொடரவில்லையா? கற்பனைப் பிசாசுக்கே நடுங்கியவர்கள் யார் யாரையோ கண்டு நடுங்கினார்கள். அவ்வாறு நடுங்கிய நம்மை,*

'சிப்பாயைக் கண்டு அஞ்சுவார்—ஊர்ச்
சேவகன் வருதல்கண்டு மனம் பதைப்பார்
துப்பாக்கி கொண்டொருவன்—வெகு
தூரத்தில் வரக்கண்டு வீட்டிலொளிப்பார்
அப்பால் எவனோ செல்வான்—அவன்
ஆடையைக் கண்டு பயந்தெழுந்த நிற்பார்
எப்போதும் கைகட்டுவார்—இவர்
யாரிடத்தும் பூனைகள்போல் ஏங்கி நடப்பார்'

*என்று பாரதி இடித்தார். இந்த அவலநிலை, தொடை நடுங்கி நிலை, இன்றும், எத்தனை ஊர்களில் தன்னாட்சி செலுத்துகிறது!*

*பூனைகளாகிய நமக்குள் ஒற்றுமையாவது உண்டா? இல்லை. நாம் நெல்லிக்காய் மூட்டைகள். அன்றும் அப்படித் தான்; இன்றும் அப்படித்தான்.*

'கொஞ்சமோ பிரிவினைகள்?—ஒரு
கோடி என்றால் அது பெரிதாமோ?'

*இத்தனை பிளவுகளும் எப்படி ஏற்பட்டன? கொள்கை அடிப்படையிலா? இல்லை, வெறும் கற்பனைப் போட்டியால் விளைந்தன.*

எனவே,

'ஐந்து தலைப்பாம் பென்பான்—அப்பன்
ஆறுதலை யென்று மகன் சொல்லிவிட்டால்,
நெஞ்சு பிரிந்திடுவார்—பின்பு
நெடுநாள் இருவரும் பகைத்திருப்பார்.
நெஞ்சு பொறுக்குதிலையே—இந்த
நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால்'

என்று, பாரதியார் மனம் நொந்து குமுறினார்.

ஐந்து தலைப் பாம்பென்பது பொய்க்கதை. கூட ஒரு பொய்யைச் சேர்த்துக்கொண்டான், பிள்ளை. அவன் பங்கிற்கு ஏதாவது கதைக்க வேண்டாமா? இதற்காக, அப்பனும் பிள்ளையும் நெடுநாள் பகைத்திருப்பதா?

அச்சத்திலும் சண்டையிலுமே பொன்னான காலத்தை வீணாகப் பாழாக்கிய மக்களுக்குத் தெளிவு ஏற்படுமா? ஏற்படாதே! நம் மக்கள்,

'கஞ்சி குடிப்பதற் கிலார்—அதன்
காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்
பஞ்சமோ பஞ்சமென்றே—நிதம்
பரிதவித்தே உயிர் துடிதுடித்து
துஞ்சி மடிகின்றாரே—இவர்
துயர்களைத் தீர்க்கவோர் வழியிலையே
நெஞ்சு பொறுக்குதிலையே—இதை
நினைந்து நினைந்திடினும் வெறுக்குதிலையே'

என்று கண்ணீர் வடித்தார், பாரதியார். ஆழ்ந்த நாட்டுப் பற்றுடைய பாரதியாருக்கு, நம் நாட்டின் மீதோ மக்கள் மீதோ வெறுப்பு வருமா? வராது.

பாரதியாரின் தெளிந்த வீர உள்ளம் வழி காட்டத் துடிக்கிறது. மக்களிடையே ஊடுருவியுள்ள அச்சம்,

ஒற்றுமையின்மை, தன்னலம், சோம்பல் இவற்றால் விளைந்த உரிமை இழப்பு, இவையே இந்தியாவின் அன்றைய நோய்களுக்கு வேர்கள்.

அந்த நோயிலிருந்து விடுபட்டோமா? நம்மிடம் இருந்து அச்சம் தொலைந்ததா? ஒற்றுமை ஓங்கி ஒருமை உளத்தவர் ஆனோமா? தன்னலத்தைத் தவிர்த்தோமா? சோம்பலை ஒழித்தோமா? இல்லையே!

## 2

நம் பாரத நாட்டை அன்னிய ஆட்சியிலிருந்து விடுவிக்கக் காங்கிரசு முயன்று வந்தது. முப்பதாண்டுகளுக்கு முன்னர் அதில் வெற்றியும் கண்டது.

தொடக்க காலத்தில், உரிமைக் குரலுக்கு மாற்றுக் குரலும், இந்திய மக்களிடையில் இருந்தே ஒலித்தது.

"ஆள்பவன் எவனானால் என்ன? அமைதி நிலவச் செய்துவிட்டானா இல்லையா? எல்லார்க்கும் பாதுகாப்பு இருக்கிறதா இல்லையா?

"நம் மன்னர்கள் காலத்தில் கிடைக்காத உயர்கல்வி வாய்ப்புகள் கிடைக்கிறதே. புகைவண்டிப் பாதைகள் போட்டுத் தந்திருக்கிறார்களே! இன்னும் எத்தனை எத்தனையோ வசதிகள்!

"நம்மவன் கையில் ஆட்சி வந்தால், சாதிப்பகை மொழிக் காழ்ப்பு இவைதானே ஓங்கித் துளிர்க்கும்?

"எங்கோ நெடுந்தொலைவில் இருந்து வந்த வெள்ளைக்காரனே ஆள்வதால், விருப்பு வெறுப்பு அலைகள் பெரிதாக்

இரா. எனவே, அன்னியர்களே இந்த நாட்டை ஆண்டு விட்டுப் போகட்டும்" என்று, தீயதாயினும் உள்ளது போற்றும் மக்களும் நிறைந்திருந்த காலத்தில், பாரதியார் பாடினார்: அவர்களுக்குப் பதில் சொல்லுவதுபோல் பாடினார்.

"உரிமையில்லாத நாட்டில் வாழும் மக்கள் வாழ்க்கை வாழ்க்கையாகாது. அடிமை மக்கள் நடமாடும் பிணங்கள். அவர்களிலே சிலர் அலங்கரிக்கப்பட்ட பிணங்கள். அவர்கள் நிலை, அதற்குமேல் உயர்ந்ததல்ல" என்று பாடினார்.

அதைப் படிப்போம்:

நின்னருள் பெற்றிலாதார் நிகரிலாச் செல்வரேனும்
பன்னருங் கல்விகேள்வி படைத்துயர்ந் திட்டாரேனும்
பின்னரும் எண்ணிலாத பெருமையிற் சிறந்தாரேனும்
அன்னவர் வாழ்க்கை பாழாம் அணிகள் வேய்
பிணத் தோடொப்பர்

அவ்வளவுதானா? ஞாயிற்றின் ஒளி படாதபோது பயிர் பச்சைகள் பட்டுப்போகும். அதே போன்று விடுதலை ஒளி வீசாத நாட்டில்,

ஆவியங் குண்டோ? செம்மை
அறிவுண்டோ? ஆக்கமுண்டோ?
காவிய நூல்கள் ஞானக்
கலைகள் வேதங்கள் உண்டோ?"

என்று பாரதி கேட்டார். பதில் என்ன? "இல்லை இல்லை; இல்லை. இல்லவே இல்லை" என்பதே, எல்லா அடிமைச் சமுதாயங்களின் பதிலும் ஆகும்.

'அன்னிய ஆட்சிக்கு உட்பட்ட நாட்டின் மக்கள், எத்தகைய துன்பங்களை அனுபவிப்பார்கள்' என்பதைப்

பாரதி பாடல் வழி தெரிந்துகொள்வோம், அன்றைய இந்தியா போன்ற அடிமை நாட்டின் மக்கள்.

ஒழிவறு நோயிற் சாவார்,
ஊக்கமொன் றறிய மாட்டார்;
கழிவுறு மாக்க ளெல்லாம்
இகழ்ந்திடக் கடையில் நிற்பார்;
இழிவறு வாழ்க்கை தேரார்
கனவினும் இன்பங் காணார்
அழிவறு பெருமை நல்கும்
அன்னே! நின்அருள் பெறுதார்!

என்று, பாரதி படம் பிடித்துக் காட்டுவது மிகையல்ல; உண்மையே!

அடிமைத்தனத்தின் இழிவையும் கொடுமையையும் உணர்ந்த வீரக்கவிஞர் சூளுரைக்கிறார். என்ன சூளுரை?

சுதந்திரத்தைப் போற்றிக் காக்கச் சூளுரைத்துக் கொள்ளுகிறார். எத்துணை இடர்கள் முன்னின்றாலும், உரிமைக்காகப் போராட உறுதிகொள்கிறார்.

உயிரிலும் இனிய உரிமைக்காகப் போராடிய நாட்டுப் பற்றாளர்களைக் கௌவிய துன்பங்கள் பலப்பல. எதையும் பொருட்படுத்தாது, இழந்த உரிமையைப் பெறுவதை மட்டுமே கருத்தில் கொண்டிருந்த பாரதியார்:

இதந்தரு மனையின் நீங்கி
இடர்மிகு சிறைப்பட் டாலும்
பதந்திரு இரண்டும் மாறிப்
பழிமிகுந் திழிவுற் றாலும்
விதந்தரு கோடி இன்னல்
விளைந்தெனை அழித்திட் டாலும்
சுதந்திர தேவி! நின்னைத்
தொழுதிடல் மறக்கி லேனே!

என்று, உலகறியக் குளுரைத்தார், கவியரசர் சுப்பிரமணிய பாரதியார்.

அச்சூளுரையை எண்ணற்ற தேச பக்தர்களும் ஓங்கி ஒலித்தனர்.

உரிமை பெற்ருல்தான் வாழ்வு பெறமுடியும். இழந்த உரிமையை எப்படிப் பெறுவது? இவரும் அவரும் கொடுக்கும் பரிசுப்பொருளா தன்னுட்சி உரிமை? இல்லை. அது போராடிப் பெறவேண்டிய ஒன்ருகும். போராட்டம், வலிமைபெற ஒற்றுமை தேவை.

உலைக்களத்தில் இரும்புத் துண்டுகள் பலவும் உருகி, ஒன்ருகி ஓடும். அதைப்போல், இந்திய மக்கள் உரிமை வேட்கைச் சூட்டிஞல் உருகி ஒன்ருக வேண்டும். எனவே, உரிமை வேட்கையை மூட்டப் பாடுகிருர் பாரதியார்

'வீர சுதந்திரம் வேண்டிநின்ருர் பின்னர்
வேறென்று கொள்வாரோ?—என்றும்
ஆரமு துண்ணுதற் காசைகொண்டார் கள்ளில்
அறிவைச் செலுத்துவாரோ?

புகழும் நல்லறமுமே யன்றியெல்லாம் வெறும்
பொய்யென்று கண்டாரேல்—அவர்
இகழுறும் ஈனத்தொண் டியற்றியும் வாழ்வதற்கு
இச்சையுற் றிருப்பாரோ?

பிறந்தவர் யாவரும் இறப்பது உறுதிஎனும்
பெற்றியை அறிந்தாரேல்—மானம்
துறந்தறம் மறந்தும்பின் உயிர்கொண்டு வாழ்வது
சுகமென்று மதிப்பாரோ?

விண்ணி லிரவிதனை விற்றுவிட் டெவரும்போய்
மின்மினி கொள்வாரோ?
கண்ணினும் இனிய சுதந்திரம் போனபின்
கைகட்டிப் பிழைப்பாரோ?

மண்ணி லின்பங்களை விரும்பிச் சுதந்திரத்தின்
மாண்பினை இழப்பாரோ?
கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால்
கைகொட்டிச் சிரியாரோ?

என்று கேட்கும்போது மனித இரத்தம் ஓடும் எவனும், 'வந்தே மாதரம் என்போம்; எங்கள் மாநிலத் தாயை வணங்குதல் என்போம்' என்று தானே முழங்குவான்?

பாரதத் தாய், மலைகளும் ஆறுகளும் மட்டுமா? வண்ண வண்ண மண்வகைகள் மட்டுமா? அடர்ந்த காடுகளும் செழித்த கழனிகளும் மட்டுமா? தாயின் மடியில் வளரும் மக்களும் சேர்ந்ததே இந்தியா?

நம் மாநிலத் தாயை வணங்கும் நாட்டுப் பற்றாளர்களைப் பார்த்து,

ஜாதி மதங்களைப் பாரோம்—உயர்
ஜன்மம் இத்தேயத்தில் எய்தினராயின்
வேதிய ராயினும் ஒன்றே—அன்றி
வேறு குலத்தின ராயினும் ஒன்றே
'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்?

என்று, கம்பீரமாக உயர்ந்து நின்று ஓங்கிக் குரல் கொடுக்கிறார்.

பங்குச் சண்டை, ஒன்றுபட வொட்டாமல் குறுக்கிடுவதைப் பாரதி அறிவார். சுதந்திர இந்தியா எப்படியிருக்கும் என்று தெளிவுபடுத்துகிறார்.

இதோ பாரதி விரும்பிய புதிய பாரதம்;

'எப்பதம் வாய்த்திடுமேனும்—நம்மில்
யாவர்க்கும் அந்த நிலை பொதுவாகும்.
முப்பது கோடியும் வாழ்வோம்—வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்'

இதை நொடியும் மறத்தல் ஆகாது.

உரிமை பெற்ற, ஒன்றிணைந்த பாரத சமுதாயம்,

'முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொது உடைமை
ஒப்பிலாத சமுதாயம்
உலகத்துக் கொரு புதுமை'

அந்தக் கனிந்த சமுதாயத்திலே,

'மனிதருணவை மனிதர் பறிக்கும்
வழக்கம் இனியுண்டோ?
மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை இனியுண்டோ?—புலனில்
வாழ்க்கை இனியுண்டோ—நம்மிலந்த
வாழ்க்கை இனியுண்டோ?'

என்று கேட்கும் பாரதிக்கு, 'இல்லை, இல்லை; இல்லவே இல்லை' என்று பதில் சொல்ல, நம்மை நாம் பக்குவப் படுத்திக் கொள்ள வேண்டும்.

பக்குவப்பட்டு விட்டால், அவரோடு சேர்ந்து,

இனியொரு விதி செய்வோம்—அதை
எந்த நாளும் காப்போம்:
தனியொருவனுக் குணவிலையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்—வாழ்க
பாரத சமுதாயம் வாழ்கவே'

என்று முழங்குவோம்.

எல்லார்க்கும் பொதுவான புதிய இந்தியாவில்,

'எல்லோரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—ஆம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்.'

எனவே,

'வாழ்க பாரத சமுதாயம் வாழ்கவே.'

சமத்துவம், சமதர்மம் இன்னும் பேச்சுப் பொருள்களாக மட்டும் நீடிப்பது சரியல்ல. இவை நடைமுறை வாழ்க்கையாக மாறவேண்டும்.

விரைந்து மாறவேண்டும்.

இந்த மாற்றம், மக்களின் பொறுப்பு; மக்களுக்கு, இந்த இலட்சியத்தைத் தெளிவாகக் காட்டி, உணர்வூட்டி, அவர்களைச் செயல்பட வைக்கும் கடமை, கற்றோர்களுக்கு உடையது.

## 3

சமத்துவம், சமதர்மம் என்னும் சொற்கள் நமக்குப் புதியன அல்ல. இந்திய விடுதலைப் போராட்டக் காலத்திலேயே அறிமுகமான சொற்கள் இவை. மேடைதோறும் இச்சொற்கள் முழங்கின.

முற்போக்கு எழுத்தாளர்கள், இச்சொற்களை மீண்டும் மீண்டும் பயன்படுத்தினார்கள். பொருளறிந்தே பயன்படுத்தினார்கள்.

படித்தவர்கள் அனைவரும் அறிஞர்கள் ஆவதில்லை. தியாகிகள் அனைவரும் திறமை சாலிகள் ஆகிவிடுவதில்லை. போராட்டத் திறமை ஆட்சித் திறமைக்கு உத்திரவாத மல்ல.

எனவே, இந்திய விடுதலைக்குப் போராடிய இலட்சக் கணக்கானவர்களில் சிலரே, விளைவுகளைப்பற்றிய தெளிந்த சிந்தனை உடையவர்களாக இருந்தார்கள்.

அவர்களில் ஒருவர் பாரதியார். அரசியல் விடுதலை எதற்காக என்று பாரதியார் கோடிட்டுக் காட்டுவதைக் காண்போம்.

'வருத்தம் அழிய வறுமை ஒழிய
வைய முழுதும் வண்மை பொழிய
வேண்டுமம்மா விடுதலை'

என்று விடுதலையின் பயனை விளக்கிப் பாடினார்.

அரசியல் விடுதலை, அதற்கே இயற்கையான பெருமை உடையது. அதை மறுக்க முடியாது; மறக்கவும் கூடாது.

யானைக்கு உரியவராக இருப்பது, பெருமைக்குரியதே. அதோடு நிற்பது சரியா? ஆற்றல்மிக்க யானையைப் பழக்கி, பெரும் பெரும் மரங்களைத் தூக்க வைத்து வேலை வாங்கவேண்டும்.

அரசியல் விடுதலை, ஆற்றல்மிக்க நிலை. கோடி யானைகளின் வலிமையை இணைத்துள்ள நிலை. அதை அடக்கி யாண்டு ஒழுங்குபடுத்தி, பற்பல நல்ல வேலைகளுக்குப் பயன் படுத்தவேண்டும். அடக்கி ஒழுங்குபடுத்தாவிட்டால், ஓரே பெருமரத்தை நான்கு யானைகள் நான்கு பக்கம் இழுக்க, மரம் முறிந்து, நான்கு துண்டுகளாகி, வீணாகும்.

அதோடும் நிற்காது. சிலவேளை யானைகளுக்குள் சண்டை மூண்டு அமர்க்களமாகலாம். அத்தகைய நிலை

உருவாகாதிருக்கும் பொருட்டு, நாட்டுப் பற்றுளர்களில் சிந்தனையாளர்கள், அரசியல் விடுதலையைக் கொண்டு என்ன செய்யவேண்டுமென்பதைக் கோடிட்டுக் காட்டினார்கள்.

அன்னியன் ஆளக்கூடாது என்பதற்காக மட்டும், இந்திய நாட்டுக்கு விடுதலையைக் கோரவில்லை.

அந்த அவமானம் துடைக்கப்படுவதோடு, பெற்ற உரிமையைக் கொண்டு, நாட்டின் நலிவைப் போக்க வேண்டும் என்பதற்காகவே பாடுபட்டார்கள்.

பல நூறாயிரம் ஆண்களும் பெண்களும் சிறைகளிலே அடைபட்டுக் கிடந்தார்கள். இன்னல் பல ஏற்றார்கள்.

நாட்டின் நலிவைப் போக்குவது எப்படி? வலுத்தவனைக் கொழுக்க வைப்பது நலிவைப் போக்குவது ஆகுமா? ஆகாது. 'இளைத்தவனுக்கு வலிமை யூட்டுவதே' நலிவைப் போக்குவதாகும்.

நம் இந்தியாவில், வாழையடி வாழையாக வந்த வறுமை, ஆங்கில ஆட்சியின் போது நடந்த அதிகப்படியான சுரண்டலால், தாங்கொணாக் கொடுமையாகி விட்டது. எனவே, பொதுமக்களிடையே பரவியிருந்த வறுமையை ஒழிப்பதே அரசியல் உரிமையால் ஆற்றப்பட வேண்டிய முதற் பணியாகும்.

இலட்சாதிபதிகள் பல இலட்சாதிபதிகள் ஆகும் போதும், நாட்டின் சராசரி தனிஆள் வருமானம் உயரும்; ஓட்டப்பரெல்லாம் தொழில் அப்பர் ஆகும்போதும், நாட்டில் தனி நபர் சராசரி வருவாய் அதிகமாகும்.

முந்தியது செல்வப் பெருக்கு; பிந்தியதே வறுமை யொழிப்பு. பிந்தியதைப் பாரதி விரும்பினார்.

அனைவருக்கும் வேலை கிடைத்து, வறுமையொழிந்து, வீடுதோறும் போதிய அளவு உண்ணும் நிலை உருவானால், வருத்தம் குறையும்.

பாரதியின் குறிக்கோள், வருத்தக் குறைப்பல்ல. பின் எது?

வருத்தம் அழித்தல். வருத்தத்தை அழிக்க் முடியும். எப்போது? அதற்கான ஊற்றுகளைத் தூர்த்து விட்டால்.

அரசியல் விடுதலையைப் பயன்படுத்தி, வறுமையை ஒழித்தால், வருத்தம் பெருக்கெடுத்தொடும் ஓர் ஊற்றுக் கால் அடைபட்டுப் போகும்.

பிறப்பால் ஏற்றத்தாழ்வு கற்பித்துக்கொண்டு, கசப் பையும் காழ்ப்பையும் தலைமுறை தோறும் பயிரிட்டுக் கொண்டு வருகிறோமே; மற்றொரு ஊற்றுக்கால்.

இதையும் அடைத்துவிட வேண்டும்; கசியாதபடி அடைத்துவிட வேண்டும்.

இன்று பிறந்த குழந்தைக்குப் பசி ஏற்படுகிறது. அதைச் சொல்லத் தெரியாததால் அழுது அறிவுறுத்து கிறது. பசியும் தாகமும் இயற்கை உணர்வுகள். சாதி உணர்வு அப்படியா? இல்லை.

தலைமுறை தோறும், மூத்தவர்கள், பிஞ்சு உள்ளங் களில், ஏற்றி ஏற்றி வளர்த்து வரும் நஞ்சே, சாதி உணர்வு. இதற்குப் பாரதியார் கொடுக்கும் நச்சு முறிவு மாத்திரை இதோ:

அவர் வீட்டில் பூனை வளருதாம். அதன் நிறம் வெள்ளையாம். அது குட்டியும் போட்டதாம். ஒன்றல்ல;

சில குட்டிகள் போட்டது. தாய்ப் பூனையின் நிறத்ிலா குட்டிகள் பிறந்தன? இல்லை. ஒவ்வொன்றும் ஒவ்வோர் நிறம்.

ஒன்றைப் பார்த்தால் சாம்பல் நிறமாயிருந்தது. அடுத்ததோ கருஞ்சாந்தால் உருவானதுபோல் தோன் றிற்று. அடுத்ததற்கோ பாம்பின் நிறம். கடைக் குட்டி மட்டுமே பாலின் நிறத்திலிருந்தது.

ஒவ்வொன்றும் ஒவ்வொர் இனமா? இவற்றில் எது தாழ்ந்த நிறம்? எது உயர்ந்த நிறம்?

நான்கும் ஓர் தாயின் குட்டிகள் நான்கும் ஒரே தரத்தவை. அவற்றிடை ஏற்றத்தாழ்வு பாராட்டுவதில்லை.

அதைப்போல், மானிடர்களின் நிறவேறுபாட்டைக் காட்டி, அவர்களிடையே வேற்றுமை காட்டவேண்டாம். சாதி ஏற்றத்தாழ்வு பொய்யானது.

'எல்லோரும் ஒன்று என்பது நடைமுறையானல், இன்பம் பெருக்கெடுத்து ஓடும். ஆகவே சாதி வேற்று மைகளை உடைத்தெறிவீர் என்று, ஆணையிடுகிறுர் புரட்சிக் கவி சுப்பிரமணிய பாரதியார்.

"வண்ணங்கள் வேற்றுமைப்பட்டால்—அதில்
மானுடர் வேற்றுமை யில்லை
எண்ணங்கள் செய்கைகளெல்லாம்—இங்கு
யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்!

"நிகரென்று கொட்டுமுரசே!—இந்த
நீணிலம் வாழ்பவரெல்லாம்;
தகரென்று கொட்டுமுரசே!—பொய்ம்மைச்
சாதி வகுப்பினை யெல்லாம்.

''அன்பென்று கொட்டு முரசே—மக்கள்
அத்தனை பேரும் நிகராம்
இன்பங்கள் யாவும் பெருகும்—இங்கு
யாவரும் ஒன்றென்று கொண்டால்''

என்று, முரசு கொட்டுகிறார், உயிர்க் கவிஞர் பாரதியார்.

பாரதியாரோடு சேர்ந்து, நாமும் அதே முரசு கொட்ட வேண்டாமா? எல்லாரும் ஒன்றென்று முரசு கொட்டுவதில் தயக்கம் ஏன்?

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக, அப்படி அப்படிப் படிந்துபோனதைக் கலைத்தால், பிழைப்புக் கெட்டுவிடுமோ என்றே மக்கள் அஞ்சி ஒதுங்குகிறார்கள். ஊருக்கு நல்லது சொல்ல வந்த வீரக்கவிஞர் பாரதியார், அத்தகையோரைப் பார்த்து, அறை கூவி அழைக்கிறார்:

உடன் பிறந்தவர்களைப்போல—இவ்
உலகினில் மனிதரெல்லாரும்
திடங்கொண்டவர் மெலிந்தோரை—இங்குத்
தின்று பிழைத்திட லாமோ?''

என்று இடித்துக் கேட்கிறார். இதைப்பற்றிச் சிந்திக்க வேண்டாமா?

புலி, ஆட்டை மாட்டை அடித்து விழுங்குதல்போல, மனிதர்களிலும் கையிலோ, அறிவிலோ வலுத்தவர்கள் மற்றவர்களை அழித்து வாழ்வது சரியா? விலங்கு வாழ்க்கை வாழப் பிறந்தோமா? மனித வாழ்க்கை வாழப் பிறந்தோமா?

'தன்னை மிஞ்சியதன்றோ தருமம்' என்று கேட்கத் தோன்றும். தான் உயிர் வாழத் தேவையானவற்றை முதலில் தேடிக்கொள்ளவேண்டும் என்னும் முனைப்பிலும், போட்டியிலும், சிக்கிச் சீரழிகிறது மனித இனம்.

எல்லோர்க்கும் உணவு இருக்காது என்னும் அச்சமே, மேற்கூறிய முனைப்பிற்கும், போட்டிக்கும், தனக்கு என்னும் தன்னலப் பாகுப்பாட்டிற்கும் வேராகும்.

எனவே, நம்மைப் பார்த்து, தெரிந்த உண்மையை முரசு கொட்டித் தெளிவு படுத்துகிறார்.

'வயிற்றுக்குச் சோறுண்டு கண்டீர்—இங்கு
வாழும் மனிதரெல்லாரும்;
பயிற்றி உழுதுண்டு வாழ்வீர்—பிறர்
பங்கைத் திருடுதல் வேண்டாம்''

மகாகவி பாரதியார், கற்பனையாக, மிகைப்படச் சொல்லுவதல்ல மேற்படி கருத்து; இது உண்மையே!

வளம் பல இருந்தும், விளைவு பல கனிந்தும், நம்மிலே பலர், பஞ்சத்தில் சிக்கித் தவிப்பது, தவறான வாழ்க்கை முறையின் தீய விளைவாகும்.

கீழ், மேல் படிகள், இக்கால வேளாண்மைக்கோ, தொழில்களுக்கோ தேவையில்லை. ஆகவே, சாதி அமைப்பைப் போற்றிக் காக்கத் தேவை இல்லை.

இக் கருத்தை அறிவு அடிப்படையில் ஏற்றுக்கொண்டுள்ள முதியவர்களோ ஏராளம். ஆனால், சாதிகளின் ஒருமைப்பாட்டு முயற்சியோ, வைக்கோர்ப்போரில் ஊசி தேடும் வேலையாகவே இருக்கிறது.

புதிய கருத்துக்கள் பெரியவர்களிடம் புகுந்து வேலை செய்து பலன் கொடுப்பதைவிட அதிக பலனை, சிறுவர்களிடமும் இளைஞர்களிடமும் கலந்துவிடும்போது கொடுக்கும். இந்த வாழ்வியலை அறிந்த பாரதியார், பாப்பாவைப் பிடிக்கிறார்.

வளரும் பாப்பாவிற்கு, வாழும் முறையின் பல கோடுகளையும் எடுத்துக்காட்டுகிறார். எளிய சொற்களால், புரியும்

பாட்டால், பெரிய கருத்துக்களை அவர்களுக்கு வழங்கு கிறார், அமிழ்தாம் கருத்துக்கள் பாடே.

''சாதிகள் இல்லையடி பாப்பா—குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி உயர்ந்தமதி கல்வி— அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்''

என்று அருமையாகப் பாடுகிறார் அமரகவி பாரதி.

'கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு' என்பது, கல்லாதவரும் அறிந்த ஒன்றே.

எல்லாச் சாதிகளிலும் கூர்த்த மதியினர் இருப்பதும், கோடி கொடுத்தாலும் நீதி தவறாத சான்றோர் நோன்பிருப் பதும் நாடறிந்த உண்மைகளாகும்.

ஊருக்கு ஊர் ஒருவரைக் காட்டி, 'இவர் உத்தமர்' என்று பெருமிதம் கொள்வதும்,'இவர் அறிவாளி இவரைக் கேட்டுத் தெளிவு பெறுவோம்' என்பதும் நாம் அறிந்ததே.

அத்தகைய வழிகாட்டிகள் சிலரே ஆயினும், அவர்கள் இரண்டொரு சாதிப் பட்டிகளிலேயே அடைபட்டுக் கிடக்க வில்லை.

இந்த உண்மை யாருக்குத் தெரியாது.

## 4

நம் பாரத நாடு நேற்று முளைத்த நாடல்ல; பழமை யான நாடு. எவ்வளவு பழமையான நாடு?

தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களும், பாரதத்தின் தோற்றத்தைத் திட்டவட்டமாகக் கூற இயலவில்லை.

அவ்வளவு ஆழமாக மிக ஆழமாகத் தொன்மையில் புதைந்து உள்ளது.

இவ்வளவு மூத்தவள் என்று கூறமுடியாத அளவு வயதேறிய நம் தாய், தள்ளாமையில் தடுமாறுகிறாளா? இல்லை.

இளமையோடு வாழ்கிறாள் நம் பாரதத் தாய்.

அப்படியா? என்று மலைக்க வேண்டாம்.

இளமையின் அடையாளம் என்ன?

புத்தம் புதிய சிந்தனைகள் ஊறுவது இளமைத் துடிப்பின் அடையாளம்.

நல்ல புதிய சிந்தனைகளைப் பிறரிடமிருந்து ஏற்றுக் கொள்ளுவது அறிவின் இளமைக்கு அடையாளம்.

இவ்வடையாளங்களைக் கண்டார், பாரதியார்.

நாம், எங்கிருந்தோ ஓண்ட வந்தவர்கள் அல்லர். நம் தந்தையும் தாயும் இனிய இல்லறம் நடத்தி மகிழ்ந்திருந்தது இப்பொன்னாட்டில்.

அவர்கள் மட்டுமா?

அவர்கள் மூதாதையரும் வாழ்வாங்கு வாழ்ந்தது நம் பாரதத்தில்தான்,

முன்னோர் வாழ்ந்தது சில ஆண்டுகளா? இல்லை. பல்லாண்டுகளா? அதற்கு மேலும், ஆயிரம் ஆண்டுகளாக, நாம் இந்நாட்டில் வாழ்ந்து வருகிறோம்.

வாழையடி வாழையாக, இத்தனை நெடுங்காலம் நாம் வாழ்ந்து வரும் பாரதம் நம் தாய்நாடு.

தாயும் தந்தையும் மகிழ்ந்து குலாவினார்களே! அதோடு நின்றார்களா? இல்லை.

சிந்தித்தார்கள். வாழ்க்கையின் பல்வேறு கூறுகளைப் பற்றிச் சிந்தித்தார்கள். வெவ்வேறு கோணங்களில் இருந்து சிந்தித்தார்கள்.

கணவனுடைய சிந்தனைகள் அத்தனைக்கும் தலையாட்டும் மனைவியாக நம் தாய்க்குலம் முற்காலத்தில் இல்லை.

வாழ்க்கைத் துணைவியின் கருத்துக்கெல்லாம் தலையசைக்கும், 'பூம் பூம்' மாடாக நம் தந்தையர்கள் இல்லை.

அன்பு இல்லறம் நடத்தியபோது சிந்தனைப் போட்டி இருந்தது; அது மதித்துப் போற்றப்பட்டது.

எனவே, ஆயிரம் எண்ணங்கள் வளர்ந்தன; வளமூட்டின; வாழ்வளித்தன.

நீண்ட வாழைக்குலையில், அடுக்கடுக்காக அமைந்து அழைக்கும் பழங்களைப்போல, நம் குடும்பங்கள் விளங்கின. இதை உணர்ந்த பாரதியார்,

'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே—அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே—அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே'

என்று பாடி, நமக்கும் நாட்டுப்பற்றை ஊட்டுகிறார்.

இத்தகைய சிறந்த நாட்டை,

'வந்தனைகூறி மனத்தில் இருத்திஎன்
வாயுற வாழ்த்தேனே—இதை
வந்தே மாதரம், வந்தே மாதரம்
என்று வணங்கேனோ'

என்று தேசியகவி உருகினார். இந்த உருக்கமான பாட்டை மேடை தோறும் பாடி, பல நூறாயிரம்வரை நாட்டுப் பற்றாளராக்கினார்கள், மூத்த தலைமுறையினர்.

குடும்பந்தோறும் சிந்தனைப் போட்டி தழைக்கவும், சீரான எண்ணங்கள் மணம் வீசவும் வேண்டாமா? இவை தானே சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் சிறப்புச் செய்வன.

நாட்டு மக்கள் அனைவரையும், ஒரே அச்சில் வார்த்தெடுக்கும் வீண்முயற்சியைக் கைவிட்டுவிட்டு, சிந்தனைகளைத் தூண்டவும், அவற்றை ஆக்க வழிப்படுத்தவும் நாம் முயல்வோமாக.

பாரதி வாழ்ந்த காலத்தில், இந்திய மக்கள் எண்ணிக்கை முப்பது கோடி.

அவர்கள் பேசிய மொழி ஒன்றா? இல்லை; பல.

ஆயினும் சிந்தனை ஒன்றுடையாள். என்ன சிந்தனை? இந்தியர் என்ற சிந்தனை.

அக்காலத்தில், வல்லான் வகுத்ததே வாய்க்கால்.

அக்காலத்தியவர்களில் பெரும்பாலோர், இந்தியர் என்னும் உணர்விலே ஊறியிருந்தார்கள்.

எனவே, உரிமையோடும் பெருமையோடும் பாரதியார்

'முப்பது கோடி முகமுடையாள் உயிர்
மொய்ம்புற ஒன்றுடையாள்—இவள்
செப்புமொழி பதினெட்டுடையாள் எனிற்
சிந்தனை ஒன்றுடையாள்'

என்று, கம்பீரமாகப் பாட முடிந்தது.

இன்றே, இது உள்ளத்தின் படப் பிடிப்பு என்பதை விட, அடையவேண்டிய இலட்சியத்தின் காட்சி என்பதே உண்மையாகும்.

அகக்கண்முன் தோன்றும் இலட்சியம்—இணைந்த பாரதம்-ஒரே சிந்தனையூறும் பாரதம்—நம் தலைமுறையிலே கைகூடவேண்டும். அதற்காக, பாரதியாரோடு சேர்ந்து நாமும்,

'எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நலலறிவு வேண்டும்
பண்ணி பாவ மெல்லாம்
பரிதிமுன் பனியே போல
நண்ணிய நின்முன் இங்கு
நசித்திடல் வேண்டும் அன்னாய்'

என்று, மனம் உருகி வேண்டுவோமா?

வழிபாட்டால் விளைவதல்ல, அறுபதுகோடி மக்களுக்கும் வாழ்வளிக்கும் புதுநிலை; செயற்பாட்டால் விளையும்; தொடர்ந்த செயற்பாட்டால் விளையும் இது.

செயலுக்கு வேர், எண்ணுதல். நாம் எண்ணுவதெல்லாம் நல்லனவாக இருத்தல் வேண்டும்.

எனக்கு மட்டும் நல்லதாக இருந்து, பிறருக்கு பயனற்றதாகவோ தீமையாகவோ இருப்பது, நல்ல எண்ணமாகாது.

'நாடெல்லாம் வாழக் கேடொன்றுமில்லை' என்பது நம் உயர்ந்த பண்பாட்டின் நறுமணம்.

இதையே, 'முப்பது கோடியும் வாழ்வோம்' என்ற வரியில் பாரதி வழங்குகிறார். இதை நாம் சிக்கெனப் பிடித்துக் கொள்ளவேண்டும்.

எல்லோரும் வாழும் சூழ்நிலையை உருவாக்காவிட்டால், எல்லோர்க்கும் நாட்டின்பால் எப்படிப் பிடிப்பு ஏற்படும்? நாற்பதுகோடி இந்திய மக்கள்.

'கஞ்சி குடிப்பதற்கிலார்—அதன்
காரணம் இவையென்னும் அறிவுமிலார்'

என்னும் நிலையில், இன்றும் அவதிப்படுவது யாருக்கும் பெருமையில்லை. நம் பாரத நாட்டுக்கும் நல்லதல்ல.

இந்நிலையை மாற்றியாக வேண்டும்; விரைவில் மாற்றியாக வேண்டும்.

இத்தகைய நல்லெண்ணத்தில் ஊன்றி, சிந்தித்தால், தெளிந்த நல்லறிவு பிறக்கும். அந்த அறிவு எதைக் காட்டும்?

இந்திய நிலமனைத்தும், அனைவருக்கும் சொந்தம்.

கங்கையும், காவிரியும், பிரமபுத்திராவும், தாமிரபரணியும், கோதாவரியும், கிருஷ்ணையும் எல்லோர்க்கும் உடைமை.

நாட்டின் கனிவளங்கள் எங்கிருந்தாலும், அங்கே இருப்பவர்களுக்கு மட்டுமல்லாது, அனைவருக்கும் சொத்தாகும். இத்தெளிவினைப் பெற்றுச் செயல்படவேண்டும். அச்செயல் மின்னல் வேகத்தில் வெற்றி கொடுக்காது.

மன்னர்கள் காலமாயின், அவர் மனத்தில் நல்லது ஊன்றிவிட்டால், விரைந்து நாட்டுக்கே நல்லதாக விளைந்துவிடும். அக் காலம் மலையேறிவிட்டது.

நாமோ மக்கள் ஆட்சிக் காலத்தில் குடியிருக்கிறோம்.

இன்று மக்கள் முடிவே எல்லாமும் ஆகும்.

அவர்களுக்கு எல்லோரும் வாழவேண்டும், ஒன்றாக வாழவேண்டுமென்னும் உணர்வை ஊட்டவேண்டும்.

அதை அடைவதற்கான மாற்றுத்திட்டங்களை, எடை போட்டு முடிவு செய்யும் திறமையைக் கொடுக்கவேண்டும்.

அத் திறமையைப் பெறுவது எப்படி?

கேள்வி ஞானம், ஓர்வழி; தானே படித்தல் மற்ருேர் வழி.

இந்த இரண்டும் வழியும் தேவை.

இரண்டும் சேரும்போது மின்னும் நற்சிந்தனையே, குடியாட்சிக்கு உறுதியான கடைக்கால்.

நம் நாட்டுப் பொதுமக்களுக்கு இரண்டும் கிடைப்ப தில்லை.

நம் இந்திய விடுதலைக்குப் போராடிக்கொண்டிருந்த காலகட்டத்தில், தேசிய மேடைகளில், பெரும்பாலும் கொள்கை விளக்கங்கள் முழங்கின. சிற்சிலபோதே தூற்றல் பதர்கள் பறந்தன.

மற்ற மேடைகளிலும், அதே அளவில் இல்லாவிட்டா லும், பெருமளவு மாற்றுக் கொள்கைகள், திட்டங்கள் எடுத்துரைக்கப்பட்டன.

விடுதலை பெற்றபின் கேட்பதென்ன? கொள்கை விளக் கங்களா? நிந்தனை மழைகளா?

ஆண்டுக்கு ஆண்டு கொள்கை விளக்கங்கள் குறைந் தன. நிந்தனை மழைகள் வலுத்தன.

முப்பது ஆண்டுகளாகத் திட்டல் தூறல்களிலேயே, நிந்தனை மழைகளிலேயே நனைந்து வருகிறது, நம் சமுதாயம்.

எனவே, பொதுக்கூட்டங்களின் வழியாகப் பெற்று வந்த விளக்கம், அறிவுத் தெளிவு, அருகிவிட்டது.

தானே படித்துத் தெரிந்துகொள்ளும் வாய்ப்பாகிலும் பெருகிற்ரு?

இல்லேயே!

வெள்ளேயன் ஆண்டபோது, இந்தியர்களில் நூற்றுக்கு எண்பது பேர்கள், எழுதப் படிக்கத் தெரியாத தற்குறிகள்.

இந்தக் கொடுமைக்கான பழியை வெள்ளேயர்மேல் சுமத்திவிட்டுத் தப்ப முயன்ருேம். தப்பவிடவில்லே, காந்தியடிகள்.

'இந்தியர்களில் கோடிக்கணக்கானவர்கள், தத்தம் பெயர்களேக்கூட எழுதத் தெரியாதிருப்பது, இந்தியாவிற்கு அவமானம்' என்று சுட்டிக் காட்டினுர்.

படித்தவர்களாகிய நாம், அதைத் துடைக்காதிருப்பது கொடிய பாவமென்று, இடித்துரைத்தார்.

முதியோர் எழுத்தறிவித்தலே, தமது பதினுன்கு ஆக்கத் திட்டங்களில் சேர்த்தார். இதை நிறைவேற்றச் சொன்னுர்.

காந்தியடிகளே, சிலவேளே வழிபடுகிருேமே அன்றி, பின்பற்றுகிருேமோ?

விடுதலே பெற்று முப்பதாண்டுகளாகியும், நம்மவர்கள் நூற்றுக்கு எழுபது பேர் தற்குறிகளாகவே இருப்பது, அவமானமல்லவா?

இதற்கு ஒரு வழிகாண வேண்டாமா?

முதியோர் எழுத்தறிவு என்ருல் என்ன?

முதியவர்கள், நாள்தோறும் வழங்கும் முந்நூறு நானூறு சொற்களே, எழுதவும் படிக்கவும் கற்றுக் கொள்வதாகும்.

வீட்டுக் கணக்கை எழுதும் அளவு பயிற்சி பெறுவ நாகும்.

இது எவரெஸ்டை எட்டிப் பிடிப்பதைப் போன்ற ஆபத்தான பெரு முயற்சியல்ல. வரப்பைத் தாண்டுவது போன்ற எளிய முயற்சியே.

இதைத் தொடங்க வேண்டும். அடுத்துவரும் கலை மகள் விழாவிலிருந்து தொடங்கலாமா? பாரதி சொல் வதைக் கேட்போம்.

'இன்னறுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதி னாயிரம் நாட்டல்
பின்ன ருள்ள தருமங்க ளியாவும்
பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்,
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
அங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்

என்று சுட்டிக் காட்டுகிருர். செய்யவேண்டியதைக் கோடிட்டுக் காட்டுவதற்கு முன்பே,

'மந்திரத்தை முணுமுணுத் தேட்டை
வரிசையாக அடுக்கி அதன்மேல்
சந்தனத்தை மலரை இடுவோர்
சாத்திரம் இவள் பூசனை யன்ரும்'

என்கிருர். பின் எது உண்மையான கலைமகள் வழிபாடு? பாரதியே சொல்லட்டும்.

வீடுதோறும் கலையின் விளக்கம்
வீதிதோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலும் உள்ளன வூர்கள்
நகர்கள் எங்கும் பலபல பள்ளி

தேடு கல்வி யிலாததோ ரூரைத்
தீயினுக் கிரை யாக மடுத்தல்
கேடு தீர்க்கும் அமுதமென் அன்னை
கேண்மை கொள்ள வழியிவை கண்டீர்'

என்கிறார், மகாகவி சுப்ரமணிய பாரதியார்.

மிரள வேண்டாம். தேசிய கவி பாரதியார் இந்து; சமணரல்லர்; நாத்திகரல்லர் என்பதை நினைவில் கொள்வோம்.

கல்லாமையின் மேல் பொங்கியெழும் சினத்தால், கல்லாத ஊருக்குக் கனல் மூட்டச் சொல்லுவதைக் கவனிப்போம்.

கல்லாமைக் கொடுமையை ஒழிப்பதே பாரதியின் குறிக்கோள் என்பதை உணர்வோம்; உணர்ந்து செயல்படுவோம்.

காந்தி வழியைப் பின்பற்றி, படித்தவர் அனைவரும் எழுத்தறிவிப்பு வேள்வியில் குதிப்போம்; இன்றே குதிப்போம்.

எந்த ஊரையும் தீயிட்டுக் கொளுத்தத் தேவையில்லாத நன்னிலையை உருவாக்குவோம்.

## 5

சுற்றிப் பார்க்கிறோம்; எட்டுத் திக்கிலும் கெளவும் இருள்.

மருண்டு அண்ணாந்து பார்க்கிறோம். அங்கேயும் ஒளித்துளிகள் இல்லை. கருமேகங்கள் படல்படலாக மூடிக் கொண்டிருக்கின்றன.

இருள் சூழ்ந்த அந்த விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையே உள்ள, ஒரே தொடர்பு மழையே; அடைமழையே!

இத்தகைய இயற்கைச் சூழலில், பலரும் முடங்கிக் கிடப்பார்கள்; சோர்ந்து கிடப்பார்கள்; அஞ்சிக் கிடப்பார் கள்; தாழ்ந்து கிடப்பார்கள்; இதுவே, கோடி கோடி மக்களின் இயல்பு.

கோடி கோடி சாதாரண மனிதர்களுக்கு நடுவில், எங்கோ ஒருவர் தலை நீட்டுவார்; தொலை நோக்கோடு வருவார்; துணிவோடும் தெம்போடும் வருவார்.

'தீமையெல்லாம் அழிந்துபோம்; திரும்பிவாரா' என்னும், இயற்கை மருமத்தை நன்கு உணர்ந்தவர் அவர்.

அத் தெளிவு, அவருக்கு அசையாத நம்பிக்கையை ஊட்டும்.

நல்ல எதிர்காலத்தை அவர் உணர்வார். மற்றவர்கள் உணராத வேளையிலும், அவர் தெளிவாக உணர்வார்.

அத்தகையோர், பேச்சிலும் எழுத்திலும் பாட்டிலும் கருத்துக்களோடு நம்பிக்கையும் பெறலாம். இசையோடு திசையும் தெரியும்.

கோடியில் ஒரு வீரராகப் பாரதியார் விளங்குகிறார். உயிரூட்டும், திசை காட்டும், முடுக்கிவிடும் பாடல்கள் பலவற்றைப் பாரதியார் பாடியுள்ளார்.

அரசியல் அடிமை வாழ்வு. அதைப்பற்றி வெட்கப் படாத பொது மக்கள்.

இழந்த உரிமையைத் திரும்பப் பெறும் துடிப்பிலும், சமுதாயத்தில் உயர்ந்தவர்கள் என்னும் நினைப்பைத் தியாகஞ் செய்ய முன்வராத தேச பக்தர்கள்.

கைதட்டலுக்கே போட்டி போடும் பொதுத் தொண்டர்கள், அடக்குமுறை அடைமழை ஆகியவற்றிற்கு இடையே வாழ்ந்தார், பாரதியார்.

சோர்வூட்டும் இச் சூழ்நிலையிலும் சோர்வுபடவில்லை, இவர்.

தனி வாழ்க்கையில் வறுமை வாட்டினாலும், சமுதாயச் சூழல் இருண்டு கிடந்தாலும், மனமுடையாத சுப்பிரமணிய பாரதி, தொலைநோக்கோடு, தன் நாட்டை, இந்தியாவைப் பார்க்கிறார்.

அன்று, இந்திய மக்கள் அடிமையில், மடிமையில், மிடியில் மூழ்கிக் கிடந்தாலும், அதுவே நிலையானது அல்ல என்னும் தெளிவு பெற்றார்.

காலம் மாறும்; மக்களும் மாறுவார்கள்; இந்தியர்களுக்கும் விடுதலை உணர்வு கொப்புளிக்கும்; அப்போது நாட்டுரிமை கிட்டும், இது காலத்தின் கட்டளை என்னும் நம்பிக்கை பிறக்கிறது,

எனவே, வெள்ளையன் ஆளும் போதே, 'வெள்ளையனே வெளியேறு' என்று வீரமுழக்கம் கேட்பதற்குப் பல்லாண்டு முன்பே, தேசிய கவி பாரதியார், ஆனந்தப் பள்ளு பாடுகிறார்.

மிதந்து வரும் கருமேகங்களையும் கிழித்துக் கொண்டு வந்து, ஒளி காட்டும் ஞாயிறைப் போன்று, மகாகவி பாரதியாரும்,

> ஆடுவோமே—பள்ளுப்
> பாடுவோமே
> ஆனந்த சுதந்திரம்
> அடைந்துவிட் டோமென்று
> ஆடுவோமே—பள்ளுப்
> பாடுவோமே'

என்று சுதந்திரப் பள்ளுப் பாடினார். நாட்டுப் பற்றுளர் களின் தியாகம், அதை மெய்யாக்கிவிட்டது. விடுதலையும் நம் கைக்கு வந்தது.

ஆங்கிலேயனிடம் இருந்து விடுதலை பெற்ற பிறகு, தன்னாட்சி இந்தியா எப்படி இருக்கவேண்டும் என்பதையும் கோடிட்டுக் காட்டுகிறார் பாரதியார்.

விடுதலையென்பது, வெறும் ஆட்சி மாற்றத்தோடு நிற்கக்கூடாது.

வெள்ளையன் ஆணையிட்ட இடங்களில், நம்மவர் அமர்ந்து ஆணையிடுவதை மட்டுமே, விடுதலையாகக் கருத முடியுமா? முடியாது.

மக்கள் அனைவருக்கும் உரிமை வேண்டும்; அனைவரும் சமத்துவம் பெறவேண்டும்.

குறைகளை எடுத்துச்சொல்ல உரிமை; அவற்றைச் சுட்டிக்காட்டி எழுத உரிமை தேவை.

மாற்றுத் திட்டங்களைச் சொல்லவும் உரிமை தேவை.

'நாமிருக்கும் நாடு நமது என்பதறிந்தோம்—இது
நமக்கே உரிமையாய் என்பதறிந்தோம்—இந்த
பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம்'

என்று ஓர் நாள் இந்தியர்கள் முடிவு செய்வார்கள் என் பதில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்த பாரதியார், அந்நாள்,

'பரங்கியைத் துரையென்ற காலமும் போச்சே'

என்று எக்காளமிட்டார். அந்நிலையில் யாரும் பிச்சை யெடுத்துப் பிழைப்போரைக் கும்பிட்டு நிற்கலாமா? ஆகாது. எனவே,

—பிச்சை
ஏற்போரைப் பணிகின்ற காலமும் போச்சே'

என்று மகிழ்ந்து பாடுகிறார். தன்னாட்டவர்க்கும் பிறநாட்டவர்க்கும் அடிமைப்பட்டு வாழாத, சுதந்தர உணர்வுபெற்ற மக்கள் செறிந்த இந்தியாவில்,

'எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு—நாம்
எல்லோரும் சமமென்பது உறுதியாச்சு'

என்று, அந்தச் சுதந்தரக்கவி பாரதி பாடினார். இதை நடைமுறை வாழ்க்கையாக்குவது நம்முடைய முன் உரிமைக் கடமையாகும்.

அந்தக் கடமையை நிறைவேற்ற முழுமனதோடு ஈடுபட்டால், நாமும் பாரதியாரோடு சேர்ந்து,

'சங்கு கொண்டே வெற்றி ஊதுவோமே—இதைத்
தரணிக் கெல்லாமெடுத்து ஓதுவோமே'

என்று பாட உரிமை பெற்றவர்கள் ஆவோம். பாரதியார். தம் மனக் கண்ணால் கண்ட தன்னாட்சி இந்தியாவில்,

'எல்லோரும் ஒன்றென்னும் காலம் வந்ததே—பொய்யும்
ஏமாற்றம் தொலைகின்ற காலம் வந்ததே—கெட்ட
நயவஞ்சக் காரருக்கு நாசம் வந்ததே'

என்று துள்ளிக் குதிக்கிறார்.

அரை நூற்றாண்டு கழிந்த பிறகும், முப்பதாண்டு தன்னாட்சி உரிமையைப் பயன்படுத்திய பிறகும், இக்குறிக் கோளை நாம் அடையவில்லையே! இதற்கு நெடுந்தொலைவில் அல்லவா நிற்கிறோம்?

அரசியல் விடுதலைக்காகத் தியாகம் செய்தவர்களாவது நாட்டுக்குரிய கடமையை ஓரளவு நிறைவேற்றி விட்டோம், நம் பங்கைச் செலுத்திவிட்டோம், எனவே ஒதுங்கிவிட்டோம் என்று நிறைவு கொள்ளலாம்.

அரசியல் விடுதலைக்குப் போராடும் வாய்ப்பைப் பெறுதவர்கள், இனித்தானே நாட்டுக்குத் தொண்டாற்ற வேண்டும்.

தங்கள் பங்காக, சமுதாய சமத்துவத்திற்குப் போராடும் பொறுப்பு, பெரும்பாலோரின் தனிப்பொறுப்பு ஆகும்.

இப்பொறுப்பை நிறைவேற்றுவதில் முனைப்புக் காட்டு வதே, பாரதியைப் போற்றும் சிறந்த வழியாகும்.

அன்னிய ஆட்சியிலிருந்து விடுபட்ட, இணைந்த இந்தியாவில்,

'ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை ஜாதியில்
இழிவுகொண்ட மனிதரென்பது இந்தியாவில் இல்லையே;
வாழி கல்வி செல்வம் எய்தி மனமகிழ்ந்து கூடியே
மனிதர் யாரும் ஒருநிகர் சமானமாக வாழ்வமே'

என்று பாரதி கம்பீரமாக முழங்கினார்.

இது ஒரு தனி மனிதரின் தனிப்பட்ட ஆசையல்ல. படம் போட்டு எடுக்கப்பட்ட உண்மையான வீரரின், உத்தமமான நாட்டுப் பங்காளரின், தூய்மையான தியாகி யின், பொதுக்கட்டளை; அன்புக்கட்டளை.

அதை நிறைவேற்றி வைத்த பிறகே, நாம் ஓயலாம். அதுவரை, பாரதியே பாடியபடி,

'ஓயுதல் செய்யோம்; தலை சாயுதல் செய்யோம்' என்று நாம் சூளுரைத்துக் கொள்ளவேண்டும்.

அரசு உரிமை பெற்று, முப்பதாண்டுகள் கழிந்த பிறகும், நம்மிடையே உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்னும் உணர்வினை விட்டு வைக்கலாமா?

தாழ்த்தப்பட்டவர்கள், எத்தனை காலத்திற்கு ஒதுக்கப்பட்டவர்களாவும், ஒடுக்கப்பட்டவர்களாகவும் நீடிப்பது?

இத்தீமைகள் தொலையட்டும்; விரைந்து முறியட்டும்; சமத்துவம் மலரட்டும்; நொடியில் மலரட்டும்.

மனிதன் காலத்தின் கருவிலே உருவாகிறான். அதன் கலப்பு மிக்க இயல்புகளோடு தோன்றுகிறான்.

அவ்வியல்புகளில் நல்லனவும் இருக்கும்; தீயனவும் ஒட்டியிருக்கும். தீயதைக் கோதி எறியவேண்டும்.

நம் சமுதாய உணர்வுகளில் வழிவந்த, காலத்துக்கு ஒவ்வாத, தேவையற்ற உணர்வுகள் சேர்ந்துள்ளன.

பொய்ம்மை சேர் பழமை, மக்களைச் சாதி அடிப்படையில் பிரித்து வைக்கும் கொடுமை, ஒழிய வேண்டும்; விரைவில் விலக வேண்டும்.

எனவே பாரதியாரோடு சேர்ந்து நாமும்,

சென்றுபோன பொய்யெலாம் மெய்யாகச்
சிந்தைகொண்டு போற்றுவாய் போ! போ! போ!
சாதி நூறு சொல்லுவாய் போ! போ! போ!
நீதி நூறு சொல்லுவாய்; காசொன்று
நீட்டினால் வணங்குவாய் போ! போ! போ!
தீது செய்வ தஞ்சிலாய்; நின்முனே
தீமை நிற்கில் ஓடுவாய் போ! போ! போ!

என்று முழங்கவேண்டும். அந்தத் துணிச்சலைப் பெறுவோமா?

மாலைப் போதில் இருக்கும் இந்தியர்கள் மட்டும், சமத்துவாதிகளாக இருந்தால் போதாது.

நம்மால் விளையக்கூடிய பயன் சிறிதாகவே இருக்கும்; வருங்காலத்தை விருப்பப்படி செதுக்கும் வாய்ப்பு யாருக்கு அதிகம்? இளைஞர்களுக்கே,

எனவே, இளைஞர்களை சமத்துவ நெடுஞ்சாலையில் முடுக்கிவிடுவது நல்லது. அதற்காக, நாமும் பாரதியாரின் வெண்கலக் குரலில்,

ஒளிபடைத்த கண்ணினாய் வாவாவா!
உறுதிகொண்ட நெஞ்சினாய் வாவாவா!
தெளிவு பெற்ற மதியினாய் வாவாவா!
சிறுமை கண்டு பொங்குவாய் வாவாவா!
எளிமை கண்டு இரங்குவாய் வாவாவா!
ஏறுபோல் நடையினாய் வாவாவா!
கற்றலொன்று பொய்க்கிலாய் வாவாவா!
கருதிய தியற்றுவாய் வாவாவா!
ஒற்றுமைக் குளாய்யவே நாடெல்லாம்
ஒரு பெருஞ் செயல் செய்வாய் வாவாவா!

என்று, இளைய பாரதத்தைக் கைநீட்டி வரவேற்று அழைப்போமாக.

## 6

கூச்சல் கேட்கிறது. முயல் பயந்து ஓடுகிறது; பதுங்க முயல்கிறது. பாம்போ பொந்துக்குள் ஒளிந்துகொள்கிறது.

அந்நிலையில் அரிமா என் செய்யும்? கீழ்க்கிளையில் ஓய்வெடுக்கும் அரிமா பதறாது; உயர ஓடாது. மாறாக, சிலிர்த்து எழும்; இறங்கி வரும்: நோட்டம் பார்க்கும்; வீரநடை போட்டுச் சுற்றிவரும். ஆம்; வனவேந்தனாயிற்றே! காட்டைக் கண்காணிக்க முனையாது ஒதுங்குமா? ஒதுங்காது.

நாட்டில் ஏதுமறியா முயல்களும் உண்டு; பதுங்கிப் பதுங்கி மெல்லக் கடித்துக்கொல்லும் பாம்பனையோரும் இருப்பார். அடிமை விலங்கை ஒடித்த உரிமை பாரதத்தில் அதே நிலை தொடரலாமா? ஆகாது. இளைய பாரதம் அப்படி இருக்கலாமா? கூடாது.

சமதர்மமே, எல்லோர்க்கும் வாழ்வளிக்கும் என்னும் தெளிவும், அதற்குக் குறுக்கே நிற்கும் சிறுமைகளைக் கண்டு பொங்கும் இயல்பும் பெற்றுவிட்ட இளையபாரதத்தினர் எப்படி யிருக்கவேண்டும்? பாரதியாரின் வரிகளே சொல்லட்டும்.

> 'இன்னல் வந்துற்றிடும் போததற் கஞ்சோம்
> ஏழையராகி இனி மண்ணில் துஞ்சோம்
> தன்னலம் பேணி இழிதொழில் புரியோம்
> தாய்த்திரு நாடெனில் இனிக்கையை விரியோம்'

என்பதே, இந்திய இளைஞர்களின் வாழ்க்கை நெறியாக வேண்டும்.

தாய்த்திரு நாடு எது? இதிலே குழப்பம் கூடாது. பன்னிரண்டு சிற்றூர்களையே கொண்ட கொல்லிமலை நாடா, நம் தாய்த்திரு நாடு நம் நீண்ட வரலாற்றின் தொடக்கக்காலத்திற்கு அது சரி. அடுத்த ஓர் நிலையில் பல்லவ நாடோ, பாண்டிய நாடோ, சோழ நாடோ, சேர நாடோ தாய்த்திரு நாடு.

வாலிபர் காந்தியின் படத்தைப் பார்க்கிறோம். அது பொய் அல்ல; ஓர் கால கட்டத்துப் படம்.

பின்னர் பாரிஸ்டர் உடையிலுள்ள காந்தியின் படத்தைக் காட்டுகிறார்கள். இது முன்னே பார்த்த் காந்தியின் படமே; வேறொரு காந்தியின் படமல்ல.

அடுத்து, அரை நிர்வாணப் பக்கிரியின் படத்தைப் பார்க்கிறோம். முன்னிரு படங்களிலும் இல்லாத மோகனப் புன்னகை பார்ப்பவர்களின் நெஞ்சைக் கொள்ளை கொள்ளுகிறது.

இதுவாகிலும் புதியதொரு மனிதரின் படமா? இல்லை. வெவ்வேறு தோற்றங்களை வழங்கும் ஒரே மோகனதாஸ் கரம்சந்த் காந்தியையே மூன்று படங்களிலும் கண்டோம்.

நாடு என்னும் சொல்லின் பொருளும், காலக் காட்சியில் வெவ்வேறு அளவாக, வகையாக, அமைகிறது.

நாம் வாழும் இந்தக் காலத்தில் எது தாய்த்திருநாடு? இணைந்த இந்தியாவே தாய்த்திருநாடு, பாரதி பாடியபடி,

**"மன்னும் இமயமலை எங்கள் மலையே**
**மாநில மீதிது போற் பிறிதிலையே**
**இன்னறுநீர்க் கங்கையா றெங்கள் யாறே"**

என்று இந்தியா முழுமைக்கும் உரிமை கொண்டாட வேண்டிய நாம், எங்கோ இருபதிலே ஒன்றுக்கு மட்டுமே உரியவர்கள் என்று ஏமாந்துவிட்டோம்,

அடுத்த நாடாகிய பங்களா தேசம் உரிமை கொண்டாடி கங்கை நீரில் பங்கு பெறுகிறது. உள்நாட்டைச் சேர்ந்த நமக்கு, கங்கை நீரை அனுப்புவதைப் பற்றி, அந்தப் பகுதியும் சிந்தை செலுத்தவில்லை. நாமும் உரிமைக்குரல் எழுப்ப வில்லை. விளைவு?

பக்கத்து மாநிலத்தாரே, காவிரிநீரைக் கட்டுப்படுத்தத் துணிந்து விட்டார்கள். கர்நாடகம் என்ன வான மண்டலத்து நாடா? நில மண்டலத்து நாட்டின் ஓர் மாநிலந்தானே!

பல நாடுகளின் ஊடே ஓடும் நீர்ப் பெருக்கம், அணைக்கும் நாட்டுக்கு மட்டுமல்ல; வழியிலே உள்ள

அத்தனை நாடுகளுக்கும் உரியது. இதுவே அனைத்து நாடுகளின் நடைமுறை.

இங்கோ, ஓர் நாட்டைச் சேர்ந்த ஓர் மாநிலம், முற்கால ஜெர்மனியாக உருவெடுக்கிறது. பல்லாண்டுகளாக நமக்கு நாமே வளர்த்துக்கொண்ட கிட்டப்பார்வை, இன்னும் எத்தனை இழப்புகளுக்கு இடம் கொடுக்குமோ?

இனியாவது நம் பார்வை விரியட்டும்; உரிமையின் பரப்புத் தெரியட்டும். பாரத தேசமென்று தோள்கொட்டு வோம். அப்போது நுழைவுச் சீட்டோடு அல்லாது, உரிமையோடு,

> 'வெள்ளிப் பனிமலையின் மீதுலவுவோம் அடி
> மேலைக் கடல் முழுதும் கப்பல் விடுவோம்'

அப்போது எவருடைய தயவும் அனுமதியுமின்றி,

> 'கங்கை நதிப் புறத்துக் கோதுமைப் பண்டம்
> காவேரி வெற்றிலைக்கு மாறுகொள்ளுவோம்'

அதுமட்டுமா? அறிவுப் பரிமாற்றம் வேண்டுமே! அதுவும் நிகழும்.

> 'சிங்க மராட்டியர் தம் கவிதைகொண்டு
> சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்'

இன்றைய சூழ்நிலையிலும், சின்னஞ்சிறு நாடுகள் தன்னாட்சி உரிமையோடு உள்ளனவே! இப்படியிருக்க பெரிய நாடு எதற்கு என்று குழம்புவோர் உண்டு.

சித்திரக் குள்ளர்கள்கூட, நெடுநாள் உயிரோடு இருக் கிறார்கள். அதற்காக, ஆறடி மனிதர் நாலடிக் குள்ளர் களாகச் சிறுக்கவேண்டுமா? வேண்டாம்.

இளைய பாரதம், விழிப்புற்ற பாரதமாக, எல்லோரை யும் வாழவைக்கும் விரிந்த பாரதமாக், மலர்வதற்குச்

சொல்லேர் உழவரும் எழுத்தேர் உழவரும் மட்டும் போதா. உடலுழைப்பிற்குச் சுணங்காதவர்கள், கோடிக்கணக்கில் தேவைப்படுவார்கள்.

சமுதாயம் எதை மதிக்கிறதோ அது செழிக்கும். நம்முடைய நெடுநாளைய போக்கு என்ன? உடலுழைப்பை இழிவாகக் கருதுதல்.

குருதியைக் கொட்டி, வியர்வையைப் பாய்ச்சி, பயிரிடுவோர் தாழ்ந்தவர்க்ள்; அவமதிப்பிற்கு ஆளானவர் கள்.

இதுவன்றோ நம் மரபு? பிற உடலுழைப்புப் பாட்டாளி களையும் கீழானவர்களாகவே அவமதித்து வருகிறது நம் சமுதாயம். அத்தகைய உவர்நிலத்தில் உழைப்பு பச்சை கட்டாது. இதை உணர்ந்தவர், பாரதியார். எனவே,

'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்
வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்'

என்று புதுநெறியை, நன்னெறியைக் காட்டுகிறார். அதை ஏற்றால், கருத்தால் உழைப்பவர்களை மதிப்பதுபோலவே, கரத்தால் உழைப்பவர்களையும் மதிக்கக் கற்றுக் கொள்வோம். அந்நிலையில், அறிவோடு தொழிற் பயிற்சியும் பெறுவோம்.

'மந்திரம் கற்போம்; வினைத் தந்திரம் கற்போம்
வானை அளப்போம் கடல் மீனை யளப்போம்
சந்திர மண்டலத்தில் கண்டு தெளிவோம்'

அங்கேயே நின்றுவிடுவோமா? இல்லை.

'சந்தி, தெருப் பெருக்கும் சாத்திரம் கற்போம்'

'காவியம் வளர்ப்போம்; நல்ல காடு வளர்ப்போம்
கலைவளர்ப்போம்; கொல்ல ருலை வளர்ப்போம்'

'ஓவியம் செய்வோம்; நல்ல ஊசிகள் செய்வோம்,
உலகத் தொழிலனைத்தும் உவந்து செய்வோம்.',

அத்தனை தொழில்களையும் திறம்படச் செய்வதிலே மகிழும் புதிய இந்தியாவில், பஞ்சம் தலை நீட்டுமா? பற்றாக் குறை வாலாட்டுமா? பாரதியின் கனவு நனவாக அல்லவா மாறியிருக்கும்.

'பட்டினில் ஆடையும் பஞ்சில் உடையும்
பண்ணி மலைகளென வீதி குவிப்போம்'

இது நடைமுறைக்கு வந்துவிட்டது. மலை மலையாகத் துணிமணிகள் விற்காமல் தேங்கிக் கிடக்கின்றன. ஏன்? பாரதியார்.

'காசினி வணிகருக்கு அவை கொடுப்போம்'

என்று எதிர்பார்த்தார். அவர் எதிர்பார்த்த அளவு வெற்றியில்லை. ஏன்?

ஆண்டுக்கு ஆண்டு புதுமைக் கூட்'டத் தெரியவில்லை.

கலையைப் பழமையில் புதைத்து வைத்திருப்பது போல், கைவினைகளையும் ஒரே பாணியில் மூடி வைத்திருக் கிறோம்.

தன்னாட்சி உரிமைபெற்ற ஒவ்வோர் நாடும் தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ளவேண்டும். இதற்குப் படை பலம் தேவை. படைபலம் பல கூறுகளால், பெருகுவது.

படைப்பெருக்கம், படைப் பயிற்சி, இரண்டும்தேவை. அதோடு, படைக் கலன்களும் தேவை.

பாரியின் காலத்துப் பட்டாக் கத்திகளை மட்டும் நம்பி இருக்க முடியாது; வில்லும் வேலும் மட்டும் நம்மைக் காப்பாற்ற போதா. இக்காலப் போர்க்கருவிகளையும் செய்து குவிக்கவேண்டும்.

நாடுகளுக்கிடையே எழும் பெரும் சிக்கல்களை, கொலைக்கருவிகளைக் கொண்டே முடிவு செய்யும் மறப் போக்கு உள்ளவரை, இந்தியாவும் தனது படைப்பலத்தைப் பலவகையிலும் போதிய அளவு பெருக்கிக் கொள்ளுதல் இன்றியமையாதது. எனவே, தொலை நோக்குடைய பாரதியார்,

'ஆயுதம் செய்வோம்'

என்று உறுதி கூறுகிறார்.

'ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள் செய்வோம்'

என்று இந்தியாவிற்கு வழி காட்டுகிறார்.

படை எண்ணிக்கையால் பெருத்தாலும், பயிற்சியில் சிறந்தாலும், கருவிகளில் முன்னின்றாலும், ஒற்றுமையில் தாழ்ந்தால், வீழும். கட்டுப்பாடே உயிர் நாடி. இந்தியப் படை என்பதே கட்டுப்பாட்டிற்கு வேர்.

இந்தியர் என்னும் உணர்வு பட்டுப்போனால், கட்டுப் பாடு குலையும். ஒற்றுமை வளர்க்கும் வகையில்,

'சாதி இரண்டொழிய வேறில்லை யென்றே
தமிழ்மகள் சொல்லிய சொல் அமிழ்த மென்போம்'

என்று பாரதியார் பாடியிருப்பதை; மனத்தில் நிறுத்து வோமோ?

இதை, 'செந்தமிழ் நாடென்னும்' பாட்டில் சேர்க்கா மல், 'பாரத தேசம்' என்னும் பாட்டில் சேர்த்திருப்பது, ஆழ்ந்த பொருளுடையதாகும்.

முற்காலத்தில் வைசூரி இந்தியாவை அடுத்தடுத்து வாட்டிய பொல்லாத நோய். காலம் காலமாக வந்த அதை ஒழித்துக் கட்டியதுபோல, மனநோயான தொடர் நோயான, சாதி வேற்றுமை என்னும் கொடிய உணர்வு நோயையும் ஒழிக்க, உறுதிகொள்வோமாக!

253132

இதோ பசும்புல்; உயரம் அதிகம் இல்லை. சாண்மாமல. பறித்துப் பார்ப்போம். வேர்; இல்லை வேர்கள், கண்ணைக் கவர்கின்றன. ஒரு புல்லுக்குப் பல வேர்கள்: இதுவே இயற்கை.

அதோ நெல் நாற்று; இரு சாண் உயரம். அதை எடுத்துப் பார்த்தால்? வேர்கள் பல காட்சியளிக்கின்றன. ஓர் நெல் தண்டிற்குப் பல வேர்கள்.

செடியோ கொடியோ எதை ஆய்ந்தாலும், இதே நிலையே. மரத்தின் இயல்பும் வேறல்ல.

தலைநீட்டி மக்கள் கவனத்தை ஈர்க்காவிட்டாலும், சின்னஞ்சிறு வேர்களே, புல்லுக்கும் நெல்லுக்கும் முல்லைக்கும் மாமரத்திற்கும் உயிர் நாடிகள்.

அவ் வேர்கள் நசிந்தால் புல்லும் இராது; நெல்லும் இராது. முல்லையும் பட்டுப்போகும்; மாமரமும் வீழ்ந்து போகும்.

இதுவே இயற்கை. வேர்களைப் பேணுதல் செடிகளை, கொடிகளை, மரங்களைப் பேணுவதாகும்.

மக்கள் இனத்திற்கு வேர்கள், அவர்களுடைய மொழிகள் ஆகும்.

அம்மொழிகளில் உயிர்த்துடிப்பு இருந்தால், அவர்களுடைய இலக்கியத்தில் வீறும் ஓட்டமும் வன்மையும் மேன்மையும் தெளிவும் ஒளியும் செறியும்.

அத்தகைய இலக்கியத்தைப் பயில்வோருடைய வாழ்க்கையில் தெளிவும் கொப்புளிப்பது இயற்கை; வீறும் ஓட்டமும் புலப்படுவது இயல்பு.

வன்மையும் மென்மையும் அவர்களுக்கு வேண்டியளவு வேண்டியபோது தாமே முன்வந்து நிற்கும்.

மக்களுடைய வாழ்வையும் வளத்தையும் அவர்களுடைய மொழிவளத்தில், இலக்கியச் சிறப்பில், இருந்து பிரிக்க முடியாது.

சிறப்பான வாழ்க்கை, சீரிய இலக்கியத்தைப் பெற்றெடுக்கிறது. சீரிய இலக்கியம், வெறுத்துப் போகும் சோக வாழ்க்கைக்கு உயிரூட்டி, வண்ணத்தைக் கூட்டி, நல்ல முறையில் வாழவைக்கிறது.

கிரேக்க நாடு இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. உலகம் உள்ளவரையில் அழியாப் புகழ் பெற்றுள்ள கிரேக்க அறிஞர்கள் வாழ்ந்த காலம் ஒன்றாகவும், கிரேக்கப் பேரிலக்கியங்கள் பூத்த காலம் வேறொன்றாகவும் இல்லை.

மொழி உயர்வு, இலக்கியச் சீர்மை, வாழ்க்கையின் பெருமிதம் ஆகிய மூன்றும், பிரிக்க முடியாதபடி பின்னிக் கிடக்கின்றன. இவற்றைப் புரிந்து கொண்டவர்களே, தெளிந்த அறிவுடையோர் ஆவார்.

கிரேக்க மொழி, மக்கள் மொழி நிலையிலிருந்து, ஏட்டு மொழி நிலைக்கு மாறிற்று. கிரேக்க வாழ்வும் மாறி விட்டது; ஒளி மங்கிவிட்டது.

மொழியை இழந்த மக்கள் முதலில் ஊமையராவர். பிறகு கருத்து அடைபடும்; சிந்தனை தடைபடும். அப்புறம் நெடுமரங்கள் ஆவார்கள்.

ஓர் புல்லுக்கே பல வேர்கள் இருந்தால், கோடி கோடி மக்களுக்கு ஒரே மொழி என்பது இயற்கைக்கு மாறானது.

நெடுங்காலமாக, இந்தியா பன்மொழி நாடாக விளங்கி வருவதில், குறையேதும் இல்லை; தீங்கேதும் இல்லை.

இதைப் பற்றிக் கவலை கொள்ளத் தேவையில்லை. பல மொழிகளும் வளத்தோடும் வலிவோடும் இருப்பது நாட்டுக்கு நல்லது.

இந்திய மொழிகளில் ஒன்று தமிழ்.

அது மட்டுமா?

அதன் தொன்மையான மொழிகளில் ஒன்றாகவும் விளங்குகிறது. இலக்கியச் செறிவுடையதாகவும் உள்ளது. மேலும் தள்ளாமை வராது, இளந்துடிப்பும் கொண்டு வாழ்கிறது.

இக் கன்னித் தமிழ் பாரதியின் சொந்த மொழி. அம் மொழியிடம் அவர் காதல் கொண்டது புதுமையல்ல; இயற்கை.

காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு. அந்த அடிப் படையில், பாரதியார், தாய் மொழியாம் தமிழ் மொழி யைப் போற்றினர் இல்லை.

தாய்த்தமிழ், வடமொழி, இந்தி, ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகளை நன்கு அறிந்த சுப்பிரமணிய பாரதியார்,

'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்'

என்று பூரித்தார். அதே நேரத்தில், உள்ளத்தை உள்ள படி உணரும் மதி நுட்பமும், அதை அப்படியே கூறும் துணிவும் பெற்றிருந்த பாரதியார், தமிழ்ச் சமுதாயத்தின் மேல் நாட்டஞ் செலுத்தினர்.

கல்லாரைக் கண்டார். எங்கோ ஓர் காட்டில் அல்ல. எங்கெங்கும் தற்குறிகள் காட்சியளித்தார்கள்.

கல்வி செறிந்த தமிழ் நாட்டவர், கல்லாமை இருளில் வீழ்ந்து, மெய்மறந்து கிடப்பதைக் கண்டு, உலகம் எள்ளி நகையாடியது.

கல்லாமை இருள் என்பதையும் உணராதவர்களை, மக்கள் என்று அழைக்க முடியுமா? முடியாது.

கல்லாமை இருளைப் போக்கத் துடிக்காதவர்கள், மாக்களுக்கு ஒப்பானவர்களே. அவர்களைப் பார்த்து, அதட்டிக் கேட்கிறார்.

'பாமரராய் விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்வீர்!'

என்ன பதில் சொல்வார்கள்? ஊமைகளாக நின்ற நம்மைப் பார்த்து,

'தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்'

என்று ஆணையிட்டார். அப்போது உயிர்ப்பினைக் கண்டார் போலும்.

''யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல், இளங்கோவைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை; உண்மை
வெறும் புகழ்ச்சி யில்லை''

என்று கவியரசர் சுப்பிரமணிய பாரதியார் கம்பீரமாக அறிவித்தார். நம்பிக்கையை ஊட்டினார். தலையாட்டிய தமிழர்களைப் பார்த்து,

''ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம்; ஒரு சொற் கேளீர்!''

என்று உரிமையோடு இடித்த பின்,

''சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழககம் செழிக்கச் செய்வீர்!''

என்று கட்டளையிட்டார். நாம் ஒவ்வொருவரும் இக் கட்டளையை நம் முதற்கடமையாகக் கொண்டு செயல் பட்டால்,

'சொல்லவுங் கூடுவதில்லை—அவை
சொல்லும் திறமை தமிழ் மொழிக்கில்லை'

என்னும் வசை முழங்காதே.

நான் பாரதி பாடல்களை, பதினேழு பதினெட்டு வயதுகளில் முதன் முதல் படித்தவன். அரசு இவற்றைப் படிப்பதைக் குற்றமாகக் கருதிய காலத்தில் படித்தவன். அவ் வயதில் படித்தது, பசுமரத்தாணிபோல் பதிந்துவிட்டது.

ஆங்கிலம் என்னுடைய கருவி, தமிழ் என் உயிர்; அதற்குத் தொண்டு செய்து வருகிறேன்.

ஆங்கிலத்தில் எழுதிப் பலன்பெற, வெளிச்சம் பெற, என் மனம் இடங்கொடுப்பதில்லை. எழுதப் பேனாவை எடுத்தால், பாரதி முன்னின்று வழி நடத்துகிறார். இதோ அவருடைய வழி காட்டல்; எனக்கும் உங்களுக்கும்.

'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்'

'சென்றிடுவீ ரெட்டுத் திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்'

தமிழர்கள், உலகியல் அனைத்திலும் புலமை பெற்று வருகிறார்கள்; எண்ணற்ற நாடுகளில் குடியேறி வாழ்ந்து வருகிறார்கள்.

பெற்ற வீடு நன்றாக இருந்தால்தான், புகுந்த வீட்டில் மதிப்பார்கள்.

தாய் மொழியாம் தமிழ், வானமளந்தது. அனைத்தையும் அளந்து கூறும்போதே வெளிநாட்டுத் தமிழர்களுக்கு மதிப்பிருக்கும்.

இல்லையேல், கூலிக்காரர்கள் நிறையே. கூலிக்காரர்கள் ஆகவே பிறருக்குக் காட்சி யளிப்பார்கள்.

பிற மொழிகளிலும் பயிற்சியுடைய தமிழர், சிறப்பாக முன்னேறிய நாடுகளில் வாழும் தமிழர், ஒவ்வொருவரும் தமிழுக்குப் புதுப்புது அணிகலன்களைச் செய்து தருவதை நோன்பாகக் கொள்ளவேண்டும்

தாம் பாரத நாட்டின் புதல்வர் என்று பெருமைப்படும் பாரதியார், தாம் தமிழ் நாட்டவர் என்பதை மறக்கவில்லை; மறைக்கவில்லை; அதற்காக வெட்கப்படவில்லை; பெருமைப்படுகிறார். இந்தியா என்னும் பெருமரத்தின் வேர்களே தமிழ் நாடும் பிறவும்.

தடந்தோள்களையுடைய ஒருவர், தன் தோள்களைக் காட்டி, பிறரும் இப்படி வலிமைபெற முடியுமென்று கூறுவாரானால், மூக்கையும் கண்களையும் காதுகளையும் பிற உறுப்புகளையும் பொருட்படுத்த வேண்டாமென்று சொல்லுவதாகப் பொருள் கொள்ளலாமா? ஆகாது.

தெளிந்த காட்சியருக்கு, இந்தியப் பற்றுக்கு முரண் பட்டதல்ல, தமிழ் நாட்டுப் பற்று. தமிழ் மொழிப் பற்றும் இந்திய பற்றுக்கு வேர்ப்புழுவாக அமையாது; அமையக் கூடாது.

பொதுமை வேண்டும். அதைச் சொல்லிக்கொண்டு, ஏதும் பாடுபடாது சத்திரத்துச் சோற்றுக்குக் காத்துக் கொண்டிருக்கலாமா? கூடாது.

இந்திய மக்கள் அனைவரும் தம் தம் தாம் மொழியைப் பேசவேண்டும்; பயன்படுத்தவேண்டும். நெஞ்சுருக்கும் அத்தனைக்கும் பயன்படுத்த வேண்டும்: வளர்க்கவேண்டும். எல்லாத்துறைகளுக்கும் பயன்படுமாறு வளர்க்கவேண்டும்.

அப்படிச் செய்யும்போது, ஆதிக்க உணர்விற்கு, மறந்தும், இடந்தரலாகாது. பல வேர்களிலே ஒரு வேர், மற்றவற்றை அழுத்தி மிதித்து நலிய வைத்தால் மொத்தத்தில் தீமை. (அதைப்போல ஏதொன்றும் பிறவற்றை மிதிப்பது நல்லது அல்ல). அதே நேரத்தில் தமிழராகிய நாம், மொழித் தீண்டாமையை விட்டுவிடவேண்டும். இந்திய மொழிகள் அனைத்தும் வளர்க்கப்பட வேண்டும்; பயன்பட வேண்டும். பாரதி அறிவுறுத்தியபடி,

'.....................நன்மையு மறிவும்
எத்திசைத்தெனினும் யாவரே காட்டினும்
மற்றவை தழுவி வாழ்வீராயின்,
அச்சமொன்றில்லை.'

என்னும் மகாகவியின் வாக்கு மறுக்க முடியாத உண்மை.

## 8

புத்தரைப் பெற்றது பெண். சாக்ரடீசைப் பெற்றது பெண். காந்தியைப் பெற்றது பெண். லெனினைப் பெற்றது பெண். பெரியாரைப் பெற்றது? பெண்.

விசுவேசுவர அய்யாவைப் பெற்றது? பெண்ணே.

சி. வி. இராமனைப் பெற்றது? பெண்.

இரவீந்திரநாத் தாகூரைப் பெற்றது? பெண்.

பாரதியைப் பெற்றதும், பெண்.

உத்தமர்களை, மேதைகளை, கவிஞர்களை மட்டுமா பெண் இனம் பெற்றது? இல்லை. இல்லை. மக்களிடம் முழுமைக்கும் பிறப்பிடம் பெண்ணே. அன்றும் ஆண் பெற்ற பிள்ளை இல்லை; இன்றும் இல்லை. நாளை, ஏதோ நடக்கும் என்று மிரட்டுகிறார்களே! அதுவும் சோதனைக் குழாயில் குழந்தையை உருவாக்கலாம் என்பதே. ஆணின் வயிற்றில் உருவாக்குவதாக மிரட்டல் இல்லை.

மக்கள் தோற்றத்திற்கு இடம் பெண்ணினமே. மானிடப் பயிருக்கு நிலம் போன்றவள் பெண். அப் பெண்ணினத்தின் நிலையென்ன? அந்தோ அவலம்.

பெண், அடிமை; காலமெல்லாம் அடிமை. சின்னஞ் சிறு வயதில்? பெற்றோர்க்கு அடிமை. இளமையில், நடுமையில்? கணவருக்கு அடிமை. பின்னர்? மகனுக்கு அடிமை: அடிமையாகவே பிறப்பு; அடிமையாகவே வளர்ப்பு; அடிமையாகவே இருத்தல்; அடிமையாகவே இறத்தல்.

பெண் ஏன் அடிமையானாள்? இதைப்பற்றி ஆய்ந்து கொண்டே இருப்பார்கள்; ஆய்ந்த முடிவை யார் அறிவர்?

எப்போது பெண் அடிமையானாள்? இதுவும் தீராத ஆய்வு.

எப்போதோ எப்படியோ அடிமைப்பட்டது பெண் இனம்; நெடுங்காலத்திற்கு முன்னர் அடிமைப்பட்டது பெண் குலம்! உலக மக்களில் பெரும்பாலோர் அடிமைகள்; வழிவழி அடிமைகள்; காலம் காலமாக அடிமைகள்.

மக்கள் இனம் தனக்குத்தானே விதித்துக்கொண்ட கொடுமைகளில் ஒன்று பெண்ணடிமையாகும். இது ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக, ஆட்சி செலுத்தி வருகிறது.

எனவே, இதுபற்றி, நம் அறிவும் உணர்வும் மரத்துப்போய் விட்டன. ஆண் இனம், மாக்கள் இனமாக மாறியது. விலங்கு வாழ்க்கை வாழ்ந்தது. தனது முட்டாள்தனமான தன்னலத்தால், இக் கொடுமையைக் கண்டு கொதிக்கத் தவறிவிட்டது.

கோடி கோடி மக்கள், சோற்று வாழ்க்கை நடத்துகையில், எங்கோ ஒருவர், அப்பாலும் எட்டுகிருர். புதுக் கோணத்திலிருந்து, உலகைக் காண்கிருர். பிறர் காணுத காட்சியைக் காண்கிருர். சிந்தனை மின்னுகிறது. புதுத் திசையில் மின்னுகிறது. அத்தகையோரில் ஒருவர் பாரதியார்.

தேசியகவி பாரதியார், உரிமை உணர்வு செறிந்தவர். அவர், தனக்கு மட்டுமா விடுதலையை நாடினர்? இல்லை; எல்லோர்க்கும் விடுதலையை நாடினர். எல்லோருடைய விடுதலைக்கும் குரல் கொடுத்தார்; போராடினர்.

பாரதியாருடைய விடுதலை விழைவு ஆண்கள் விடுதலையோடு நின்றுவிடவில்லை. பெண்கள் விடுதலைக்கும் முழங்கிற்று. 'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோம் இந்த நாட்டிலே' என்னும் குறிக்கோளை, விடுதலைக்குத் துடித்த இந்தியாவிற்கு காட்டினர்.

ஆதிக்க உணர்வே, வெவ்வேறு வகையான வெவ்வேறு அளவான, அடிமைத்தனத்திற்கு வேர். ஒவ்வொருவரும் தம் மனைவியை அடக்கியாள நினைக்கிருர். மனிதத் தன்மை முதிர்ந்தால், அன்பால் ஆளமுடியும்; அப்போது அடிமைப்படுத்தத் தேவை யேற்படாது.

ஆனல் எத்தனை பேர்கள், மனிதத்தன்மை முதிர்ந்தவர்கள்? மிகச் சிலரே. பல்லாயிரத்தில் ஒருவர்கூட அந்நிலைக்கு உயரவில்லை. கோடி கோடி மாந்தர் மனிதத் தன்மை முதிராத மக்கள்.

எனவே அன்பின் வழியை விட்டு, ஆதிக்க வழியைப் பின்பற்றுகிறார்கள். பல்லாயிரம் ஆண்டுகளாக, கூர்தல் அடிப்படையில் வளர்ந்து வந்த பிறகும், கோடிக்கணக்கானவர் இன்றும் மாந்தர் நிலையை எட்டமுடியாதிருக்கும் போது, முற்காலத்தில் எவ்வளவு மட்டமாக இருந்திருப்பார்கள் என்பதை ஊகிக்கலாம்.

அன்று மனைவியை அடக்கத் தொடங்கினது, இன்று எங்கோ தள்ளியுள்ளது நம்மை. உண்மையும் உரிமையும் இயற்கையாகக் கொப்பளிப்பதற்குப் பதில், பொய்மையும், அடிமைப்புத்தியும், அங்கு இங்கு எனுதபடி எங்கும் கோலோச்சுகின்றன.

இந் நிலையைக் கண்டார் பாரதியார்; குமுறினார் பாரதியார். அவர் இயற்கையின் மைந்தர்; உண்மையின் சுடர்; உரிமையின் ஞாயிறு. ஞாயிறு, யாருக்குச் சுடும்; சுடாது என்று பார்க்கலாமா? கூடாது. சுரீரென்று உறைப்பதே அவன் கடமை. அதைப் போன்று, பாரதியாரும்,

'பெண்டாட்டி தனையடிமைப் படுத்தவேண்டி
பெண்குலத்தை முழுதடிமைப் படுத்தலாமோ?'

என்று கேட்கிறார். இது நம் உணர்வில் சுரீரென்று பாய வேண்டும். குருதியில் கலக்கவேண்டும். அதன் விளைவாக நம் வாழ்க்கைமுறை மாற வேண்டும். ஏன்?

பயிரின்மேல் உள்ள நாட்டத்தால் நிலத்தைப் பேணுகிறோம். அதே போல், மக்கள் இனத்தின்மேல் உள்ள அக்கறையால், மக்களின் நிலமாகிய பெண்ணினத்தின் நலத்தையும் உரிமையையும் பேணிக் காக்கவேண்டும்.

கம்பு விளையும் மண், கரும்பு விளையப் பயன்படாது; ஏலம் விளையும் உயர்நிலம், மாகொழிக்கப் பயன்படாது.

இது விவசாயிக்கு மட்டுமல்ல சாதாரண அறிவுடை யோருக்கும் தெரியும்.

'நிலத்தின் தன்மை பயிர்க்குள தாகுமாம்
நீசத்தொண்டு மடமையுங் கொண்டதாய்
தலத்தில் மாண்புயர் மக்களைப் பெற்றிடல்
சாலவேயரி தாவதொர் செய்தியாம்'

என்று பாரதியார் பாடுகிறார். இது கருத்து நிறைந்த பாடலாகும். எனவே, கணவன் மனைவி உறவு ஆண்டான் அடிமை உறவாக இருப்பது மாறவேண்டும். பாரதியார்,

'அறிவுகொண்ட மனித உயிர்களை
அடிமையாக்க முயல்பவர் பித்தராம்
நெறிகள் யாவினும் மேம்பட்டு மானிடர்
நேர்மை கொண்டுயர் தேவர்க ளாதற்கே
சிறிய தொண்டுகள் தீர்த்தடி மைச்சுருள்
தீயிலிட்டுப் பொசுக்கிட வேண்டுமாம்'

என்று, புதுமைப் பெண்ணின் வாயால், நமக்கு அறிவுரை கூறுகிறார். ஒவ்வொரு மனிதனும் பின்பற்ற வேண்டிய அறிவுரையே.

அடிமைச் சுருளைப் பொசுக்கி ஒருநிலை உணர்வை உருவாக்கினால், என்ன பலனைக் காண்போம்? இப்படியொரு கேள்வி முளைக்கும். இதை எதிர்பார்த்த பாரதியாரின் பதிலைப் பார்ப்போம்:

'ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவி லோங்கியிவ் வையந் தழைக்குமாம்'

என்று பாடினார் பாரதி. இது, வெறும் ஆசையா? உண்மையா? உண்மை. ஆண் பெண் சமத்துவம் வாழ்க்கை முறையாகிவிட்ட நாடுகளில் ஒன்று; சோவியத் நாடு. பிறநாட்டார், முந்நூறு ஆண்டுகள் முயன்று பெற்ற

அறிவின் எல்லைகளை, சாதனை முடிவுகளை, ஐம்பது ஆண்டு களில் பெற்றுவிட்டது அந் நாடு.

அதற்குக் காரணம்? பொருளியல் புரட்சியோடு, வாழ்வியல் புரட்சியும் சேர்ந்து வெற்றிபெற்றதே. முன்னர் கண்டறியாத சாதனைகளுக்கு மூலம், ஆங்கே ஆணும் பெண்ணும் சமம் என்பது சட்டநூலோடு உறைந்திருக்க வில்லை; வீடுதோறும், நாடு முழுவதும் சமத்துவத்தென்றல் தொடர்ந்து வீசுகிறது.

பாரதியின் புதுமைப் பெண்,

நாணும் மச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்
ஞானம் நல்லறம் வீர சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்'

என்று முரசு கொட்டுகிறாள். இது பேயின் பிதற்றல் என்று அலறவேண்டாம். பெண்மைத் தெய்வத்தின் பேச்சுகள் என்று, கவியரசர் பாரதியார் குறிப்பதைச் சிந்தியுங்கள்.

பெண்ணுரிமைத் தென்றல், புயலாக மாறுதா? இப்படி அச்சப்படுவோர், பயந்து நடுங்குவோர் உண்டு. அவர்கள்.

'குலத்து மாதர்க்குக் கற்பியல் பாகுமாம்
கொடுமை செய்து மறிவை யழித்துமந்
நலத்தைக் காக்க விரும்புதல் தீமையாம்'

என்னும் புதுமைப் பெண்ணின் கூற்றினை உளங்கொள்வார் களாக.

குலம் என்பது இங்கே, சாதியைக் குறிப்பதாகக் கொள்ளக்கூடாது. எல்லாச் சாதியிலும் 'நல்லகுணத்தைச் சார்ந்தவர்கள் உள்ளனர். தங்களுக்கென்று சீலம், நெறி முறை, கட்டுப்பாடு, ஒழுங்கு ஆகியவற்றை ஏற்படுத்திக் கொண்டு, அவற்றின் வழியே வாழும் குடும்பங்கள்

சமுதாயத்தில் எல்லாத் தட்டுகளிலும் உள்ளன. அக் குடும்பங்களில் வளரும் நங்கைகள் 'குலத்து மாதர்கள்' ஆவார்கள். அத்தகையோர், உரிமை பெற்று வாழ்தல் நன்மையே. அடிமை பெற்று வளர்த்தல் தீமையாகும். எல்லோரும் குலத்து மாதர்களாகும் சூழ்நிலையை உரு வாக்குவது, முற்போக்கு சமுதாயத்தின் தலையாய கடமை.

புதுமைப் பெண்கள், செம்மை மாதர்களாக, சீருடனும் சிறப்புடனும் விளங்குவார்கள். அவர்களிடம்,

'நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கு மஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கு மிருப்பதால்?
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்'

இப்புது வழியைக் கண்டு, நாம் மிரளக்கூடாது. இரவு முழுவதும் தொழுவத்திலே அடைப்பட்டுக் கிடந்த கன்று, திறந்துவிட்டதும் துள்ளிக் குதித்து எங்கோ ஓடும். அதற்கு அஞ்சிக் கன்றை அடைத்தே வைத்திருக்கலாமா? ஆகாது. நெடுநேரம் செக்கிலே பூட்டி வைக்கப்பட்டிருந்த மாடு, அவிழ்த்துவிட்டபோதும் முன்னேறாது, சுற்றி வருதலும் உண்டு.

அதைப்போல், உரிமைபெற்ற புது யுகத்திலும், நம் பெண்கள், பழமையைச் சுற்றிவருவது காணாத காட்சியல்ல.

இது, பெண்களுடைய உரிமைகளைப் பறிக்கச் சாக்காகக் கூடாது; வாய்ப்பு மறுக்குமளவு நம்மை மயக்கக் கூடாது. இனி,

'அமிழ்ந்து பேரிரு ளாமறி யாமையில்
அவல மெய்திக் கலையின்றி வாழ்வதை
உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணற மாகுமாம்'

மகாகவி சுப்பிரமணி பாரதியின்,

'உதய கன்னி யுரைப்பது கேட்டீரோ'

கேட்டிருந்தாலும், மேலும் கேளுங்கள்:

'விலங்கி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை
வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பராம்'

கவியரசர் பாரதியாரின் கனவு, நனவாக நாம் துணை நிற்கவேண்டும் துணை நின்றால், புதுமைப் பெண்கள்,

'உலக வாழ்க்கையி னுட்பங்கள் தேரவும்
ஓது பற்பல நூல்வகை கற்கவும்
இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
யாவுஞ்சென்று புதுமை கொணர்ந் திங்கே
திலக வாணுதலார் நங்கள் பாரத
தேசமோங்க உழைத்திடல் வேண்டுமாம்''

என்னும் விழைவு நிறைவேறும். ஆண்களைப் போன்றே, பெண்களும் வையம் முழுவதும் சுற்றி அறிந்து வரவேண்டும். அப்போது, பாரதப் பெண்கள்.

'சாத்திரங்கள் பல பல கற்பராம்
சவுரியங்கள் பல பல செய்வராம்
மூத்த பொய்ம்மைகள் யாவு மழிப்பராம்
மூடக் கட்டுகள் யாவுந் தகர்ப்பராம்
காத்து மானிடர் செய்கை யனைத்தையும்
கடவுளர்க் கினிதாகச் சமைப்பராம்
ஏத்தி யாண் மக்கள் போற்றிட வாழ்வராம்'

பழக்கமில்லாதது; தாய் கோராதது; பாட்டி நினையாதது. இதனாலேயே தள்ளுதற்குரியதன்று, புதுமைப் பெண்ணின் விழைவு.

இது போற்றற்குரியது; வரவேற்புக்குரியது; ஆதரவுக்குரியது; உதட்டு ஆதரவுக்கல்ல; உண்மை ஆதரவுக்குரியது.

இந்திய விடுதலைப் போராட்டத்தில், பெண்களுக்கும் சமபங்கு இல்லாவிட்டாலும், குறிப்பிடத்தக்க, —பங்கு பெற்றதே நம் போராட்டத்திற்கு வெற்றியைத் 'தேடித் தந்தது. அரசியல் விடுதலையை அடித்தளமாகக் கொண்டு எழுப்ப வேண்டிய சமுதாய சமத்துவமும், எல்லார்க்கும் வாழ்வளிக்கும் பொருளியலும், இன்னும் படுத்துக் கிடக்கின்றன. இவற்றை என்று காண்போம் என்று ஏக்கப் பெருமூச்சு விடும் நிலையிலேயே நாம் உள்ளோம்.

'எத்தனை தூரமோ பண்டரிபுரம்?' என்று முன்னொரு நாள் பக்தர் ஏங்கியதுபோல், நாம்,

'எத்தனை தூரமோ வாழ்வூர்? எத்தனை தூரமோ சமத்துவபுரி?' என்று ஏங்கித் தவிக்கிறோம். என்றைக்குத் தேவையான பொது இயக்கங்களில், பெண்கள் ஏராளமாகப் பங்கு கொள்கிறார்களோ, அன்றே, நாம் வெற்றிப் பாதையில் அடியெடுத்து வைப்போம். எனவே,

'துன்ப நீக்குஞ் சுதந்திர பேரிகை
சாற்றி வந்தனை மாதரசே யெங்கள்
சாதி செய்த தவப்பயன் வாழிநீ'

'மாதர்க்குண்டு சுதந்திர மென்றுநின்
வண்மலர்த் திரு வாயின் மொழிந்தசொல்
மேன்மை செய்தெமைக் காத்திடச் சொல்வதாம்.'

என்று பெண்ணுரிமையைப் போற்றி வளர்ப்போமாக.

# 9

விடுதலை முரசு கொட்டிய கவியரசர் பாரதி, எல்லா வற்றிலும் முழுமையான காட்சியைப் பெற்று இருந்தார்.

வீட்டிலே அடிமைத்தனத்தை வளர்த்தால், அது கால ஓட்டத்தில் நாட்டையும் கௌவிக்கொள்ளும்.

ஊர்களைச் சாதியின் பேரால் பிளவுபடுத்தி வைத் திருந்ததன் விளைவு, நாட்டிலும் பிளவுகள்.

கொள்கைகள் வேறுபடுவது இயற்கை. அவற்றின் அடிப்படையில் அரசியல் கட்சிகள் மாறுபடுவதும் இயற்கை.

கட்சிகள், நாட்டுக்காகவே கொள்கைகள் என்பதை மறந்து, பாழ்செய்யும் குழுக்களாக நின்று உட்பகையை வளர்ப்பது நோய்; பொல்லாத நோயாகும். அரசியல் விடுதலை, அரசியல் அரங்கங்களோடு முடங்கிக் கிடத்தல் ஆகாது. குடும்ப வாழ்க்கையிலும் உரிமையொளி வீச வேண்டும்.

கவி சுப்பிரமணிய பாரதி வாழ்ந்த காலத்தில், இந்தியா வில் உரிமையொளி, நாட்டிலும் இல்லை; வீட்டிலும் இல்லை.

பெண்கள் பல கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டிருந் தார்கள். எனவே அறிவிலோ, ஆற்றலிலோ, பொதுத் தொண்டிலோ, வளரவேண்டிய நிலைக்கு அவர்கள் வளர முடியவில்லை.

இது அநீதி; தீங்கு. இதைக் கண்டு, பொங்கிற்று, பாரதியாரின் சினம். பெண்கள் விடுதலைக் கும்மியிலே அவருடைய சினம் ஒளிவிடுகிறது.

நம் பெண்களை அடக்கி வைத்திருக்கும், கட்டிப், போட்டிருக்கும் பல பழக்கங்களை 'பிசாசு'கள் என்று வர்ணிக்கிறார்.

வருங்காலப் பெண் மகளை—விடுதலை பெற்ற பெண் மகளை மகாகவி பாரதியார் கூப்பிட்டுக் கும்மியடிக்க வைக்கிறார்.

அவ்வொலி எங்கோ ஓர் சந்திலே கேட்பதில்லை. தமிழ் நாடு முழுவதும் ஒலிக்கும் அளவு, அந்தப் பெண்களை உரத்துக் கும்மியடிக்கச் செய்கிறார்.

'நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நன்மை கண்டோ மென்று கும்மியடி'

என்று பாட, நாமும் நம் சிறுமிகளுக்குக் கற்றுக் கொடுத்தல் மிகவும் நல்லது.

எந்தெந்தப் 'பிசாசு'கள் ஒழிய வேண்டும்?

முதலில், கல்லாமை என்னும் பிசாசு நம்மைவிட்டு அகலவேண்டும்.

'ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போ மென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்'

இப் பாடல் பள்ளிதோறும் பாடப்படுமானால், புதிய சூழ்நிலை உருவாகும்.

படித்துத் தேர்ச்சிபெற்ற பெண்கள், விலை கொடுத்து வாங்கியவன் தொழுவத்திற்குச் செல்லும் மாடுகளாக வாழமாட்டார்கள். அவர்களுக்கு,

'மாட்டைய டித்து வசக்கித் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்தே

வீட்டினி ஷெம்மிடங் காட்ட வந்தாரதை
வெட்டி விட்டோ மென்று கும்மியடி'

என்று சுதந்தர உணர்வுடன் நிமிர்ந்து பாடவும் கற்றுக் கொடுக்க வேண்டும்.

'நல்ல விலைகொண்டு நாயை விற்பாரந்த
நாயிடம் யோசனை கேட்பதுண்டோ?
கொல்லத் துணிவின்றி நம்மையு மங்நிலை
கூட்டி வைத்தார் பழிகூட்டி விட்டார்'

என்று பாரதியின் பெண் பாடும்போது, நாம் எப்படி மறுக்க முடியும்?

இதுவன்றோ உண்மை நிலை. பழகிப் போனதால், அநீதி, நீதியாகிவிடாது. இந்நிலை சரிவதற்கு, நாமும் துணை நிற்றல், கடமை.

'வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடு வோம்'

என்று, உங்கள் வீட்டுப் பெண்ணே முழங்கினாலும், முழங் காமல் முடித்தாலும் வேதனைப்பட வேண்டாம். பொங்கி எழவேண்டாம். விரட்டவும் வேண்டாம்; விலகி நிற்கவும் வேண்டாம்.

ஏன்?

மூத்தோர் அரவணைத்து, புதுவழியில் செல்ல ஆதரவு தரும்போது, தீமை விளையாது. நன்மையே விளையும், நேர் பார்வையில் வளரும் பயிர்போல. எனவே, வளரும் புதிய தலைமுறைப் பெண்கள்,

'காத லொருவனைக் கைப்பிடித்தே அவன்
காரியம் யாவினுங் கைகொடுத்து
மாத ரறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச் செய்து வாழ்வமடி'

என்று நிமிர்ந்து நின்று கும்மி அடிப்பது வரட்டுப்பேச்சல்ல; வெற்றுரை அல்ல; உறுதி முழக்கமாகும். அந்நிலையில்,

'பட்டங்க ளாள்வதுஞ் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டு மறிவினி லாணுக்கிங் கேபெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி'

கும்மியடிப்பது, கற்பனையாக இராது. வாழ்க்கை முறையாக உருவாகிவிடும். அப்போது வீட்டின் கதி யென்ன? இக் கேள்விக்குப் பதில் இதோ:

'சாதம் படைக்கவுஞ் செய்திடுவோம்—தெய்வச்
சாதி படைக்கவுஞ் செய்திடுவோம்'

என்று புதுமைப்பெண் கும்மியடிப்பதைக் கண்டு மகிழ் வோம். சமைப்பதற்கே நேரம் எல்லாம் என்பது, தெரி யாத காலத்து வாழ்வு.

பாரதி உருவகப்படுத்தும் பெண், கவர்ச்சிக்காக மட்டு மல்ல காதலனைத் தேடிக்கொள்ளுவது. அவள், பொறுப் புள்ள மனைவி; நம்பிக்கைக்கு உரிய குடிமகள்; கடமை உணர்வுள்ள அக் குல மகள்,

'வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும் வேண்டி வந்தோ'மென்று பெருமிதத்துடன் கும்மியடிக்கட்டும்.

காலத்தின் தேவை, புதுப் புதுநெறிகள்; குறுகிய நீதி களுக்குப் பதில், தொல்லுலக மக்களெல்லாம் வாழும் புதிய நீதிகள். உயிரை ஏற்று, உயிரைக் காத்து வைத்திருந்தது, உயிரை வெளிப்படுத்தும் தாய்க்குலத்திற்கே, புதிய நெறி களை வகுக்கும் பொறுப்பு அதிகமாக உண்டு. ஆகவே,

கண்ணைக் காக்கு மிரண்டிமை போலவே
காத லின்பத்தைக் காத்திடு வோமடா'

என்னும் மகாகவி பாரதியின் பாட்டிற்குத் தாளம் போடு வோம்.

'போற்றி தாய்' என்று தாளங்கள் கொட்டடா
போற்றி தாய் என்று பொற்குழ லூதடா'

இது நாம் அனைவருக்கும் இடப்பட்ட ஆணை. அவரை அவரை, அவரைக் கைகாட்டிவிட்டு, எங்கோ ஓடிமறைந்து விடுதல் ஆகாது.

'பெண்ண றத்தினை யாண்மக்கள் வீரந்தான்
பேணு மாயிற் பிறகொரு தாழ்வில்லை'

இதைத் தியானிப்போம். நாள்தோறும் தியானிப் போம். கடமையிலே ஒழுக்கத்திலே உறுதியாக ஊன்று வோம்.

'நலமான வீட்டைச் சுட்டால்
கூரையுந்தான் எரிந்திடாதோ'

ஆண்கள் கற்புநிலை தவறினல், பெண் குலம் எப்படி அதைக் காக்கும்? எவரும் கெடுவதற்கு, கெடுப்பவன் ஒருவன் இருக்க வேண்டுமே! அந்தக் கயவனுக, விலங்காக, நீ இருக்க வேண்டுமா?

விலகு, அக் கயமைச் சேற்றிலிருந்து. உண்மையின் ஆழத்திலிருந்து, உள்ளத்தின் தூய்மையிலிருந்து, மணி யோசையென ஒலிக்கட்டும். எது?

'பெண்மை வாழ்கென்று கூத்திடு வோமடா
பெண்மை வெல்கென்று கூத்திடு வோமடா'

என்னும் பாடல் அழைக்கட்டும், ஒழுக்கபுரிக்கு.

கொடுமை எங்கே நிகழ்ந்தாலும், அதைக் கேட்டுக் குமுறுகிறவன் மனிதன். அதைக் கண்டிக்கக் கொதித் தெழுபவன் சாதாரண மனிதன்.

'பக்கத்திலே நடக்கும் கொடுமையைத்தான் கண்டிப்பேன். அப்பால் நடப்பதைப் பாரேன். அங்கேயுள்ளவர்கள் பார்த்துக்கொள்ளட்டும் அதை' என்று ஒடுங்கிக் கிடப்பவன், முழுப் பார்வையில்லாத மனிதன்.

மனித இனம் முழுவதையும் ஒன்ருகக் கருதுபவன் மாமனிதன். நீக்ரோ, அடிமையாக விற்கப்படும் கொடுமையையும், யூதர் வேட்டையாடும் கொடூரத்தையும் தெரிந்துகொண்டும், மனம் துடிக்காது.

தன் வயிறே எல்லாம் என்று கிடப்பவன், எப்படி மனிதன் ஆவான்?

பங்களா தேசத்தவர் கற்பழிக்கப்பட்டாலும், வியட்நாம் மக்கள் சித்திரவதை செய்யப்பட்டாலும், இங்குள்ளவரும் பொங்கியெழுந்து, உயிர்க்கருணை கொப்பளிக்க முழங்கினேமே, அதுவே மெய்யான மனிதப்பண்பு. பிறிதினைத் தன்னைப் போலப் போற்றுவதே அறிவின் அடையாளம்.

அண்மையில், அடுத்துள்ள இலங்கையில் ஈழத்து மக்கள் பட்ட கொடுமைகள், கொஞ்சமா? இழந்த உயிர்கள் எத்தனை? கற்பழிக்கப்பட்ட தாய்மார்களுக்குக் கணக்கு உண்டா?

பங்களா தேசத்தில் நடந்த கொடுமைகளைக் கண்டித்து முழங்கியதுபோல், அங்கே நடந்த கொடுமைகளைக் கண்டித்தோமா?

'அது அயல் நாட்டு விவகாரம்; அதில் தலையிடக் கூடாது என்று ஆழ்ந்த தவத்தில் மூழ்கிவிடுதல்' அரசுக்குப் பொருத்தமாயிருக்கலாம்.

மக்கள் தலைவர்களும், மனித மனம் படைத்த அறிஞர்களும் அத்தகைய கூண்டுக்குள் புகுந்துகொள்ளலாமா?

வியட்நாம் விவகாரத்தில் காட்டாத போக்கு, சிலியின் தலைவர் கொலை செய்யப்பட்டபோது மேற்கொள்ளாத போக்கு, இலங்கையில் நடந்த கொடுமைகளின்போது மட்டும் மேற்கொள்ளப்படுவானேன்?

அன்று, ஆங்கிலேயன் காலடியில் ஒடுங்கிக் கிடந்தோம். அது நம்முடைய தவறு அல்ல. நம் முன்னோருடைய தவறுகளின் பலன்.

பக்கத்து இராச்சியத்தை அன்னியன் நசுக்கும்போது, உதவிக்குப் போகாது சுவைத்த போக்கு, நம் மன்னர்களிடையிருந்த பகையுணர்வு, அதனால் வளர்ந்த காட்டிக் கொடுக்கும் துரோக புத்தி ஆகியவை நம் சுதந்திரத்தைப் பறித்து, நம்மை வெளிநாட்டு அரசுக்கு அடிமையாக்கிற்று.

அந்நிலையிலும், நெடுந் தொலைவில், ஆழ்கடலின் நடுவில், விடுபட வழியின்றி புழுக்களாகத் துடித்த இந்துப் பெண்களின் வேதனையை, அவலத்தை, நெஞ்சு உருகப் பாடுகிறார் கவியரசர் பாரதியார்;

'கரும்புத் தோட்டத்திலே—ஆ
கரும்புத் தோட்டத்திலே'—ஹிந்து
மாதர் தன்னெஞ்சு கொதித்துக்கொதித்து மெய்
சுருங்கு கின்றனரே—அவர்
துன்பத்தை நீக்க வழியிலையோ வொரு
மருந்திதற் கிலையோ—செக்கு
மாடுகள் போலுழைத் தேங்குகின் றாரந்தக்
கரும்புத் தோட்டத்திலே'

என்னும் பாட்டை நாம் மறந்துவிடலாமா? இலங்கைத் தமிழர் படும் துன்பம் என்று, நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளலாமா?

'.....................தெற்கு
மாகடலுக்கு நடுவினிலே யங்கோர்

கண்ணற்ற தீவினிலே—தனிக்
காட்டினிற் பெண்கள் புழுங்குகின் றாரந்தக்
கரும்புத் தோட்டத்திலே'

என்று பாரதி பாடியபோது, பிஜித் தீவு இந்தியாவில் பகுதியல்லவே!'

பாரதி, வீரர்; முழுமனிதர்! எனவே, எங்கெங்கு கொடுமைகள் நடந்தாலும் கண்டிக்கும் ஆண்மை அவருக்கு இருந்தது.

பிஜித் தீவில் நம் இந்தியப் பெண்கள் என்ன கொடுமைக்கு ஆளானார்கள்?

மட்டிக் கங்காணியரும் பிறரும் கற்பழிக்கும் கொடுமைக்குப் பலியானார்கள்?

ஏன் அங்கே சென்றார்கள்? தாயகமா? இல்லை; புக்ககமா? இல்லை.

நம் நாட்டில் தாண்டவமாடும் சாதிக்கொடுமை ஓர் பால்; நிலப்பிரபுக்களின் கொடுமை ஓர்பால்; வறுமையின் கொடுமை ஓர்பால்; இப்படி மூன்று பக்கங்களிலும் தாங்கொணாக் கொடுமைகள்.

புதிய நாட்டிற்கு ஓடிப்போனால் வாழ்வு பிறக்குமோ என்று எண்ணி, செந்தமிழ் நாட்டு மக்கள் கூலிகளாகச் சென்றார்கள்.

தாய் நாட்டில் மதிப்பிழந்த, நிலமற்ற மக்களுக்குப் புகுந்த நாட்டில் மட்டும் மதிப்பு வந்துவிடுமா?

'நெடுந்தூரம் வந்துவிட்டார்கள்; திரும்பிப் போக முடியாது; இங்கேதான் ஒடுங்கிக் கிடக்கவேண்டும், என்பதை உணர்ந்த மனித விலங்குகள், காட்டுத் தர்பார் நடத்தினர். மீள வழியின்றி, நம் பெண்கள்–

'நெஞ்சங் குமுறுகிறார்—கற்பு
நீங்கிடச் செய்யுங் கொடுமையிலே யந்தப்
பஞ்சை மகளிரெல்லாம்—துன்பப்
பட்டு மடிந்து மடிந்து மடிந்தொரு
தஞ்சமு மில்லாதே—அவர்
சாகும் வழக்கத்தை இந்தக் கணத்தில்
மிஞ்ச விடலாமோ—ஹே
வீரகாளி—சாமுண்டி காளி!
கரும்புத் தோட்டத்திலே

முன்னணியில் நிற்கும் மக்கள், பேடியர்களாக, கோழைகளாக, ஊமையர்களாக, செவிடர்களாக, குருடர்களாக, எலும்புகளுக்குக் காத்துக்கொண்டிருக்கும் போது, பாரதி, 'காளி' யைத்தான் கூப்பிட்டாக வேண்டும்.

பிஜிப் பெண்கள் விம்மி விம்மி அழும் குரலைக்கேட்டுப் பாட அன்று பாரதியிருந்தான். இலங்கையின் அழு குரலைக் கேட்டுப் பாட?...

# 10

மனிதன் மும்முகங்கொண்டவன். மும்முகங்களிலும் தெளிவு வேண்டும்; ஒளி வேண்டும். மும்முகங்க்ள் எவை?

மொழி முக[illegible]ன்று; நாட்டு முகம் மற்றொன்று; இன முகம் மூன்றாவது ஆகும். நான் மொழிவழி தமிழன்; நாட்டு வழி இந்தியன்; இனவழியோ? மனிதன்.

ஆயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பு, எங்கள் காஞ்சியில் வாழ்ந்த அறிஞரை நிறுத்திக்கேட்டால், என்ன சொல்லியிருப்பார்?

'மொழிவழி தமிழன்; நாட்டுவழி பல்லவன்; இனவழி மனிதன்' என்று சொல்லியிருப்பார்.

அக்கால கட்டத்தில், கூடல்மாநகர வீதியில் ஒருவரை நிறுத்திக் கேட்டால், 'நான் மொழியால் தமிழன்; நாட்டால் பாண்டியன்; இனத்தால் மனிதன்' என்று பதிலுரைத்திருப்பார்.

காரைக்கால் அம்மையாரின் காலத்தில், அவ்வூர்க் குடிமகன் என்ன சொல்லியிருப்பார்? 'நான் தமிழன்; சோழ நாட்டவன்; மக்கள் இனத்தவன்' என்று பெருமைப் படுவார்.

இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில், காரைக் காலரைக் கேட்டால், 'நான் தமிழன்; பிரஞ்சு இந்தியன்; மனிதன்' என்று பூரித்திருப்பார்.

'மக்கள் இனத்தவர் நாம்,' என்பது, என்றும் உண்மை; எல்லார்க்கும் ஏற்கும். நாடு மாறுபடலாம், வரலாற்று விபத்துக்களால்; மொழி மாறுபடக் கூடாது, எளிதாக.

பாரதியாருடைய மும்முகங்களும் தெளிவாக ஒளி வீசின. அவர் நல்ல தமிழர்; நல்ல இந்தியர்; நல்ல மனிதர்!

'தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்' என்று பண்ணிசைத்த பாரதி, 'செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே' என்று பாடி மகிழ்வித்த பாரதி, தான் மானிட இனத்தைச் சேர்ந்தவர் என்பதை மறக்கவில்லை.

'காக்கை குருவி எங்கள் சாதி' என்று உயிர் ஒருமைப் பாட்டைக் காட்டிய பாரதியார், பிஜித் தீவில், இந்துப் பெண்கள் — பெரும்பாலும் தமிழ்ப் பெண்கள்—பட்ட வேதனையை அறிந்து குமுறிப் பாடினார்.

மொழி வழியோ, நாட்டு வழியோ, நம்மோடு ஒரு சிறிதும் தொடர்பு இல்லாதவர்கள் பட்ட பாட்டினையும், மேற்கொண்ட பெருமுயற்சிகளையும், மகாகவி பாரதியார் உன்னிப்பாகக் கவனித்தார்.

வாழ்ந்து சிறந்த இத்தாலி, சிதைந்து நலிந்து கிடந்ததைக் கண்டார் மாஜினி.

தாய்நாடு இணைந்து வளம்பெற முயற்சியொன்று நடப்பதைக் கண்டார். அதில் முன்னணியில் நின்றார்.

இத்தாலியின் மறுமலர்ச்சி வித்தாக இருந்த 'வாலிபர் சபைக்கு, மாஜினி, தன்னை ஒப்படைத்துக்கொண்டார். அதன் வழி, நாட்டுத் தொண்டு ஆற்றினார். இத்தாலியின் வரலாற்றில் தனியிடம் பெற்றுவிட்ட மாஜினியைப் பற்றிப் பாரதி, உளமுருகப் பாடினார்.

'மாஜினியின் சபதம்' என்னும் தலைப்பில் பாரதியார் பாடிய பாடல், ஓர் முறைக்கு இருமுறை படித்து உணரத் தக்கதாம்.

'மாசறுமென் நற்றாயினைப் பயந்தென்
வழிக்கெலாம் உறையுளாம் நாட்டின்
ஆசையிங் கெவர்க்கும் இயற்கையா மன்றோ'

என்று, மாஜினியின் வாயால் எல்லா நாட்டவர்க்கும் நாட்டுப்பற்றினை ஊட்டுகிறார்.

'கருமமுஞ் சொந்த நலத்தினைச் சிறிதும்
கருதிடா தளித்தலுந் தானே
தருமமாம் என்றும்'

மாஜினியைச் சொல்ல வைக்கிறார்.

பாரதியாரின் தருமத்திற்கான விளக்கம், ஆழ்ந்த சிந்தனைக்கு உரியதாகும். பாரதி, மாஜினியின் வழியாக,

'...............ஒற்றுமையோடு
தளர்விலாச் சிந்தனை கொளலே
பெருமைகொள் வலியாம்'

என்று அறிவுறுத்துகிறார்.

இவ்வுணர்வை நம் இளைஞர்களுக்கு நாம் ஊட்டியிருந்தால், அவர்களும் மாஜினி இத்தாலிக்கு ஈன்றதுபோன்று,

'......... எங்கள்
பொன்னுயர் நாட்டை ஒற்றுமை யுடைத்தாய்ச்
சுதந்திரம் பூண்டதுவாகி
இன்னுமோர் நாட்டின் சார்வில தாகிக்
குடியர சியன்றதாக இலக'

இந்தியாவிற்கு,

'தன்னுடல், பொருளும் ஆவியு மெல்லாம்
தத்தமா வழங்கினேன்'

என்று முன் நிற்பார்கள்.

'எங்கள் நாட்டொருமை என்னுடுங் குறிக்கும்
இச்சபைத் தலைவரா யிருப்போர்
தங்கள் ஆக்கினைக ளனைத்தையும் பணிந்து
தலைக்கொளற் கென்றுமே கடவேன்
இங்கென தாவி மாய்ந்திடு மேனும்
இவர்பணி வெளியிடா திருப்பேன
துங்கமார் செயலாற் போதனையாலும்
இயன்றிருந் துணையிவர்க் களிப்பேன்'

என்று மாஜினி மேற்கொண்ட சபதத்தை, இந்தியர்களும் மேற்கொள்ளப் பக்குவப்படுத்தவில்லையே! என்செய்வோம்?

வீரத்தின் அடையாளம் என்ன? அறைகூவலுக்கு அஞ்சாமை.

எதிரி எவ்வளவு வலியானாயினும், அவனுடைய வலிமைக்கு அஞ்சாமை, வீரத்தின் சின்னம்.

தன் உரிமையைக் காக்கப் போராடுதல் நாட்டின் வீரத்திற்கு அறிகுறி.

'கடல் அலையென்னப் பொங்கி வருகிறார்களே' என்று அஞ்சிப் பதுங்குதல், உரிமையுடைய நாட்டிற்கு அவமானம்.

வழிமறித்தது புலியேயானாலும், கையில் இருப்பது முறமேயாயினும், துணிந்து நின்று தாக்கிய பெண்ணன்றோ வீரப்பெண்மணி!

இத்தகைய நிலை, சில மேலைநாடுகளுக்கும் ஏற்படுவது உண்டு.

முதல் உலகப்போர் மூண்டது; ஜெர்மனி அதை மூட்டியது.

வெறிபிடித்த ஜெர்மனிய அரசு, பன்னாடுகளையும் விழுங்கத் திட்டமிட்டது; ஆயத்தஞ் செய்தது; வியத்தகு ஆயத்தத்தோடு புறப்பட்டது. அண்டை நாடுகளைப் படையெடுக்கப் புறப்பட்டது.

வழியிலே சின்னஞ்சிறிய நாடு; அமைதி நாடும் நாடு; பெல்ஜியத்தின் படை, ஜெர்மானியப்படை முன்னே, எம் மாத்திரம்! அது. பெல்ஜிய மக்களுக்கும் தெரியும். எலிகளா அவர்கள்? இல்லை. புலியெனப் பாய்ந்தனர்; தடுத்து நிறுத்த முயன்றனர்; தோற்றனர்; ஆயினும் என்ன?

வீரத்தின் வீச்சை உலகம் கண்டது. பாரதி கண்டார். வாழ்த்தினார்.

'அறத்தினால் வீழ்ந்து விட்டாய்
... ... ...
திறத்தினால் எளியை யாகிச்
செய்கையால் உயர்ந்து நின்றாய்'

என்று பாரதி பெல்ஜியத்திற்கு வாழ்த்துக் கூறினர். கோழைகள், ஜெர்மனியின் பராக்கிரமத்தைப் பாராட்டி மகிழும் வேளை, வீரர் பாரதியார்.

'மானத்தால் வீழ்ந்து விட்டாய்
மதிப்பிலாப் பகைவர் வேந்தன்
வானத்தாற் பெருமை கொண்ட
வலிமைதான் உடைய னேனும்
ஊனத்தால் உள்ளமஞ்சி
ஒதுங்கிட மனமொவ் வாமல்
ஆனத்தைச் செய்வோ மென்றே
அவன்வழி யெதிர்த்து நின்றாய்'

என்று பெல்ஜியத்தைப் பாராட்டுகிறார். பெல்ஜியத்தின் அன்றைய நடவடிக்கையை எதற்கு ஒப்பிடுகிறார் என்று பார்ப்போம்:

'வீரத்தால் வீழ்ந்து விட்டாய்
மேல்வரை யுருளுங் காலை
ஓரத்தே ஒதுங்கித் தன்னை
ஒளித்திட மனமொவ் வாமல்
பாரத்தை எளிதாக் கொண்டாய்
நேரத்தே பகைவன் றன்னை
பாம்பினைப் புழுவே என்றாய்
நில்லென முனைந்துநி ன்றாய்'

என்று புகழ்கிறார் பாரதியார்.

'மருளுறு பகைவர் வேந்தன்
வலிமையாற் புகுந்த வேளை
'உருளுக தலைகள் மானம்
ஓங்குகெ'ன் றெதிர்த்து நின்றாய்'

என்று பெருமைப்பட்டார் கவியரசர் பாரதியார்.

வீரன் காவல், வீரன் அறிவான் அல்லவா?

அவ்வீரம் வீண்போகுமா? அறத்தின் முடிவு வெற்றியில் என்ற நம்பிக்கையுடைய மகாகவி பாரதியார்,

'விளக்கொளி மழுங்கிப் போக
வெயிலொளி தோன்றும் மட்டும்
களக்கமா ரிருளின் மூழ்குங்
கனக மாளிகையு முண்டாம்;
அளக் கருந்தீ துற்றுலும்
அச்சமே யுளத்துக் கொள்ளார்
துளக்கற ஓங்கி நிற்பர்;
துயருண்டோ துணி வுள்ளோர்க்கே!

என்று தனது பெல்ஜிய வாழ்த்தை முடிக்கிறார்.

அன்று அவர் பெல்ஜிய நாட்டிற்குக் கூறிய நம்பிக்கை, அடிமைப்பட்டுள்ள எல்லா நாடுகளுக்கும் ஊட்டும் நம்பிக்கையாகும்.

இந்த நம்பிக்கை உணர்வு, மக்கள் உணர்வில், உயிரில் கலந்துவிட்டால், அப்புறம் எந்நாட்டவரும்,

'போருக்குக் கோலம் பூண்டு
புகுந்தவன் செருக்குக் காட்டை
வேருக்கும் இடமில்லாமல்
வெட்டுவோம் என்று...

நிமிர்ந்து நிற்க இயலும்.

மக்க்ள் இன வரலாறு எத்தகையது?

ஓர் கோணத்தில் நின்று பார்த்தால், அது கோழைகளைப் போக்கிரிகள் அடிமைப்படுத்திய, கொடுமைப் படுத்திய, தொடர்கதையாகத் தோன்றும்.

அப்பாவி மக்களை, அறியாமையிலே ஆழ்த்தி வைத்து, நரிக்குணத்தார் கொக்கரித்த தீமையின் தொடர்பேயாகும்.

உலக வரலாற்றில், அநேகமாக எல்லா நாடுகளுமே, தடியெடுத்தவனுக்குக் கொடி பிடித்த கோழைகளைக் கொண்டிருந்தது.

'கஞ்சி குடிப்பதற்கிலார்; அதன் காரணம் இவை யென்றறிவு மிலார்' தான், பொது மக்கள் என்பதே, பல நாட்டு நீண்ட நாள் படப்பிடிப்பு.

உடம்பில் எங்கோ சுரக்கும் சீழ், எங்கோ சேர்ந்து கட்டியாகி உடைவதுபோல், சிற்சில வேளை, இந்நாட்டி லும் அந்நாட்டிலும் தாங்கொணாக் கொடுமை, அடக்கு முறை, புரட்சியாக வெடிப்பதுண்டு.

அத்தகைய புரட்சியொன்று, ஜார் மன்னன் ஆண்ட இரஷ்ஷியாவில் வெடித்தது.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பதினேழாம் ஆண்டு, அக்டோபர் திங்கள் வெடித்த அப் புரட்சி, உலகை உலுக்கியது.

உலகின் முதல் சமதர்ம நாட்டை உருவாக்கியது.

உலகத்தின் ஆறிலொரு நிலப்பரப்பை, புதிய பாதை யில் செலுத்திற்று.

அந்நிகழ்ச்சி, பாரதியாரின் கவனத்தை ஈர்த்தது.

அன்னிய ஆட்சி வெகுளுமே என்று அஞ்சுபவரல்லவே பாரதியார்!

ஆதரிக்கும் செல்வர்கள் என்ன நினைப்பார்களோ என்று தயங்கவில்லை மகாகவி பாரதியார்.

அக்டோபர் புரட்சியை வாழ்த்தி வரவேற்றுப் பாடி னார். காந்தியடிகளே வரவேற்ற புரட்சியல்லவா அது!

புரட்சிக்கு முந்திய இரஷ்ஷியா எப்படி இருந்தது? பாரதியே காட்டட்டும்:

'உழுதுவிதைத் தறுப்பாருக் குணவில்லை;
பிணிகள் பலஉண்டு; பொய்யைத்
தொழுதடிமை செய்வார்க்குச் செல்வங்க
ளுண்டு; உண்மை சொல்வோர்க் கெல்லாம்

எழுதரிய பெருங்கொடுமைச் சிறையுண்டு;
தூக்குண்டே யிறப்பதுண்டு;
முழுதுமொரு பேய்வனமாஞ் சிவேரியிலே
ஆவிகெட முடிவதுண்டு'

அது மட்டுமா? மேலும் படியுங்கள்:

'பொய்க்கூது தீமையெல்லாம்
அரணியத்திற் பாம்புகள்போல் மலிந்து வளர்ந்
தோங்கினவே அந்த நாட்டில்'

பாரதியாரின் படப்பிடிப்பு உண்மை; வெறும் அவதூறல்ல. இருக்கட்டும்.

கொடுமையைக் கண்டு கொந்தளிக்கும் மனிதர்களும் இருந்திருப்பார்களே! இருந்தார்கள். சொல்லால், எழுத்தால், அநீதியைச் சுட்டிக் காட்டியவர்கள் அந்நாட்டில் வாழ்ந்தார்களா? வாழ்ந்தார்கள். பொதுமக்கள் தற்குறிகளாகக் கிடக்கும் நிலையில், சோற்றை மட்டுமே சிந்திக்கும் நிலையில், மக்கள் தொண்டர்களுக்கு,

'இம்மென்றால் சிறைவாசம்; ஏனென்றால்
வனவாசம்; இவ்வாறங்கே
செம்மையெலாம் பாழாகிக் கொடுமையே
அறமாகித் தீர்ந்தது'

எல்லாக் கொடுமைகளுக்கும் அடக்குமுறைகளுக்கும் ஒரு முடிவு உண்டு. அம் முடிவு நாட்டு மக்களில் பெரும்பாலோர் புரட்சியாளர்களாகும் வரை காத்திருப்பதில்லை.

வயிற்றுப்பாட்டிற்காகவும் சட்ட ஆட்சிக்காகவும் கோடானுகோடி இந்திய மக்கள் ஆங்கில ஆட்சியைப் பொறுத்துக்கொண்டிருந்தார்கள். இந்திய விடுதலைக்குப் போராடியவர்கள், மக்கள் எண்ணிக்கையில் சிறுபான்மையினரே!

'அவர்கள் பலர்; இவர்கள் சிலர்' என்ற போதிலும் இவர்களே வெற்றி பெற்றார்கள். இந்தியாவிற்குத் தன்னாட்சி கிடைத்தது.

அதேபோல், இந்தியா விடுதலை பெறுவதற்கு முப்ப தாண்டுகளுக்கு முன்பே, இரஷ்ஷியாவில் புரட்சி வென்றது. மக்கள் வென்றார்கள். விளைவு என்ன? பாரதியார் பாடட்டும்;

'குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு
மேன்மையுறக் குடிமை நீதி
கடியொன்றி லெழுந்ததுபார்; குடியரசென்று
உலகறியக் கூறிவிட்டார்;
அடிமைக்குத் தளையில்லை யாரு மிப்போது
அடிமையில்லை அறிக என்றார்;
இடிபட்ட சுவர்போலே கலிவிழுந்தான்:
கிருதயுகம் எழுக மாதோ!

சுப்ரமணிய பாரதியாரின் வாழ்த்துப் பலித்துவிட்டது.

## 11

தாய் மொழியாம் செந்தமிழைப் போற்றிப் பாடினார் பாரதியார்.

தாய் நாடாம் பழம்பெரும் பாரதத்தின் விடுதலைக்கு முழக்கமிட்டார், மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.

மக்களின் இனஒருமைப்பாட்டை நினைவுபடுத்துவதற்கு அடையாளமாக, பிறநாட்டு வரலாற்றுச் சாதனைகளை, வீரச்செயலை, புரட்சியைப் போற்றிப் பாடினார் பாரதியார். அதோடு நின்றாரா? இல்லை.

சில தனி மனிதர்களையும் போற்றிப் பாடினர், பாரதியார். ஏன் தனி மனிதர்களைப் புகழ்ந்தார்? என்ன ஆதாயம் தேடினர், அவற்றின் வழியாக?

எட்டையபுரம் குறுநில மன்னர், பாரதியின் புரவலர், வெங்கடேசரெட்டப்ப பூபதியைப் பற்றிப் புகழ்ந்து பாடிய பாடல்களில் வேண்டுமானுல், தாட்சண்யம், நன்றியுணர்வு எதிர்பார்த்தல் இழையோடி இருக்கலாம். அவற்றை விட்டு விடுவோம்.

'தமிழ்த் தாத்தா', மகாமகோபாத்தியாயர் சாமிநாதய்யர் அவர்களைப் போற்றிய பாடல், எதையும் எதிர்பார்த்துப் பொங்கவில்லை.

பாரதி, அய்யரைப் போற்றுங்காலை, அய்யரே செல்வர் அல்லர்.

எனவே, அவரிடம் எதை எதிர்ப்பார்க்க முடியும்? பொருட் செல்வத்தையல்ல; தமிழ்ச் செல்வத்தையே நாடினர்.

அச்சுப்பொறி தெரிந்துகொண்டபின் தோன்றிய மொழியாயின், அம்மொழியின் இலக்கியம் அனைத்தும் அச்சு நூல்களாகவே உருப்பெற்றிருக்கும்.

அப்படி உருப்பெறினும், எல்லா நூல்களையும் பாதுகாத்து வைப்பார்கள் என்று சொல்வதற்கில்லை.

அறிவின்பால் நாட்டம், எதிர்காலத்தின் மேல் நம்பிக்கை, தொலைநோக்கு, பொறுப்புணர்ச்சி, இத்தனையும் உடையவர்கள் பலர் இருக்கும் சமுதாயத்தில், நூல்கள் பாதுகாக்கப்படும்.

இவை இல்லாத சமுதாயங்களில், அச்சேறிய நூல்களும் சிதறிப்போகும்; காணுமற்போகும். தலைசிறந்த நூ-

களும் சிறு பிள்ளைகள் நிலையில் நின்றுவிட்ட மக்களிடம் அழிந்து போகும்; அரை நூற்றாண்டிலேயே, பொய்யாய்ப் பழங்கதையாய், மிகையாய்ப் போய்விடும்.

செந்தமிழோ மூத்தமொழி; அச்சுப்பொறி தெரிவதற்குப் பல ஆயிரம் ஆண்டுகள் முன்னதாகவே, இலக்கியக் கனிகளை ஈன்று வரும் செம்மொழி.

எப்போதோ ஓர் முறை, ஒரே ஒரு இலக்கியத்தை மட்டும் ஈன்றுவிட்டுத் தூங்கிவிட்ட மொழியல்ல.

ஈராயிரம் ஆண்டுகளாக, இடையறாது இலக்கிய வளம் பொழிந்து வரும் வன்மொழி, நம் தாய்மொழி.

பழந்தமிழ் இலக்கியங்கள், நெடுங்காலம் அச்சேறவில்லை; பனை ஓலையில் எழுத்தாணிகொண்டே எழுதப்பட்டன.

கவி, பொங்கப் பொங்கப் பதிந்துகொள்ளும் பதிவு முறையைப் போன்று எளிதானதல்ல, இம்முறை; கையொடிய எழுதியாக வேண்டும்.

எனவே, இக்காலம்போல், முற்காலத்தில், எவ்வளவு தலைசிறந்த இலக்கியமாயினும், ஆயிரக்கணக்கான படிகள் எடுக்க இயலாது.

ஒரு சில படிகள் எழுதி வைப்பதே அருமை. அப்படிகள், செல்வர்கள், புலவரேறுகள் முதலியவர்களிடமே அடைக்கலம் புகும்.

தொடர்ந்து வந்த குழப்பங்கள், அவற்றால் வாழ்க்கையின் பேரிலேயே விளைந்த வெறுப்புகள், அருமை தெரியாத் தலைக்கனம் ஆகியவை, பாதுகாப்பைத் தளர்த்திவிட்டன; பல வேளை அழிக்கவும் துணையாயின.

என்று பாரதியார் போற்றுகிறார். துதி வேண்டுமானால் சில வேளை உதட்டளவே ஆகலாம். நெஞ்சில் வாழ்தல் அப்படி யல்லவே.

இக்கூற்று உண்மையா? மயக்கா? விளக்கொளி கண்டு திரியில் வீழ்ந்து மடியும் பூச்சிகள் போன்று, பண ஒளியில் மயங்கி, அதைத்தேடி, வாழ்வை வீணாக்கும், வாய்ப்பினைப் போட்டுடைக்கும், மக்கள் செறிந்தது, இக்காலம்.

'காசு பணமே எல்லாம்' என்னும் மனநோய் முற்றி மிகுந்துள்ள இக்காலத்திற்கு, 'நிதியறியாத் துதி' அற்ப மாகவே தோன்றும்.

மக்கள் இன வரலாற்றில்,எந்த நாட்டில், எந்தமொழி யில், செல்வர் என்பதற்காக, தானே எல்லாம் என்று ஆண்டவன் என்பதற்காக, இறந்தும் இறவாப் புகழுடை யோரைக் காண முடிகிறது?

ஒரே வேளை, செல்வர் நினைவு, சில பல தலைமுறை களுக்குப் பசுமையாக நிலைப்பது உண்டு.

அதுவும், அவர்களுடைய செல்வக் குவியலுக்காகவும் அல்ல; அவர்கள் புலமைக்காகவும் அல்ல; அவர்கள் செய்து முடித்த தொண்டிற்காகவே, அறங்களுக்காகவே நினைக்கப் படுகிறார்கள்!

தமிழ் உள்ளவரை, சாமிநாதய்யர் புகழ் தொடரும் என்பது ஆறுதல் மொழியல்ல; மயக்க மருந்தல்ல; ஒளிவிடும் உண்மை.

மூன்று இலட்சம் ஆண்டுகள் மானுடத்தின் வயது என்பது வல்லுனர்கள் கூற்று. இத்தனை நீண்ட காலத்திற் குப் பிறகும், ஏராளமானனர்கள் சீரிய சிந்தனையாளர் களாக வளரவில்லை.

சிந்தனைகளின் சிகரத்துக்கு இணையான அறிவு கொண்டவர்கள் சிலரே.

இரண்டும் பெற்ற மனிதரும் சிலரே, கோடிக்கணக்கானவர்களின் இதயங்களில் இடம்பெறும் நிலைக்கு உயர்கிறார்கள்.

அத்தகையோர் எப்படி உயர்கிறார்கள்? உள்ளத்தில் உண்மையொளி உண்டானால், வாக்கிலும் தூய்மையைச் சேர்த்த உண்மையை வெளியிட்டால், மக்களோடு மக்களாக, எளிய, தூய்மையான வாழ்வு வாழ்வதால், விரல்விட்டு எண்ணிவிடக்கூடிய சிலர், உலகம் போற்றும் பெரியோர்களாகச் சுடர்விடுகிறார்கள்.

அத்தகைய சான்றோர், சாதனையாளர் ஒருவர் நம் பாரதத்தில் தோன்றினார்; வாழ்ந்தார்; நமக்காக வாழ்ந்தார். நாட்டின் விடுதலைக்கு சாதிச் சார்பற்ற ஒருமைப்பாட்டு சமுதாயத்திற்காக, எல்லோரும் வாழும் சமுதாய மலர்ச்சிக்காக, வாழ்நாள் முழுவதும் அயராது பாடுபட்டார்.

அவர் எவர்? அவரே அண்ணல் காந்தியடிகள் ஆவார்.

மண்ணாங்கட்டிகளையெல்லாம் மனிதர்களாக்கிய மகாத்மா, வீடுகளில் அடைபட்டுக்கிடந்த இந்தியப் பெண் இனத்தை விடுதலைப் போராட்டத்தில் வீரப் பங்குபெறச் செய்தார்.

கொலைவெறி கொண்டு திரிந்தவர்களிடையே, தானே நடந்து சென்று அருள் பொழிந்த அறவோரின் வாழ்க்கை நுட்பங்கள், நமக்கு விளங்க ஆண்டுகள் பலவாகும். உலக விஞ்ஞானிகளில் சிறந்தவரான ஐன்ஸ்டீன் என்பார்:

"காந்தியைப் போன்ற ஒரு மனிதர் நம்மோடு வாழ்ந்தார் என்பதை எதிர்காலத் தலைமுறைகள் நம்ப மறுக்கும்!" என்று, ஏத்தினைச் சுருக்கமாகப் போற்றினார்.

இத்தகைய சிறப்புக்குரிய 'அற்புத' மனிதராகிய காந்தியடிகளைப் போற்றி, பாரதி பாடியதைப் படிப்போம்:

'வாழ்க நீ! எம்மான்
இந்த வையத்து நாட்டிலெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டு
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மகாத்மா! நீ வாழ்க! வாழ்க!
அடிமை வாழ்வகன்றிந் நாட்டார்
விடுதலை யார்த்துச் செல்வம்
குடிமையி லுயர்வு, கல்வி
ஞானமும் கூடி யோங்கிப்
படிமிசைத் தலைமை யெய்தும்
படிக்கொரு சூழ்ச்சி செய்தாய்
முடிவிலாக் கீர்த்தி பெற்றாய்!
புவிக்குளே முதன்மை யுற்றாய்!'

நீண்ட அடிமைத்தனத்திற்குப் பிறகு, நம் இந்தியா அரசியல் விடுதலை பெற்றது. அதற்காகப் பாடுபட்டவர்கள் பல இலட்சக் கணக்கானவர்கள்; தியாகஞ் செய்தோரும் இலட்சக்கணக்கில்.

அனைவருக்கும் எழுச்சியூட்டிய மாபெரும் உரிமை மின் பொறியாக விளங்கியவர், அண்ணல் காந்தியடிகள் ஆவார்.

இந்திய விடுதலைக்குக் காந்தியடிகள் ஆற்றிய தொண்டு இணையற்றது; புதுமையானதும் ஆகும்.

பன்னெடுங்காலமாக, அரசியல் என்றால் சூதும் வாதும் செறிந்தது என்பதே பொருள்.

காந்தியடிகள், இந்திய விடுதலை இயக்கத்திற்குத் தலைமையேற்ற பிறகு அந்நிலையை மாற்றிக் காட்டினார்.

கத்தியின்றி, இரத்தமின்றி, யுத்தமொன்று நடத்த முடியும். அத்தகைய அறப்போராட்டத்தின் ஆற்றல் பெரிது, விளைவும் பெரிது.

விளைவுக்காலமோ குறுகியது. இவற்றை உலகிற்கு எடுத்துக்காட்டிய பெருமை அண்ணல் காந்தியைச் சேரும்.

இதை நினைத்தே, ஐன்ஸ்டீன் மேற்கூறியவாறு பாராட்டினார்.

அறவழி விடுதலைப் போராட்டம் காந்தியடிகளின் வியத்தகு கண்டுபிடிப்பாகும். அதைக் கோடிட்டுப் பாரதியார் போற்றுகிறார்.

'விடிவிலாத் துன்பஞ் செய்யும் பராதீன
வெம்பிணி யகற்றிடும் வண்ணம்
படிமிசைப் புதிதாச் சாலவும் எளிதாம்
படிக்கொரு சூழ்ச்சிநீ படைத்தாய்!

அச் சூழ்ச்சியின் சிறப்பைக் காட்டுகிறார் பாரதியார்:

'தன்னுயிர் போலே தனக்கழி வெண்ணும்
பிறனுயிர் தன்னையும் கணித்தல்;
மன்னுயிரெல்லாம் கடவுளின் வடிவம்
கடவுளின் மக்களென் றுணர்தல்;
இன்னமெய் ஞானத் துணிவினை மற்றுங்கு
இழிபடு போர்; கொலை, தண்டம்
பின்னியே கிடக்கும் அரசிய லதனில்
பிணைத்திடத் துணிந்தனை, பெருமான்!'

அவ்விணைப்பில் பிறந்த சீலக்குழந்தை 'ஒத்துழையாமை'. அதன் பெருமையைப் பாரதியின் பாட்டால் உணர்வோம்.

பெருங்கொலை வழியாம் போர்வழி இகழ்ந்தாய்
அதனிலுந் திறன்பெரி துடைத்தாம்

அருங்கலை வாணர் மெய்த்தொண்டர் தங்கள்
அறவழி யென்று நீ அறிந்தாய்;
நெருங்கிய பயன்சேர் 'ஒத்துழை யாமை'
நெறியினால் இந்தியா விற்கு
வருங்கதி கண்டு பகைத்தொழில் மறந்து
வையகம் வாழ்கநல் லறத்தே.

தன்னாட்சி பெற்ற இந்தியா, அமைதி நாடும் நாடு. எனவே, இராணுவக்கூட்டுச் சேரா நாடு. நாடுகளுக்கிடையில் ஏற்படும் வழக்குகளை, போர்க்களங்களில் அல்லாது, கூடிப்பேசித் தீர்த்துக்கொள்ளும் அமைதிக்கொள்கையை ஆதரிக்கும் நாடு. இக்கொள்கையை உருவாக்கியவர் பிரதமர் நேரு. அவ்வுணர்ச்சியை அவரிடம் ஏற்றி வைத்தவர் காந்தியடிகள்.

மக்கள் இன, பல்துறை வளர்ச்சிகளுக்கும், முன்னேற்றங்களுக்கும், மறுமலர்ச்சிக்கும் மூலவர்களாக விளங்குவோர் சிலருண்டு.

பெருஞ்சுனையாகும் அப்பெரியோர்களின் கருத்துக்களும் நெறிகளும் தொண்டுகளும் கண்டு பிடிப்புகளும் மானுடத்தை உருவாக்குகின்றன.

அத்தகைய பெரியோர்களாகிய குரு கோவிந்தர், தாதாபாய் நவுரோஜி, திலகர், லஜபதிராய், வ. சி. சிதம்பரனார் ஆகியோரைப்பற்றி, பாரதியார் பாடியுள்ள பாடல்கள், நம் கவனத்திற்குரியன.

லஜபதியைப் பற்றிப் பாரதியார் பாடிய இரு பாடல்களையும், நான் பலமுறை நினைவுகூர்ந்து, உருகி ஆறுதல் பெற்றதுண்டு.

வேண்டாதவர்களையெல்லாம் விதம் விதமாகக் கொடுமைப்படுத்தும், இருட்டடிக்கும் தீயபோக்கு, தன்

கண்களை மூடிக்கொண்டு உலகம் இருண்டுவிட்டதாக நினைத்து மகிழும் பூனைப்புத்தி, இன்றும் தொடரும் நோய்.

இந்நோய் அன்றைய ஆங்கில ஆட்சியைக் கௌவிக் கொண்டது. லஜபதியை நாடு கடத்தியது அன்றைய கண்மூடி ஆட்சி.

பாரதி இவ்வறியாமையைச் சாடுவதைப் படியுங்கள்:

'விண்ணகத்தே இரவிதனை வைத்தாலும்
அதன் கதிர்கள் விரைந்து வந்து
கண்ணகத்தே ஒளிதருதல் காண்கிலமோ?
நின்னையவர் கனன்றிந் நாட்டு
மண்ணகத்தே வாழாது புறஞ்செய்தும்
யாங்களெல்லாம் மறக்கொணாதெம்
எண்ணகத்தே லாஜபதி, இடையின்றி
நீவளர்தல் என்செய்வாரோ?

'ஒரு மனிதன் தனைப்பற்றிப் பலநாடு
கடத்தியவர்க் குறுமை செய்தல்
அருமையிலை; எளிதினவர் புரிந்திட்டா
ரென்றிடினும் அந்த மேலோன்
பெருமையைநன் கறிந்தவனைத் தெய்வமென
நெஞ்சினுளே பேணிப் போற்றி
வருமனிதர் எண்ணற்றார்; இவரையெல்லாம்
ஓட்டியெவர் வாழ்வ திங்கே?'

இது உள்ளம் உருக்கும் பாட்டல்லவா?

புல் முளைக்கிறது; வளர்கிறது; ஆடு மாடுகளுக்கு உண வாகிறது. இல்லையேல் தானே பட்டுப்போகிறது.

பசுங்கன்று பிறக்கிறது; வளர்கிறது; காளையாகிறது; ஏர் உழுகிறது; வண்டி இழுக்கிறது; பொட்டென்று வீழ்கிறது.

மாக்களுக்குச் சித்தம் இல்லை; சிந்தனை இல்லை; இலட் சியம் இல்லை; முயற்சி இல்லை. பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நந்திகளும், யானைகளும் எப்படி இருந்தனவோ, அப்படியே இக்கால நந்திகளும் யானைகளும் இருக் கின்றன. அவற்றின் நிலை இருத்தல்; வாழ்தல் அல்ல.

மக்கள் நிலை, மற்ற உயிர் இனங்களில் நிலையல்ல; பிற வற்றிற்கு மாறானது. கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே பிறந்த மனிதர்கள், இன்று அதே நிலையிலா இருக்கிறார்கள்? இல்லை.

இக்கால மக்கள் எவ்வளவோ விதங்களில் மாறியுள் ளார்கள்; பல துறைகளிலும் மாறி வாழ்கிறார்கள்.

உடையில் மாற்றம்; உணவில் மாற்றம்; உறையுளில் மாற்றம்; வழிபடுதலில் மாற்றம்; பழக்க வழக்கங்களில் மாற்றம்; அமைப்புகளில் மாற்றம்; பொழுது போக்கும் வகைகளில் மாற்றம்!

இத்தனை மாற்றங்களும் எப்படி நிகழ்ந்தன? சிந்தனை யால் விளைந்தன. அத்தனை பேரும் சிந்தித்தார்கள் என்று சொல்ல முடியாது.

தலைமுறைக்குத் தலைமுறை, ஒரு சிலர், தம்மை மறந்து உலகை நினைத்துச் சிந்தித்தார்கள். சான்றோர்களின்

சீரிய சிந்தனைகள் புதிய வெளிச்சங்களை, வழிகளைக் காட்டின; மக்களிடம் இழையோடியுள்ள தன்னல உணர்வை, விலங்குப் போக்கை, இழிதன்மையை அவிப்ப தற்குத் துணை நிற்கின்றன.

பலருடைய வழிபாடு, தன்னலத்திற்காக என்பதை அறிவோம்; இம்மையில் வளமும், வசதியும் பெருகும்படி வேண்டுவதே, மக்கள் மரபாக உள்ளது. அம் மரபிலிருந்து விடுபடுதல் அரிது.

இறை உணர்வுடைய கவியரசர் பாரதியார், பல தோத்திரப் பாட்டுகளைப் பாடியுள்ளார். பல வரங்களைக் கோருகிறார்:

'காணிநிலம் வேண்டும்—பராசக்தி
காணிநிலம் வேண்டும்—அங்கு
தூணில் அழகியதாய்—நன்மாடங்கள்
துய்யநி றத்தினதாய்—அந்த
காணிநி லத்திடையே—ஓர் மாளிகை
கட்டித் தரவேண்டும்'

என்று பாரதியார் பராசக்தியை வேண்டும்போது, பல பக்தர்கள், 'உம்' அவரும் நம்மைப்போன்றே, நீரும் நிலமும் சொத்தும் சுகமும் வேண்டுமென்று வழிபடுகிறாரே என்று நொடிப்பொழுது நினைப்பார்கள்.

தொடர்ந்து அந்தக் கவிதையைப் படித்தால் நினைப்பிலே மாற்றம் ஏற்படும்; அறிவிலே தெளிவு ஏற்படும்

மனிதன் சிந்திக்க வேண்டியவன், விரும்ப வேண்டியவன். எதை எதையோ சிந்தித்து அழுக்காதல் சரியல்ல. கண்டதையெல்லாம் விரும்பி விழைந்து, நாடித் தேடி நலிவது சிறப்பல்ல.

உயர்ந்ததை உள்ளல் நமக்குச் சிறப்புச் செ
நன்மை—எல்லோர்க்கும் நன்மையை நாடுதல்—ந
நல்லது; பிறர்க்கும் நல்லது.

நினைப்பும் நாட்டமும் அவாவாக மாறக்கூடாது.
வளர்ச்சி தேவை; உடல் ஊதலோ மிக மிகக் கெடுதி

உலக வாழ்விற்கு அளவோடு கூடிய பொருட்செ
தேவை; அதுவே ஊதிவிடும்போது, குவிந்துவிடும்
கெடுதி. உடையவனுக்கும் கெடுதி; உலகிற்கும் கெடு

எனவே, உலகச் சமயங்கள் அனைத்தும் அவாவறு
வலியுறுத்தக் காண்கிறோம்.

வறுமை, பட்டினி, பணமுடை ஆகியவ
அடிக்கடி தோழமை கொண்டவர்கள், அவற்றி
விடுபட விழைவது, இயற்கை அது இயற்கை அள
வளர்ந்து உரம்பெற்ற உடலைப் போன்றது. கெடுதி
வருகிறது?

விழைவு தீராத அவாவாக ஊதி அலைக்கழி
போது, பொருள் உடையோர்க்கும் இவ்வுலகம் இ
தாகிவிடுகிறது.

தேவைக்கு மேல் குவிந்த செல்வத்தைக்
வேண்டுமே என்னும் கவலையில் மீண்டும் மீண்டும் மூ
திணறுகிறார்கள். விழித்திருக்கையில் மட்டுமா
வைக்கும் கவலை? இல்லை; உறங்கக் கண்மூடினாலும் க
இதே கவலை!

இதனால் எத்தனை பேருக்கு அஞ்சவேண்டியவர்
விடுகிறார்கள்? எத்தனை பேர்களின் தயவுக்
பல்லிளிக்க வேண்டியிருக்கிறது?

எவர் எவருக்கோ சந்தனம் பூசவேண்டிய நிலை
தங்களைத் தாங்களே தள்ளிக்கொண்டு தவிக்கிறா

எல்லா அவலங்களுக்கும் கருவறை அளவாகும்.

பாரதி, அவாவின்மை என்னும் நன்னெறியைப் பின் பற்றுகிறார். எனவே வேண்டுதலின்போதும் காணிநிலத் திடையே பத்துப் பன்னிரெண்டு தென்னை மரங்களையே கோருகிறார். இது நமக்கு நல்ல படிப்பினையாகும்.

ஆசைக்கு அளவிட்டுக்கொண்டு, இயற்கை இன்பத் தையும் இசை இன்பத்தையும் காதல் இன்பத்தையும் கேட்பதில், வெறுக்கத்தக்கதோ, குறைக்கத்தக்கதோ ஒன்றும் இல்லை வெட்கப்படாமல் யாரும் வேண்டிக்கூடிய இன்பத்தைப் பாரதியார் விரும்புவது எதற்காக?

தன்னுடைய சுகத்திற்காக மட்டுமல்ல. இளம்பயிர், நீரை ஏற்பது, தன்னலத்தால் மட்டுமல்ல; வளர்ந்து விளைந்து பயன்படுவதற்காகவும். அதே போல், சுப்ரண்ய பாரதியாரும்,

> ............எங்கள்
> கூட்டுக் களியினிலே—கவிதைகள்
> கொண்டு தரவேணும்'

என்று பாரசக்தியை வேண்டுகிறார்.

எதற்காகக் கவிதை? பிழைப்பதற்காக அல்ல; செல்வத்தைத் திரட்டிக் கொள்ள அல்ல; புகழ் மலைக்கு ஏறிப்போகக் குறுக்கு வழி அல்ல. பின் எதற்கு?

> ...என்றன்
> பாட்டுத் திறத்தாலே—இவ்வையத்தை
> பாலித்திட வேணும்'

என்பது மகாகவி பாரதியாரின் வேண்டுதல். இதுவே அறிவிலும், கருணையிலும் முதிர்ச்சி அடைந்த மனி தருடைய நோக்குமாகும்.

எனவே கவிஞர்களும் எழுத்தாளர்களும், சொல்லே ருழவர்களும் அறிவுக்கடல்களும், வையத்தொண்டிற்கே தத்தம் திறமை வாய்த்துள்ளது என்பதை உணர்ந்தால்? தென்னையின் கீற்றுப் போன்றவை தமக்கு வாய்க்கும் பிழைப்பும் நிதியும் புகழும் செல்வாக்கும் என்று தெளிந்தால்? வையத்தின் தொல்லைகளில் பல விரைந்து உதிர்ந்துவிடும் என்பது உறுதி.

## 13

பாரதியாரின், 'காணி நிலம் வேண்டும்' என்னும் பாட்டைப் போன்றே அவருடைய 'நல்லதோர் வீணை' என்னும் பாட்டும் நம் கவனத்திற்குரியதாகும்.

பருவம் கடந்துவிடாதவர்கள் மனப்பாடஞ் செய்து கொள்ளுதல், நல்லது. ஏன்? இது அடிக்கடி நினைவில் மின்னுமானால், சோர்வும் சலிப்பும் மின்னலின் விரைவில் மறையும்.

பணக்கட்டோ, ஜனக்கட்டோ இல்லாத எளியேனிடம், இருபத்து நான்கு ஆண்டுக்கு முன்பு, சென்னை மாநிலப் பொதுக்கல்வி இயக்குநர் பொறுப்பு வந்தடைந்தது.

அப்போது, ஆசிரியர் சமுதாயம் தளர்ந்திருந்தது. ஆனால், இப்பாடலை நான் ஒப்புவிக்கக் கேட்டு அயர்வை உதறினர்; ஆர்வம் பொங்கிற்று, செயற்கரிய செய்தார்கள்.

நம் சமுதாயத்தில், கைவினைஞர்கள் சிலரே. எளிய கைவினைகளைக்கூடத் திறம்படச் செய்யும் ஆற்றலை நாம் பரவலாக வளர்க்கவில்லை.

இசைக்கருவிகளைச் செய்யும் கைத்திறன் நுட்பமானதாகும். இதை எங்கோ சிலரிடமே, காண்கிறோம்

அரிதாகிய கைவண்ணத்தால், ஒருவர், வீணையைச் செய்கிறார். அறிவையும் திறமையும் உணர்வையையும் ஒருமுகப்படுத்திச் செய்யப்பட்ட அவ்வீணை நல்லதாகவும் அமைகிறது.

அது செல்வர் வீட்டுக் காட்சிப்பொருளாக நின்று விடலாமா? ஆகாது. வாழ்ந்த இசைஞரை நினைவுபடுத்தும் நினைவுச் சின்னமாக நிற்கலாமா? ஆகவே ஆகாது. புழுதியில் போட்டுவிடும் குப்பையா அது? இல்லை!

நல்லதோர் வீணை செம்மையாகிப் பயன்பட வேண்டும். வேடிக்கைப் பொருளாக அல்ல; வேறு வகையாக. இசை பொழியும் கருவியாகும்போதே, அது, 'பிறவிப்பயனை' அடைகிறது.

பிறவிப்பயனை அடைய நன்றாகச் செய்யபடுதல் போதாது. அதைத் தடவி இசை எழுப்பக்கூடிய திறமையாளரிடம் அது சிக்கவேண்டும். அது மட்டுமா? மற்றொன்றையும் கவனிக்க வேண்டும்.

சரியாகச் செய்த வீணையைத் திறமையாக இயக்கத் தெரிவதோடு, எதற்கு வாசிக்கவேண்டும் என்பதையும் தெளிந்தவர் கையில் அது பயன்படவேண்டும். அப்போது அவ்வீணைக்குச் சிறப்பு; அந்நிலையிலேயே, அது, இன்பமூட்டும்; உயர்த்தும்; அமைதிப்படுத்தும்.

பாரதியார் தன்னம்பிக்கை நிறைந்தவர். தன்னிடம் அறிவு இருப்பதை உணர்ந்தவர்; அவ்வறிவு மொக்கையல்ல; ஒளிவிடும் கூர்மையுடையது.

அது காட்சிப் பொருளாக நின்று பாழாகக் கூடாது. 'இப்படிப்பட்ட பேரறிஞன் எங்களில் இருந்தான்' என்று

வரும் தலைமுறைகள் நினைவுபடுத்திக் கொண்டு, இறும்பூது எய்துவதற்கு மட்டுமே அது பயன்படுவதும் முறை.

அறிஞனுடைய அறிவு உலகிற்குப் பயன்படவேண்டும். ஞாயிறு, உலகம் முழுவதற்கும் பயன்படுகிறது. அதுபோல் பாரதியாருடைய 'சுடர்மிகு அறிவு' பெரும் உலகத்திற்கு உதவவேண்டும்.

இப்படிப் பாரதியார் வேண்டிக்கொள்ளுகிறார். அப் பாடலைப் பாருங்கள்:

நல்லதோர் வீணைசெய்தே—அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?
சொல்லடி சிவசக்தி எனைச்
சுடர் மிகும் அறிவுடன் படைத்து விட்டாய்
வல்லமை தாராயோ—இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே?
சொல்லடி சிவசக்தி—நிலச்
சுமையென வாழ்ந்திடப் புரிகுவையோ?'

'சிவசக்தியை ஏற்றுக்கொள்ளுகிறவர்களே, படித்து சிந்திக்கவேண்டிய பாடல் என்று எண்ணி, இதை ஒதுக்கி விட வேண்டாம்.

இப்பாடலின் உயிர்நாடிகள் இரண்டு. நிலச்சுமையென வாழக்கூடாது என்பது ஒன்று; மாநிலம் பயனுற வாழ வேண்டும் எனபது மற்றொன்று.

படைப்பை நம்பாதவர்களும் ஒப்புக்கொள்ளும் இலட்சிய நாடிகள் இவை இரண்டும்.

அறிவு—சுடர்மிகு அறிவு - நவமணிகளைப்போன்று, எங்கோ, சில திட்டுகளிலே, ஆழப்புதைந்து கிடக்கவில்லை என்பதை, இங்கே, நினைவுபடுத்திக் கொள்வோமாக.

மக்கள் அனைவரிடமும் அறிவு விதை காத்துக்கொண் டிருக்கிறது. அதை முளைக்க வைப்பது சமுதாயக் கடமை. வளர்ப்பது, சமுதாயத்திற்கு நன்மை.

அதைத் தனக்காக, தன் குடும்பத்திற்காக, அண்டி யிருப்போருக்காக மட்டும் அல்லாது, எல்லா உயிர்களுக்கும் உதவியாக்குதல், நம் ஒவ்வொருவருடைய கடமையும் ஆகும்.

'அன்னையை வேண்டுதல்' என்னும் சிறு வழிபாட்டுப் பாடலிலும், பாரதியாரின் வேண்டுதல், அவருக்கு சொர்க் கத்தை மட்டும் தேடுவதாயில்லை; அது, வையத்தின் நல்வாழ்வைக் கருவாகக் கொண்டிருப்பதாகக் கொள்ள லாம்.

உருவில் மக்களாகப் பிறந்த உடனேயே, உணர்வில், நினைவில், சொல்லில், செயலில் மக்களாகி விடுவதில்லை.

ஒவ்வொருவர் இடத்திலும், நல்லியல்புகள், சுடர்மிகு அறிவுக்கூறுகள், சான்றாண்மை ஆகியவை காத்துக்கிடப் பதைப்போல், தீய இயல்புகள், அறியாமை, சோம்பல், விலங்கு இயல்புகள், கீழ்த்தன்மை ஆகியவை ஊடுருவி நிற்கின்றன.

பிந்தியவற்றை அவித்து, முந்தியவற்றைப் பயிரிட் டால், பிறவிப்பயனை எட்டுவோம். கோடிக்கணக்கான மக்களோ, அவ்வழியில் காலெடுத்தும் வைக்கவில்லை.

'பசிக்குச் சோறு; எப்படி வந்தாலும் சரி. பொழுது போக்க, எதையும் பேசுவோம். இருப்பதைக் காட்ட, தொல்லை கொடுப்போம்' என்னும் விலங்கு நிலையோடு முடிகிறது; எண்ணற்றவர்கள் பிழைப்பு.

அவ்வேடிக்கை மனிதராக விரும்பவில்லை, பாரதியார். மனிதன் எந்நிலைக்கு எட்ட முடியுமோ அந்நிலையை விழைகிறார், தெளிந்த காட்சியை உடைய பாரதி.

கறுப்பையும் வெண்மையையும் அடுத்து வைப்பது போல் 'யோக சித்தி' என்னும் பதிகத்தில் இரு பாடல்களைப் பார்ப்போம்.

'தேடிச்சோறு நிதந்தின்று—பல
சின்னஞ்சிறு கதைகள் பேசி—மனம்
வாடித்துன்ப மிக உழன்று—பிறர்
வாடப் பல செயல்கள் செய்து—நரை
கூடிக்கிழப் பருவமெய்தி—கொடுங்
கூற்றுக்கிரை யெனப்பின்மாயும்—பல
வேடிக்கை மனிதரைப்போல—நான்
வீழ்வேனென்று நினைத்தாயோ?'

வேடிக்கை மனிதராக விரும்பாவிட்டால், வேறு எதை வேண்டுகிறார்?

'தோளை வலியுடைய தாக்கி—உடற்
சோர்வும் பிணிபலவும் போக்கி—அரி
வாளைக்கொண்டு பிளந்தாலும்—கட்டு
மாருவுடலுறுதி தந்து—சுடர்
நாளைக்கண்டதோர் மலர்போல்—ஒளி
நண்ணித்திகழு முகந்தந்து—மத
வேளைவெல்லும் முறைகூறித்—தவ
மேன்மை கொடுத்தருளல் வேண்டும்'

என்று பாரதியார் வேண்டுகிறார்.

'நல்லதோர் வீணை'யின் முதற் பகுதியைக் கேட்டுத் தெம்பு கொண்டது போல், யோக சித்தியின் இவ்விரு பாடல்களைக் கேட்டும் புத்துணர்ச்சி பெற்று, உலகிற்குப் பயன்படும் மக்களாக, அன்றைய நாளில் உயர்ந்து நின்ற ஆசிரியர்கள் பல்லாயிரவர் ஆவர்.

அச்சிறப்பு, ஆயிரம் மேடைகளில் இவற்றை ஒப்புவித்த எனக்குச் சேராது. 'மந்திர' சக்தியுடைய பாடல்களைப் பாடிய பாரதிக்கே, உரியதாகும்.

நினைப்பதெல்லாம் நடப்பதில்லை, நடப்பதெல்லாம் நல்லதாக இருப்பதும் இல்லை. கிட்டியது தவறிப்போகும், முயன்றது முடியாமற் போகும்.

அணைக்க வேண்டியவர்கள் அடிப்பார்கள். ஒன்றி யிருக்க வேண்டியிருப்பவர்கள், பிரிந்து நிற்பார்கள்.

அதைவிடக் கொடுமை, கூடிக்குலாவிக் கொண்டே, குழி பறித்தலில் ஈடுபடுவார்கள். இவை எல்லோர் வாழ்விலும் உண்டு.

இவற்றைச் சந்திக்காத எளியவர்கூட இல்லை; பெரி யவர்கள் எப்படித் தப்ப முடியும்? முன்னர் நிகழ்ந்துவிட்ட தீமையை, உயர்ந்துவிட்ட பிறகும் நினைந்து, துருப்பிடிக்கச் செய்து பாழாகும் மனிதர்களை வீட்டுக்கு வீடு காணலாம். அது வாழும் முறையாகாது.

அது நம்மை, நம் எதிர்காலத்தை, அரித்துவிடும். தீமை களை நன்மைப் பயிருக்குச் சாணமாக்கத் தெரிந்தால், அடுத்து நடப்பது நல்லதாக இருக்கக்கூடும்.

எனவே, 'போனது போனதாகவே இருக்கட்டும்: முயல்வது முழுமையாக இருக்கட்டும்' என்று நாம் வாழ வேண்டும்.

'சென்றதினி மீளாது, மூடரே! நீர்
எப்போதும் சென்றதையே சிந்தை செய்து
கொன்றழிக்கும் கவலையெனும் குழியில் வீழ்ந்து
இன்று புதிதாய்ப் பிறந்தோம் என்று நீவீர்
எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக் கொண்டு
தின்று விளையாடியின்புற்றிருந்து வாழ்வீர்
தீமையெல்லாம் அழிந்துபோம், திரும்பி வாரா'

இப்பாடல் புண்ணுக்கு மருந்து; நலத்திற்கு 'வைட்டமின்' மாத்திரை.

அப்படிப் பயன்பட்டது எனக்கும் எண்ணற்ற ஆசிரியர்களுக்கும். அப்படிப் பயன்படுகிறது எனக்கு. அப்படியே, பயன்படட்டும் எல்லோர்க்கும் என்பது குறையாகாது.

## 14

வாழலாம்; நல்ல வண்ணம் வாழலாம்; மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்; எப்போது? இப்போதே; இப் பிறவியிலேயே.

மக்கள் இனம் இதை உணரவில்லை; வாழும் முறையை கற்றுக்கொள்ளவில்லை. எது வாழும் முறை?

முல்லை, முல்லையாக மணம் பரப்புவது அதன் வாழ்வு முறை; மல்லிகை மல்லியாக மலர்ந்து மகிழ்விப்பது அதற்குரிய வாழ்க்கை முறை. செண்பகம் செண்பமாகவே காட்சியளிக்க வேண்டும்; அதற்குரிய மணம் வீசவேண்டும்.

அதேபோல் மனிதன், முழு மனிதத்தன்மை செறிய வாழவேண்டும். மனிதத் தன்மையின் அடையாளங்கள் பல.

தன்னைக் கட்டுதல், மனிதனுக்கே உரிய தனிப் பொறுப்பு.

தன்னடக்கத்தில் வளர்பவனுடைய ஆற்றல் அளவிட முடியாதது.

மனிதனைத் தவிர, பிற உயிர் இனங்களுக்கு, தன்னடக்கக்கலை வாராது.

எனவே, அரிமா அன்றிருந்தவாறே இன்றும் இருக்கிறது. நாளையும் இருக்கும். ஆவின் நிலைதான் என்னே? தோற்றக் கால நிலையே, இந்த இருபதாம் நூற்றாண்டிலும்.

தலைமையாதிக்க வெறியிலிருந்து, உயிரினம் பிழைத்து வாழுமானால், நாற்பதாம் நூற்றாண்டிலும் ஆவினம் இன்றைக்கு வாழும் வகையிலே வாழும்.

மக்கள் இனம் தோன்றிய காலத்திற்கும், இன்றைக்கும் எத்துணை மாறுபாடு? உணர்வில், உடையில், உறையுளில், காணும் மாறுபாட்டை மட்டும் குறிக்கவில்லை.

உணர்வில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியை, செப்பத்தை, சீர்மையை, ஒரு முறைக்குப் பலமுறை எண்ணிப் பாருங்கள்.

ஆதிமனிதன், தேவைப்பட்டால், மற்றோர் மனிதனைக் கொன்று தின்று பிழைத்தான். அந்நிலையிலிருந்து மாறி 'காக்கை குருவி எங்கள் சாதி-நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம்' என்று பாரதி தோள் தட்டிப் பாடுமளவிற்கு மானுட உணர்வு சிறந்துள்ளது.

'பகைவனுக்கருள்வாய் - நன்னெஞ்சே பகைவனுக் கருள்வாய்! தெள்ளிய தேனிலோர் சிறிது; நஞ்சையும் சேர்த்தபின் தேனுமோ-நன்னெஞ்சே?' என்று பாடுமளவு வளர்ந்துவிட்டான்.

பாரதி ஊட்டும் இந் நல்லுணர்வு, ஆதிகால உணர்வல்ல; உயர்ந்த உணர்வு.

இதற்காக, எல்லோரும் பாடுபடவில்லை என்பது உண்மை.

ஆயினும், தலைமுறைக்குத் தலைமுறை சிலராவது முயன்றார்கள்; தவம் கிடந்தார்கள். தவத்தின் முதற்படி, தன்னடக்கம்; கடைசிப் படியும் தன்னடக்கம்.

தன்னடக்கம் கைவரப்பெற்றவர்கள், தம் தம் வீடுபேற்றிற்காக மட்டும் முயலவில்லை. பிறர் துயர் தீர்க்கவும் தவங்கிடந்தார்கள்; வழியைக் கண்டார்கள்.

பிறர் நலம் வேண்டித் தவம் புரிவோர், பிறர் நலம் பேணும் உயர்நிலை, நன்னிலை, அடைவது திண்ணம்.

மானுடத்தின் நீண்ட வரலாற்றிலே, தனக்கென முயலாவது பிறர்க்கென முயலுநர் சிலராவது தோன்றிய தால், இன்றும் உலகம் உயிரோடு இருக்கிறது.

முழுமனிதத் தன்மையை நோக்கி, பையப் பைய நகர்கிறது; ஓய்ந்து ஓய்ந்து தொடர்கிறது.

மானுடத்தை வாழ்விக்கும் பொறுப்பு சிலருடையதா? இல்லை. எல்லோர் உடையதுமாகும்.

அந்நிலையை ஓரே தாண்டில் எட்டிப்பிடிக்க இயலாது. 'வையம் வாழ்க' என்று எண்ணுவோர் சிலர் பலராகும் நிலையை விரைவில் எட்டவேண்டும்.

எனவே, பாரதியார் கூறுவதுபோல், நமக்கு,

'கடமையாவன, தன்னைக் கட்டுதல்
பிறர்துயர் தீர்த்தல், பிறர் நலம் வேண்டுதல்'

என்பதை உணர்ந்து, உணர்த்தி, மனிதத் தன்மையைச் செழிப்புறச் செய்வோம்.

'செய்கதவம்! செய்கதவம்! நெஞ்சே! தவம் செய்தால்
எய்த விரும்பியதை எய்தலாம்—வையகத்தில்
அன்பிற் சிறந்த தவமில்லை; அன்புடையார்
இன்புற்று வாழ்தல் இயல்பு.'

என்று பாரதியார் நினைவுபடுத்துகிறார்.

இதைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்தல் நல்லது; மூட நம்பிக்கையென்று ஒதுக்காதிருந்தால் நல்லது.

இதை நினைவிற்கொண்டு,

'அன்பு செய்வோம்! ஆருயிர்க்கெல்லாம் அன்புசெய்வோம்'

அந்நிலையில் எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யோம். நஞ்சு கலவாத அன்பு வாழ்க்கையில் எதைப் பெறுவோம்? அஞ்சாமையை அடைவோம்.

அஞ்சாமை, மானிட முதிர்ச்சியின் மற்றோர் அடையாளம். அதையும் பெற்று, மொய்க்கும் கவலைப் பகை போக்கி, இன்ப வாழ்வு வாழ, மகாகவி பாரதியாரோடு சேர்ந்து,

"அச்ச மில்லை, அமுங்குதலில்லை,
நடுங்குத லில்லை, நாணுத லில்லை
பாவமில்லை, பதுங்குதலில்லை
ஏது நேரினும் இடர்பட மாட்டோம்;
அண்டஞ் சிதறினல் அஞ்ச மாட்டோம்
கடல் பொங்கி எழுந்தால் கலங்க மாட்டோம்;
யார்க்கும் அஞ்சோம், எதற்கும் அஞ்சோம்
எங்கும் அஞ்சோம், எப்போதும் அஞ்சோம்"

என்று பெருமிதத்துடன் ஓங்கி முழங்கிக் கற்போமாக.

பாரதியார், பிறிதோர் இடத்தில்,

'செயலிங்கு சித்த விருப்பினைப்
பின்பற்றும்; சீர் மிகவே
பயிலு நல்லன்பை இயல்பெனக்
கொள்ளுதிர் பாரிலுள்ளீர்'

என்று கட்டளையிடுகிறார். இதில் மாய்மாலம் ஏதும் இல்லை. இது, உளவியல் அடிப்படையில், உலக நன்மைக்காக மட்டுமல்லாது, தனி மனிதனின் நன்மைக்காகவும் இடப் படும் கட்டளையாகும். எனவே, இதை ஏற்பது நல்லது; இது நம்மை வாழ்விப்பது.

'தன் பெண்டு, தன் பிள்ளை' இவர்களுக்காகவே, வரங்கேட்டு வரங்கேட்டுக் குறுகிப் போன மானிடத்தில், பாரதியார் கேட்கும் வரம், தென்றலாக மகிழ்விக்கிறது.

பரந்து வீசி வாழ்விக்கிறது.

வேடிக்கை மனிதராக வாழ விரும்பாத பாரதியார்,

'கல்லை வயிர மணியாக்கல்—செம்பைக்
கட்டித் தங்கமெனச் செய்தல்—வெறும்
புல்லை நெல்லெனப் புரிதல்—பன்றிப்
போத்தினை சிங்க வேறுக்கல்—மண்ணை
வெல்லத் தினிப்பு வரச் செய்தல்—என
விந்தைதோன்றிட இந்நாட்டை—நான்
தொல்லை தீர்த்துயர்வு கல்வி—வெற்றி சூழும்
வீரமறிவாண்மை

'கூடுந் திரவியத்தின் குவைகள்—திறல்
கொள்ளுங் கோடிவகைத் தொழில்கள்—இவை
நாடும்படிக்கு வினைசெய்து—இந்த
நாட்டோர் கீர்த்திஎங்கு மோங்கக்—கலி
சாடுந் திறனெக்குத் தருவாய்'

என்று வரங்கேட்கும்போது, அவரது நாட்டுப்பற்றும், பொதுநலக் கண்ணோட்டமும், நம்மை மெல்லத் தழுவித் தெம்பூட்டுகின்றன.

பெறும் திறல் அனைத்தும் சமுதாயத்திற்கே என்பதை உணர்ந்து நடந்தால். குறைகள் கரைந்து, இருந்தவிடம் தெரியாமல் மறைந்துவிடும்.

ஆருயிர்க்கெல்லாம் அன்பு செய்யப் பிறந்த மனிதன், அப்படி அன்பு செய்யும் ஆற்றலைத் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கும் மனிதன், அதை வெளிப்படுத்துகிருனு? இல்லை.

மாருக, சீறும் புலியாக, பதுங்கும் நரியாக, கொட்டும் தேளாக, கடிக்கும் மூட்டைப் பூச்சியாக மாறி, கண்டார் நகைக்கும் வாழ்கை நடத்துகிருன்.

எவனோ என்ன? நாம் ஒவ்வொருவரும் தனியே இருந்து, நெஞ்சில் கைவைத்துப் பார்ப்போம். எத்தனை முறை, யார்மேலோ பாய்வதாக் எண்ணிச் சீறி, நம்மை நாமே நலிவுறச் செய்து கொள்கிறோம். தேவையா இது? நல்லதா இது?

'கோபத்தால் நாடியிலே அதிர்ச்சியுண்டாம்
கொடுங்கோபம் பேரதிர்ச்சி—சிறியகோபம்
ஆபத்தாம் அதிர்ச்சியிலே சிறியதாகும்;
அச்சத்தால் நாடியெல்லாம் அவிந்துபோகும்
தாபத்தால் நாடியெல்லாம் சிதைந்துபோகும்
கவலையினால் நாடியெல்லாம் தழலாய்வேகும்
கோபத்தை வென்றிடலே பிறவற்றைத்தான்
கொல்வதற்கு வழியென நான் குறித்திட்டேனே'

என்று பாரதியார் பாடுவது, நூற்றுக்கு நூறு உண்மை.

# 15

மனிதன் வளரப் பிறந்தவன்; முழு மனிதனாக வளரப் பிறந்தவன்.

அப்படி வளராது, வெம்பி, வீழ்ந்து, வீணுவோர் எண்ணற்றவர்.

ஏன் அப்படி?

'சினம் என்பது சேர்ந்தாரைக் கொல்லி' என்பது அவர்கள் நெஞ்சில் பதியவில்லை.

எதனால்? பெரும்பாலோர் படித்தறியாதவர்கள். படித்த சிலருக்கும், படிப்பு, வாழ்க்கைக்கு இன்றியமையாத கருத்துக்களை ஊன்றவில்லை.

பத்திலும் பதினைந்திலும் சீரிய கருத்துள்ள பாடல்களை மனப்பாடஞ் செய்து கொண்டவர்கள் நற்பேறு பெற்றவர்கள்; கட்டிழந்து வெகுளும்போது, உருளும் போது, தடுத்து நிறுத்தும் கட்டைகளாக, அப் பாடல்கள் மின்னும்.

வெகுளியின் தீமையையும் அதனால் ஏற்படும் நலிவையும் தெள்ளென விளக்கும் பாரதியின் பாடலையோ, அதற்கொப்பான பிற பாடல்களையோ, பதினையம் பருவத்தே படித்துக் கொள்ளாதவர்கள் எப்படி நடக்கிறார்கள்?

வெகுண்டு, வெகுண்டு; கணக்குத் தீர்க்க முயன்று, முயன்று; தம்மைத் தாமே அழித்துக் கொள்வதைக் காண்கிறோம். அந்தோ அவலம்!

நாம் பட்ட பாட்டினைப் பின்வரும் தலைமுறைகளும் படவேண்டுமா? வேண்டாம். நம்மோடு நிற்கட்டும், பொங்கிப் பொங்கிப் பாழாகும் போக்கு.

இளைஞர்களுக்குப் பாரதியின் பாட்டைக் கற்றுக் கொடுங்கள். அவர்கள் வாழக் கற்றுக்கொள்ளட்டும். அவர்களாவது,

'சினங்கொள்வார் தம்மைத்தாமே தீயாற்சுட்டுச்
செத்திடுவா ரொப்பாவார்; சினங்கொள்வார் தாம்
மனங்கொண்டு தங்கழுத்தைத் தாமே வெய்ய
வாள்கொண்டு கிழித்திடுவார் மானுவாராம்
தினங்கோடி முறைமனிதர் சினத்தில் வீழ்வார்
சினம்பிறர்மேற் றுங்கொண்டு கவலையாகச்
செய்ததெணித் துயர்க்கடலில் வீழ்ந்து சாவார்'

என்னும் எச்சரிக்கையை உளங்கொண்டு, சினத்தை முளைக்கவிடாது, வாழட்டும்.

'திடங்கொண்டு வாழ்ந்திடுவோம், தேம்பல் வேண்டா
தேம்புவதில் பயனில்லை; தேம்பித் தேம்பி
இடருற்று மடிந்தவர்கள் கோடிகோடி
எதற்குமினி அஞ்சாதீர், புவியிலுள்ளீர்'

என்று பாரதியார் காட்டும் வழி, நேர்வழி; குறுகலான வழி; செங்குத்தான வழியாயினும் செம்மையான வழி.

காலந்தாழ்த்தாது, காலடியெடுத்துவைத்து அவ்வழி நடக்க முனையுமா, மக்கள் இனம்?

மனித வரலாற்றில், குருதி தோய்ந்த பகுதிகள் பல.

அவற்றில் சில, சமயப் போர்களின் விளைவுகள் ஆகும். பெரும்பாலானவை சமயங்களுக்கிடையே நடந்த சண்டைகளே.

சிலவே, சமயப் பற்றற்றவர்களோடு, நிகழ்த்திய போராட்டங்கள்.

சமயச் சண்டைகளின் கொடுமைக்ள், கோரங்க்ள் பிற போர்களின் கொடுமைகளுக்குக் கோரங்களுக்கு குறையாதன.

சமயச் சழக்குகளுக்கு வித்து எது? 'என் தெய்வம் உன் தெய்வம்' என்னும் வேற்றுமை பாராட்டல் ஆகும்.

அவற்றிற்கு, மனிதன் சூட்டும் வெவ்வேறு பெயர்கள். கற்பிக்கும் வகை வகையான குணங்கள், ஆகியவை, சமயப் போர்க்ளை மூட்டி விட்டன; முடுக்கிவிட்டன. சமயச் சழக்கிலே சிக்கிச் சிக்கித் திக்குமுக்காடும், மக்கள் இனத்தைப் பார்த்து,

ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று தேறி
அலையும் அறிவிலிகாள்—பல்
லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வ முண்
டாமெனல், கேளீரோ?'

என்று, கவி அரசர் பாரதியார் அதட்டுகிறார். நொடியில் கவனத்தை பாரதியின்பால் திருப்புகிறோம்.

'மாடனைக் காடனை வேடனைப் போற்ற
மயங்கும் மதியிலிகாள்! எத
னூடும்நின் றோங்கும் அறிவொன்றே தெய்வமென்
றோதி யறியீரோ'

என்று அவர் முழங்குவதைக் கேட்டு அதிர்ச்சி கொள்கிறோம்.

வேடம் பல்கோடியோர் உண்மைக் குளவென்று
வேதம் புகன்றிடுமே—ஆங்கோர்
வேடத்தை நீருண்மையென்று கொள்வீரென்றால்
வேத மறியாதே!'

என்று சந்தனம் பூசுகிறார். 'அப்பாடா' என்று ஆறுதல் பெறும் வேளை,

'நாமங் பல்கோடியோர் உண்மைக் குளவென்று
நான்மறை கூறிடுமே—ஆங்கோர்
நாமத்தை நீருண்மையென்று கொள்வீரென்றும்
நான்மறை கண்டிலதே!'

என்னும் பகுதியைக் கேட்டதும் எரிச்சல் தணிகிறது அவ்வேளை,

'செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம்
சேர்ந்திட லாமென்றே எண்ணியிருப்பார்
பித்தமனிதர் அவர் சொலுஞ் சாத்திரம்
பேயுரையா மென்றிங் கூதேடா சங்கம்'

என்று பாரதியாரின் 'சங்கு' முழங்குகிறது. அதோடு நிற்க வில்லை. அடுத்து,

'இத்தரை மீதினிலே யிந்த நாளினில்
இப்பொழுதே முக்தி சேர்ந்திட நாடிச்

சுத்த அறிவு நிலையிற் களிப்பவர்
தூயவரா மென்றிங் கூதேடா சங்சம்'

என்று சங்கொலி கேட்கிறது,

ஆத்திகர்கள் ஆத்திரப்படத் தேவையில்லை; திகைக்கவும் தேவையில்லை.

இக் கருத்தோட்டம் புதியதல்ல; ஏறுமாருனதல்ல; தொன்மையானது; இடையரு்து தொடர்வது.

'மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்' என்னும் அறிவொளி, நாம் வழிவழி பெற்று வரும் சுடரொளி.

பாரதியார் ஆத்திகர்; இந்து என்பதை நினைவில் கொண்டு சிந்தித்தால், பாரதியின் சங்கநாதத்தின் உண்மையும் நன்மையும் புலப்படும்.

செவிக்கினிய இம்முழக்கம், கோடி கோடி மாந்தர்தம் சிந்தைக்கு உரமானல், வையத்துள் வாழ்வாங்கு வாழலாம்.

தனக்குத் தனக்கென்று வேலி கட்டி, பாத்தியிட்டுக் கவலைப்பட்டு மாயும் மாந்தரைப் பார்த்து,

உடன் பிறந்தார்களைப் போல—இவ்
வுலகில் மனித ரெல்லோரும்;
இடம்பெரிதுண்டு வையத்தில்—இதில்
ஏதுக்குச் சண்டைகள் செய்வீர்?'

என்று கேட்கிறார் மகாகவி பாரதியார்.

பதில் சொல்லாது திகைக்கையில்,

'வயிற்றுக்குச் சோறுண்டு கண்டீர்—இங்கு
வாழும் மனிதரெல்லோர்க்கும்
பயிற்றி உழுதுண்டு வாழ்வீர்—பிறர்
பங்கைத் திருடுதல் வேண்டாம்'

என்று கட்டளையிடுகிறார் பாரதியார்.

இக்கட்டளை, போதிய அளவு பொதுமக்கள் காதுகளில் வீழ்ந்திருந்தால், 'உள்ளாரும் இல்லை; இல்லாரும் இல்லை' என்னும் பெருநிலை நோக்கி நகர்ந்து இருப்போம்.

தந்தையின் செல்வத்தை, தனயன் பெறுவது மரபு.

பொருட் செல்வத்தை மட்டுமா பெறுகிறோம்? பதில் கடன் சுமையாக அமைந்துவிடுகிறது.

முந்தையர் கருத்துச் சொத்து கடன் சொத்தாக மாறிவிட்டதால் அவதிப்படும் மக்கள் எல்லா நாடுகளிலும் உண்டு; எல்லாக் காலங்களிலும் உண்டு. அத்தகைய கருத்து உரல்களை கழுத்தில் கட்டிக்கொண்டு மூழ்கும் நிலை, அறிவுக்கு அடையாளமாகாது.

அன்பின் சுரப்பிற்கு, மக்கள் ஒருமை ஊற்றுக்குத் தடையாக இருப்பவற்றில் ஒன்று, நிற வேற்றுமை; அதன் இந்திய பதிப்பாகிய சாதி வேற்றுமை.

அந்நோய்க்கு அறிவு மாத்திரை கொடுக்கிறார், பாரதியார்.

வீட்டுப்பூனை, குட்டிகள் போட்டது. அவை பேருக்கொரு நிறமாகும்.

நிற வேறுபாட்டால் ஒன்று பூனைக்குட்டியாகவும் மற்றொன்று யானைகுட்டியாகவும் வளர்ந்துவிடாது.

மூன்றாவது எலியாகி விடுமா? நான்காவது புலியாகுமா? ஆகா.

எல்லாமே பூனைக்குட்டிகளே, எனவே,

> 'எந்த நிறமிருந்தாலும்—அவை
> யாவும் ஒரே தரமன்றோ?
> இந்த நிறம் சிறிதென்றும்—இஃது
> ஏற்றமென்றும் சொல்லலாமோ?'

என்று கேட்பதில், நியாயமிருக்கிறது; நீதியிருக்கிறது. எனவே, நாமும் பாரதியாரோடு சேர்ந்து,

'வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால்—அதில்
மானுடர் வேற்றுமையில்லை
எண்ணங்கள் செய்கைகளெல்லாம்—இங்கு
யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்'

என்று முரசு கொட்டுவோம்.

'நிகரென்று கொட்டுமுரசே! இந்த
நீணிலம் வாழ்பவ ரெல்லாம்;
தகரென்று கொட்டுமுரசே! பொய்மைச்
சாதி வகுப்பினை யெல்லாம்'

என்று முரசு கொட்டியபின், அதையே வாழ்க்கை முறையாக்கிக் கொள்வோம். நாள்தோறும் அவ்வுணர்ச்சியை—சமத்துவ உணர்ச்சியை—புதுப்பித்துக் கொள்வோம். உறுதியோடு வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்வோம்.

தற்குறிகள் நிறைந்த நாட்டில், அடுத்த வேளை கஞ்சி எங்கே என்பதே தெரியாத ஏழைகள் மொய்க்கும் நாட்டில், நாம் வாழ்கிறோம்.

படித்த சிலரும், பதவிகளைப் பற்றிவிட்ட சிலரும், பெரும்பாலானோரின் வாட்டத்தைப் பற்றிச் சிந்திப்பதே இல்லை. இந்நிலை மாறவேண்டும்.

'உடன் பிறந்தவர்களைப்போல—இவ்
வுலகினில் மனிதரெல்லாரும்
திடங்கொண்டவர் மெலிந்தோரை—இங்கு
தின்று பிழைத்திடலாமோ?

என்று பாரதியார் கேட்கிறார்

இக்கேள்வி, ஆயிரம்ஆயிரம் மேடைகளில் முழங்குமா?

முழங்கினால், பொதுமக்களைப் பற்றிய சிந்தனை முளைக்கும். அது வளர்ந்தால், மனிதத் தன்மை தழைக்க இடமுண்டு.

அப்படித் தழைத்தால், எல்லோரும் வாழ, நன்றாக வாழ, ஒன்றாக வாழ வாய்ப்பு உண்டு.

## 16

உடலை வளர்க்க உணவு. அறிவை வளர்க்க? கல்வி. உணர்வை வளர்க்க? கல்வி; கேள்வி; சான்றோர் உறவு.

எனவே எல்லோர்க்கும் உணவு கிடைக்கும் வகையில், சமுதாயத்தைச் செம்மைப்படுத்துவது நம் கடமை.

எல்லோர்க்கும் கல்வி கிடைக்கும்படி செய்வதும் தலையாய கடமையாகும்.

இரண்டையும் வற்புறுத்துகிறார், பாரதியார்.

'வீடுதோறும் கலையின் விளக்கத்தை'க் காணக் கட்டளையிட்டார் தேசியகவி.

'அதற்காக, பொறுமை வேண்டினார்; உழைப்பினைக் கோரினார்; வாய்ச் சொல்லை விழைந்தார்.

விழைந்தால் என்ன? நாம் அனைவரும் கெட்டிக்காரர்களாகி நெடுங்காலம் ஆயிற்றே!

மாடிமேலே மாடி கட்டவே நம் பொறுமை; படம் பார்க்கவே காசு; புதுப்புது ஆட்களை வெட்டி வீழ்த்தவே, உழைப்பும் பேச்சும்.

வீட்டுக்கு வீடு தற்குறிகள்; நம் வீட்டிலும் அப்படியே 'கிடக்கட்டும்' என்று, நாமும் பாராமுகமாக முன்னேறுகிறோம்.

இல்லாவிட்டால், தன்னாட்சி பெற்று முப்பதாண்டு கள் ஆன பிறகும், நூற்றுக்கு எழுபது இந்தியர் தற்குறி களாக இருப்பார்களா?

சிலகாலம் தமிழ் ஆசிரியராக இருந்த தொடர்பால், பாரதியார் கல்வியின் தேவையை வற்புறுத்துகிறார் என்று எண்ணிவிடாதீர்கள்.

இந்தியக் கல்வி முறையால் விளையும் தீங்கை உணரா மல் பாடிவிடவில்லை அமரகவி பாரதியார்.

கரும்புச் சக்கை அடுப்பெரிக்கவே பயன்படும். நம்முடைய கல்வியும் அவ்வளவிற்கே பயன்படும்.

வெகுள வேண்டாம், சற்று பொறுமையைக் கடைப் பிடியுங்கள் பாரதியாரின் கருத்திற்குக் காது கொடுங்கள்.

அதோடு விட்டுவிடாதீர்கள். அதைப்பற்றிச் சிந்தியுங் கள். சிந்தித்துத் தெளிந்த எண்ணங்களை ஊரறியச் சொல்லுங்கள்.

ஆள் தூக்கிச் சட்டம் நடைமுறையில் இல்லாத காலத்தில்கூட, ஊமைகளாக, ஆமைகளாக இருந்துவிட் டால்? கண்டவர்கள் எல்லாம் நம் வழித் தோன்றல்களின் கல்வியினைப் பந்தாடிக்கொண் டிருப்பார்கள்.

'கோடி கோடி மக்களின் வாழ்வைத் தாக்குமே என்பதைப்பற்றி யாரும் எண்ணவில்லையே' என்று, பின்னர் அங்கலாய்த்துப் பயன் இல்லை.

உடலுக்கு ஊட்டமூட்ட உணவு; இதுவே உணவுத் தேவைக்கு அடிப்படை.

ஊட்டமூட்டும் உணவையா நாம் நாடுகிறோம்? இக் காலத்தில்நாம் உணவில் தேடுவது வேறு ஏதேதோ!

உண்ணும் சோறு தும்பை மலர்போல் இருக்கவேண்டும். அதற்காக, அரிசியை இரண்டு மூன்று முறை தேய்த்துக் கழுவுகிறோம்.

அப்புறம் தப்பித்தவறி, ஊட்டம் ஒட்டிக் கொண்டிருக்கக்கூடாதே என்ற கவலையால், சோற்றைப் பொங்குவதற்குப் பதில், வடிக்கிறோம்.

அதனால் ஊட்டத்தை வடித்து நீக்கிவிடுகிறோம். வெறுஞ் சக்கையை வயிற்றில் திணித்துவிட்டு, நிறைவு கொள்ளுகிறோம்.

எனவே, நாம் தலைமுறைக்குத் தலைமுறை உடம்பால் இளைக்கிறோம்; குட்டையாகிறோம்.

'புலிநிகர் தமிழர் எலியாவதற்கு விரையலாமா?' என்று கேட்டால், போட்டி போட்டுக்கொண்டு உணவைப் பாழாக்குகிறோம்.

'அறுசுவை' என்னும் பெயரால் எதை எதையோ அதில் கலக்கிறோம். ஊட்டத்தை உறிஞ்சிவிடச் செய்கிறோம்.

எனவே, வலுவூட்ட வேண்டிய உணவு வலுவிழக்கச் செய்கிறது. இந்தியக் கல்வியின் நிலையும் அதுவே.

கல்வி என்பது என்ன? எதற்காக அதைப் பெற அரும்பாடுபட வேண்டும்?

எண்ணற்ற ஆற்றல்கள் ஒவ்வோர் மனிதரிடமும் உறங்கிக் கொண்டிருக்கின்றன. விதையை விதைத்துப் பயிராக்குவதால், ஓர் விதையிலிருந்து கையளவு நெல் மணிகளைப் பெறுகிறோம்.

அவ்விளைச்சலால் குடியானவருக்கு மட்டுமா நன்மை? இல்லை. இது சமுதாயத்தையே வாழ்விக்கிறது.

தனிமனிதனுள் உறங்கிக் கிடக்கும் அறிவியல்புகளை, ஆற்றல் செழுமையினை, பண்பினை, மென்மைகளை, உள்ள விரிவினை, உள்ள உருக்கத்தினைப் பயிரிடும் முயற்சிக்குப் பெயர், கல்வி என்பதாகும்.

நம் உணவு முறை எப்படி உணவின் பலனைப் பாழாக்குகிறதோ, அதேபோல் நம் கல்விமுறை, பல்வகை வளர்ச்சிகளை அரித்து நாசமாக்கும் நச்சுப்பூச்சியாக மாறி விட்டது.

ஆங்கிலேயர்கள் நம்மை ஆண்டபோது, தங்களுடைய ஆட்சியின் குறுகிய தேவைகளை மட்டுமே கருத்தில் கொண்டு, ஓர் கல்வி முறையைக் கொண்டுவந்தார்கள்.

முழு மனித வளர்ச்சி எல்லா மனிதர்களுடைய முழு வளர்ச்சியல்ல அவர்களுடைய குறிக்கோள்.

மூன்று வயதுப் பையனுக்குத் தைத்த கால் சட்டையைப் பாதுகாத்துவைத்திருந்து, முப்பது வயதுக் காளையானபின்னர் அவனை அணியச் சொல்லி அடிக்கிறது, நம் கல்வி முறை.

இது மனிதவளர்ச்சிக்கும் பயன்படுவதில்லை; நாட்டின் தேவைகளையும் நிறைவு செய்யவில்லை.

பாரதியார், ஆங்கிலக்கல்விக் கோயிலின் வெளியே நின்று வேடிக்கைப் பார்த்துவிட்டுப் போனவர் அல்லர்.

அக் கோயிலில் இருந்து கும்பிட்டுப் பார்த்த பிறகே, அதன் பயனற்ற தன்மையை, உளுத்துப் போகச் செய்யும் தீங்கினை உணர்ந்தபடி பாடுகிறார்.

தந்தையின் ஆணைப்படி, திருநெல்வேலி செல்கிறார்; ஆங்கிலப் பள்ளியில் சேர்கிறார்.

ஆங்கே, வெள்ளைத்துரைமார் மட்டும் பாடஞ்சொல்ல வில்லை. வேதம் ஓதும் வழியில் வந்த ஐயன்மாரும், போட்டி யிட்டுக் கொண்டு, புதிய ஆங்கிலக் கலையைக் கற்பிக்க முயன்றார்கள்.

அழகிய காவியங்கள் பாடங்களில் இடம்பெற்றன. அவை ஒன்று, இரண்டா? இல்லை; பலப்பல.

பற்பல கவிதை கற்றுப் பெறவேண்டியது எது? கவிதையுளம்; அழகு உணர்ச்சி; கற்பனை வளர்ச்சி

தேர்வையும், அதில் மேலும் மேலும் அதிக மதிப் பெண்கள் பெறும் உத்திகளையும் முதன்மைப்படுத்திப் படிக்கும் பாட்டுகளில் கவியுளம் மின்னுமா? அழகு உணர்ச்சி துளிர்க்குமா? கற்பனை, பதவிகளையல்லவா வட்டமிட்டுக் கொண்டிருக்கும்.

கவிதை கற்பது, வாழ்க்கையை எழிலூட்டும் நல்லுணர்வுகளைப் பெற என்பதை, ஐயரும் துரைமாரும் மறந்தார்கள்; பெற்றோர் நினைத்ததே இல்லை பயில்வோர் என் செய்வார்?

கவிதைகளைச் சிதைத்து, சொற்களின் இலக்கண விதி களின் இடிபாடுகளுக்கிடையே அழகு, மென்மை, புதைக்கப்படுவதை அவர்களால் மாற்ற முடியுமா? முடியாது. தப்ப முடியாது.

'பொழுதெலாமுங்கள் பாடத்தில் போக்கினான்
மெய்யயர்ந்து விழிகுழி வெய்திட
வீறிழந்தென துள்ளம் நொய் தாகிட
ஐயம் விஞ்சிச் சுதந்திரம் நீங்கியென்
அறிவு வாரித் துரும்பென் றலைந்ததால்
செலவு தந்தைக் கோராயிரஞ் சென்றது;
தீதெனக்குப்பல் லாயிரஞ் சேர்ந்தன,

நலமோரெட் டுணையுங் கண்டி லேனிதை
நாற்பதாயிரங் கோயிலிற் சொல்லுவேன்'

என்று பாரதியார் கதறினர். மற்றவர்கள் உணர்வும் அப்படியே. பாடத்தெரிந்தால் அனைவரும் இப்படியே ஒப்பாரி வைத்திருப்பார்கள்.

அன்றைய நிலையே இன்றும்.

கணிதம் கற்று வருகிறார்கள். உயர் கணிதம், அறிவாளிகளுக்கே எட்டும் என்கிறார்கள். அப்படியே சிலரை மட்டும் பொறுக்கி எடுத்து வித்தை காட்டுவது, இந்தியக் கல்விமுறையின் நெடுநாளைய நோய்.

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்து வந்த வைசூரியைக்கூட, இத்தலை முறையில் ஒழித்துக் கட்டிவிட்டோம்.

கல்வி பற்றிய சில நோய்களுக்கு மருந்து கொடுக்கவே அஞ்சுகிறோம்.

கணக்குமும் உள் வெளியும் உண்மையிற் பற்றுமில்லாதவர் அவதிப்பட்டு மாயவேண்டியவர்களே.

பன்னிரண்டு ஆண்டுகள், கெட்டிக்காரர்கள் கற்ற கணிதம், எங்கே கொண்டு போய்ச் சேர்க்கிறது? வெறுஞ் சீட்டுக்கே.

பொருளியல் பாடம் நூற்றாண்டுகளுக்கு மேல், சொல்லிக் கொடுக்கிறார்களே; அதுவாகிலும் நாட்டின் நலிவைப் பார்த்துத் தெரிந்துகொள்ள உதவுகிறதா? இல்லை.

பொருளியலை வளப்படுத்தும் முயற்சியில் முடுக்கிவிடுகிறதா? இல்லை. அலுவலகந் தோறும் ஏறி இறங்கி ஏங்கி விழவே பயன்படுகிறது.

இன்று நாம் காணும் அவலநிலை, பாரதி ஆங்கிலக் காட்டாற்றில் உருண்ட போதும் இருந்தது. எனவே, பாரதிக்கு ஆற்ருமை பொங்குகிறது.

'கணிதம் பன்னிரண்டாண்டு பயில்வர் பின்
கார்கொள் வானிலோர் மீனிலை தேர்ந்திலார்,
அணிசெய் காவியம் ஆயிரம் கற்பினும்
ஆழ்ந்திருக்கும் கவியுளம் காண்கிலார்
வணிகமும் பொருள் நூலும் பிதற்றுவார்
வாழு நாட்டிற் பொருள்கெடல் கேட்டிலார்
துணியு மாயிரஞ் சாத்திர நாமங்கள்
சொல்லு வாரெட்டுணைப் பயன் கண்டிலார்.'

'முன்னர் நாடு திகழ்ந்த பெருமையும்
மூண்டிருக்கும் இந்நாளில் இகழ்ச்சியும்
பின்னர் நாடுறு பெற்றியுந் தேர்கிலார்
பேடிக் கல்வி பயின்றுழல் பித்தர்கள்
என்ன கூறிமற் றெங்ஙன் உணர்த்துவேன்
இங்கி வர்க்கென துள்ளம் எரிவதே!'

என்று பாரதியார், தமது சுயசரிதையில் முழங்குகிருர்.

இம்முழக்கம் உண்மையின் ஆழத்திலிருந்து வெடிக்கும் முழக்கம். நெஞ்சில் ஏற்கவேண்டிய முழக்கம்; உணர்வில் கலக்கவேண்டிய முழக்கம்; எரிமலையெனப் பொங்கிச் செயல்பட வைக்க வேண்டிய முழக்கம்.

இக்காலக் கல்வி, இத்துணை உளுத்த கல்வி என்பதால், கல்வி நிலையங்களை விட்டு வெளியேறிவிடலாமா? ஆகாது.

பங்கீட்டு அரிசி எப்படியிருந்தாலும், சலித்துக் கொண்டாகிலும் வாங்கி உண்டு, உயிரைப் பிடித்து வைத்துக் கொள்வதே முறை.

பிடி மண்ணை வாரி இறைத்துவிட்டு, பட்டினி கிடந்து மடிவது, வாழும் வகை அல்ல.

அதைப் போன்று இருக்கும் ஊட்டமற்ற, குமட்டல் கல்வியை, சிலரே மடக்கி வைத்துக்கொள்வதை மாற்ற வேண்டும்,

இது எல்லார்க்கும் எட்டும்படி செய்யவேண்டும்.

ஆகவே பாரதி ஆணையிட்டபடி,

**வயிற்றுக்குச் சோறிடவேண்டும்—இங்கு**
**வாழும் மனிதருக் கெல்லாம்;**
**பயிற்றிப் பல்கல்விதந்து—இந்தப்**
**பாரை உயர்த்திட வேண்டும்'**

## 17

திருச்சோலை அழகிய சிற்றூர்; சோலையப்பர் கோயிலுக்கென்று ஓர் நந்தவனம் உண்டு.

அது அழகியது; நெஞ்சை அள்ளுவது; குளுமை உடையது; மனதுக்குத் தெம்பை ஊட்டுவது.

அதில், மல்லிகைத் தோட்டம் தனியானது.

அதற்குள், காலையில் உலாவினான், உலகப்பன்.

பசுமை செறிந்த செடிகள்; அவற்றில் இங்கும் அங்கும் வெண்மை தலை நீட்டியது. பசுமையின் நடுவில் வெண்மை புன்னகை புரிந்தது. உலகப்பனின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது.

எனவே, மாலைப் பொழுதும் மல்லிகைத் தோட்டத்திற்குச் சென்றான். அதை நெருங்குகையிலேயே, ஏதோ

ஒன்று புதிதாகத் தோன்றிற்று; உவகை ஊட்டியது. ஓகோ! நறுமணம் வீசுகிறது என்பதை உணர்ந்தான்.

இயற்கையின் மணமும் உணர்வில் தெளிவும் சேர்ந்து உலகப்பனின் நடையை முடுக்கிற்று. விரைந்து தோட்டத்துள் நுழைந்தான்.

காற்றெலாம் நறுமணம்? கண்ட இடம் எல்லாம் வெள்ளைப் பூக்கள் மலர்ந்து சிரித்து வரவேற்றன.

ஆம், மல்லிகை காலையில் அரும்புகளாக இருந்தது; பகலெல்லாம் போதாகி; மாலைமலர்ந்தது; மலர்ச்சி கண்ணையும் கருத்தையும் கொள்ளை கொண்டது.

அதோடு நின்றதா? இல்லை நறுமணத்தை வழங்கியது.

விளம்பரம் விரும்பாத வள்ளலைப்போல், நறுமணத்தை காற்றோடு கலந்துவிட்டது. மலர்ந்த மல்லிகை தந்தது வாசனை மணம்.

வாழ்க்கையிலும் மணம் உண்டு. எப்போது? மலரும் போது. மல்லிகை அரும்பாக இருந்தபோது வழங்காத மணத்தை, மலரானபோது வழங்கியது. பிற அரும்புகளும் மலராகும்போதே மணம் பரப்பும்.

இயற்கை கற்பிக்கும் இந்தப் பாடத்தை பண்டைத் தமிழர்கள் நன்கு கற்று இருந்தார்கள். அவர்கள் இயற்கையிலிருந்து நெடுந்தூரம் விலகி இருந்து வாழாதவர்கள்.

எனவே, மலர்ந்த பிறகே பெறும் மணம் என்னும் சொல்லால், காளையும் கன்னியும் வாழ்க்கைத் துணையாவதைக் குறிப்பிட்டார்கள்.

பச்சைக் குழந்தைகளைக் கணவன் மனைவியராக்கும் பழக்கம் பிற்காலப் பழக்கம்

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பதாம் ஆண்டு வரை, சமுதாயத்தை நலிவுறச் செய்தது இப்பழக்கம்.

இது பாரதியார் காலத்தில் தட்டிக் கேட்பாரற்றுத் தன்னாட்சி புரிந்தது.

ஆகவே பாரதியார் கட்டிளங்காளைப் பருவம் அடையும் முன்பே, பூப்படையாத குழந்தையை மணந்துகொள்ளும் நிலைக்கு ஆளானார்

பாசமென்பது இயற்கையின் சுரப்பு. அதை அடைத்தல் அரிது.

இயற்கையாகச் சுரக்கும் பாசத்தை அதன் ஓட்டத்தில் செல்லவிட்டு, ஆற்றுப்படுத்தி, பருவம் முதிர்ந்த பின் மணப்பதே முறை

இம் முறைவழி முறையில்லாதவை நம் பிழைப்பாக மாறிவிட்டது. இது பெருந்தீங்கு. இத்தீங்கு பாரதியை கௌவிற்று.

அவர் பத்து வயதில் ஓர் கன்னியின்பால் அன்பு கொள்கிறார். அந்நட்பு காலாவட்டத்தில் காதலாக மாறியிருக்கக் கூடும்.

ஆனால், தந்தை இயற்கையின் போக்கில் பாரதியை விடவில்லை. பிஞ்சுப் பருவத்தே மற்றோர் பிஞ்சை அவருக்கு மணம் புரிவிக்கிறார்.

பிஞ்சு மனைவியிடம் குறையேதும் இல்லை. ஆயினும் மதலைக்குத் தாலிகட்டுவதை, மணம் என்று ஒப்புக்கொள்ள பாரதியின் உண்மை உள்ளம் மறுக்கிறது. நெஞ்சின் ஆழத்திலிருந்து வேதனை பீறிட்டுப் பொங்க,

'ஆங்கொர் கன்னியைப் பத்துப் பிராயத்தில்
ஆழ நெஞ்சிடை ஊனறி வணங்கினன்;

ஈங்கொர் கன்னியை பன்னிரண் டாண்டனுள்
எந்தை வந்து மணம்புரி வித்தனன்
தீங்கு மற்றிதி லுண்டென் றறிந்தவன்
செய லெதிர்க்கும் திறனில னாயினேன்
ஓங்கு காதற் றழலெவ் வளவென்றன்
உளமெரித்துள தென்பதுங் கண்டிலேன்.

'மற்றோர் பெண்ணை மணஞ்செய்த போழ்துமுன்
மாத ராளிடைக் கொண்டதோர் காதல்தான்
நிற்றல் வேண்டு மெனவுளத் தெண்ணிலேன்;
நினைவை யேஇம்மணத்திற் செலுத்திலேன்
கற்றுங் கேட்டும் அறிவு முதிருமுன்
காதலொன்று கடமை யொன்றாயின'

என்று கவியரசர் பாரதியார் நெஞ்சம் குமுறுகிறார்.

குழந்தை மணங்கள், சட்டத்திற்கு அஞ்சி, குறைந்து வருகின்றன.

எனினும், நெஞ்சிலே ஒருத்தி, பக்கத்திலே ஒருத்தி என்னும் பொய் வாழ்க்கைக்குத் தங்களைப் பலியிட்டுக் கொள்வோர் இன்றும் கோடி கோடி.

இப் பொய்மையைப் பற்றி பாரதியார் கூறுவதைப் படிப்போம்.

'சாத்தி ரங்கள் கிரியைகள் பூசைகள்
சகுனமந்திரந் தாலிமணியெலாம்
யாத்தெனைக்கொலை செய்தன ரல்லது
யாது தர்ம முறையெனக் காட்டிலர்.

தீத்தி றன்கொள் அறிவற்ற பொய்ச்செயல்
செய்து மற்றவை ஞான நெறியென்பர்
மூத்தவர் வெறும் வேடத்தில் நிற்குங்கால்
மூடப்பிள்ளை அறமெவண் ஓர்வதே'

என்று பாரதியார் பாடுவதைக் கேட்டுச் சினந்தால், பயனில்லை; சிந்தித்தால், ஆழ்ந்து சிந்தித்தால், பயன் உண்டு.

எதிர்காலம் யாருக்கு நீளமானது? வெறும் வேடத்தில் நிற்கும் மூத்தவர்களுக்கா? உண்மையின் சூடு தணியாத இளைஞர்களுக்கா? பிந்தியவர்களுக்கா?

இளைஞர்கள் எதிர்காலம் நீளமானது மட்டுமல்ல; அதிக வாய்ப்புக்களைக் கொண்டு வந்து நிறுத்தக் கூடியது.

மூத்த எங்களைவிட, இளைய காளையரோ, தங்கள் எதிர்காலத்தை நல்ல வண்ணம் உருவாக்கிக் கொள்ள, காலமும் வாய்ப்பும் நிறையப் பெற்றவர்கள். மன நிகழ்ச்சியில் பொய்யைக் கைவிட்டு விடுங்கள்.

மனை வாழ்க்கை, கணவன் மனைவியூடே சுடர்விடும் காதலை அடிப்படையாகக் கொண்டது.

காதல் உற்பத்திப் பொருள் அல்ல; காசுக்காக, பதவிக்காக, புகழுக்காக, காட்டும் அன்பை, காதல் என்று சொல்லி களங்கப்படுத்தல் ஆகாது.

காதல் இயற்கையாக எழுவது. புனிதமான காதலை, உயிர்நாடியான காதலை, நசுக்கிக் கொல்வதில் நம் சமுதாயம் காட்டும் அக்கறை அளவிட முடியாதது. இந்நிலையைப் பாரதியார் வெறுக்கிறார். எனவே,

'நாடகத்தில் காவியத்தில் காதலென்றால்
நாட்டினர் தாம் வியப்பெய்தி நன்றாம் என்பர்;
ஊடகத்தே வீட்டினுள்ளே கிணற்றோரத்தே
ஊரினிலே காதலென்றால் உறுமுகின்றார்;

பாடைகட்டி அதைக்கொல்ல வழிசெய் கின்றுர்
பாரினிலே காதலென்னும் பயிரை மாய்க்க
மூடரெல்லாம் பொருமையினல் விதிகள் செய்து
முறைதவறி இடரெய்திக் கெடுகின் ருரே'

என்று வன்மையாக இடித்துரைக்கிருர். இதைக் கருத்திற் கொள்வோம்.

பாரதியாரின் தந்தை, பொருள் ஈட்டலே வாழ்க்கையென்று எண்ணி, ஏமாந்து ஏங்கினர். இது தவறு. பாரதியார், தனது சுயசரிதையில், இதைச் சுட்டிக்காட்டுகிருர்.

பொருளிலார் பொருள் செய்தல் முதற்கடன்
போற்றிக் காசினுக் கேங்கியுயிர் விடும்
மருளர்தம் மிசையே பழிகூறுவன்.

என்கிருர். இது நற்காட்சி; தெளிவான கருத்தே.

'வேர்ப்ப வேர்ப்பப் பொருள் செய்வதொன்றையே
மேன்மைகொண்ட தொழிலெனக் கொண்டனன்'

என்று தன் தந்தையைப் படம் பிடித்துக் காட்டுகிருர். அதனுல் என்ன தீமை?

'நேயமுற்றது வந்து மிகமிக,
நித்தலும் மதற்காசை வளருமால்
காயமுள்ளவரையுங் கிடைப்பினும்
கயவர் மாய்வது காய்ந்த உளங்கொண்டே'

இது மிகையல்ல; கவிஞரின் கற்பனைப் பாய்ச்சல் அல்ல. நாம் தலைமுறைதோறும் காணும் அவலக் காட்சிகளே. இவற்றில் இருந்து நாம் விடுபடக் கற்றுக் கொள்ள வேண்டும். இந்த நோக்கத்தோடு,

'தேசத்துள்ள அறிஞர் அறிமினே!
அறமொன்றேதரும் மெய்யின்பம்'' ஆதலால்
அறனையே துணையென்றுகொண் டுய்திரால்'

என்று வழி காட்டுகிறார் இவ்வழியை மேற்கொள்ளல் நல்லது; சிறந்தது; கவலை குறைந்தது. பாரதியார் வேண்டும்,

'அறிவிலே தெளிவு, நெஞ்சிலே உறுதி,
அகத்திலே அன்பினோர் வெள்ளம்
பொறிகளின்மீது தனியரசாணை'

நமக்கெலாம் சித்திப்பதாக!

# 18

கல்லும் கனியும் சுவையுடைய பாடல்களைப் பாடியவர், பாரதியார்.

இவருடைய வசன கவிதைகள், உயிர்த்துடிப்பு உடையன. அவற்றையும் படித்தல் நல்லது. படியுங்கள் அவற்றில் இரண்டொன்றை.

ஞாயிறே, இருளை என்ன செய்துவிட்டாய்?

ஓட்டிவிட்டாயா? கொன்றுவிட்டாயா? விழுங்கிவிட்டாயா?

கட்டி முத்தமிட்டு நின் கதிர்களாகிய கைகளால் மறைத்து விட்டாயா?

இருள் நினக்குப் பகையா?

இருள் நின் உணவுப் பொருளா?

கட்டி முத்தமிட்டு, நின் கதிர்களாகிய கைகளால் மறைத்துவிட்டாயா?

இருள் நினக்குப் பகையா?

இருள் நின் உணவுப் பொருளா?

அது நின் காதலியா?

நீங்கள் இருவரும் ஒரு தாய் வயிற்றுக் குழந்தைகளா?

ஞாயிற்றை நாள்தோறும் காண்கிறோம். பாரதியாரைப்போல் கேட்க, நமக்கெல்லாம் தோன்றிற்றா?

தீயே, நீ எமது உயிரின் தோழன்.

உன்னை வாழ்த்துகின்றோம்.

நின்னைப் போல, எமதுயிர், நூறாண்டு வெம்மையும் சுடரும் தருக!

தீயே, நின்னைப் போல, எமதுள்ளம் சுடர்விடுக!

தீயே, நின்னைப்போல, எமதறிவு கனலுக!

என்று பாரதியார் வேண்டுகிறார். வழிவழி வந்த வேண்டுதலே; கருத்திலே தொன்மை கொண்ட இது, நடையிலே புதுமை கொண்டுள்ளது.

> 'மழை பாடுகின்றது.
> அது பலகோடி தந்திகளுடையதோர் இசைக்கருவி'

என்று பாரதியார் வருணிப்பது, நயமுடைய படப்பிடிப்பாகும்.

மழை நமக்குப் புதிதல்ல. இடியின் குமுறலும் மின்னலின் வெட்டும், நமக்குப் பழகிப்போனவை. ஆயினும் அச்சமூட்டுவன.

அந்த மின்னல் வெட்டுகளை, பாரதியார் எப்படிக் காண்கிறார்?

> 'மேகக் குழந்தைகள் மின்னற் பூச் சொரிகின்றன'

இப்படிக் காட்சியளிக்கின்றன பாரதியாருக்கு. பாரதியார் விழைவது போல,

நமது விழிகளிலே மின்னல் பிறந்திடுக.
நமது நெஞ்சிலே மின்னல் விசிறிப் பாய்க,
நமது வலக்கையிலே மின்னல் தோன்றுக.
நமது பாட்டு மின்ன லுடைத்தாகுக,
நமது வாக்கு மின்போல் அடித்திடுக.

வாழப் பிறந்த மனிதன்: வாளாயிருத்தல் ஆகாது. பிறர் உழைப்பால் பிழைக்கும் புல்லுருவியாகக் கூடாது, எனவே, பாரதியார்.

'நமக்குச் செய்கை இயல்பாகுக
ரசமுள்ள செய்கை இன்பமுடைய செய்கை
விளையும் செய்கை பரவும் செய்கை
நமக்கு மகாசக்தி அருள் செய்க'

என்று வேண்டுகிறார். மகா சக்தியை வழிபடா தோரும் மேற்கூரிய தன்மையுடைய செயல்கள், மனித னுக்கு இயல்பாவதையே விரும்ப வேண்டும். நல்ல செயல் களே மானுடத்தின் நன்மூச்சு.

முரண்பாடுகளின் பிணைப்பே, உலகம். வாழ்க்கை, இயக்கம், இரண்டிற்கும் இன்றியமையாதன இப் பிணைப்பு.

இரவும் பகலும் சேர்ந்தே நாள். இருளும் ஒளியும் சேர்ந்தே நாள். ஞாயிற்றின் வெம்மையில்லாவிட்டால், கடல் நீர் மேகமாகாது.

கொண்டல் பெய்வதற்குக் குளுமை தேவைப்படு கிறது. குளுமை தாக்கி மழை பெய்வதால்தான் நீர் நிலை கள் மீண்டும் நிரம்புகின்றன. எனவே, மக்கள் இனம் மருளத் தேவையில்லை.

'நோயுண்டு; மருந்துண்டு
அயர்வுகொல்லும்; அதனை ஊக்கம் கொல்லும்.
அவித்தை கொல்லும்; அதனை வித்தை கொல்லும்'

என்று பாரதியார் கூறுவதை நினைவில் கொள்ளுதல் நல்லது. இது நம் ஆழ்ந்த சிந்தனைக்குரியது.

கணந்தோறும் கணந்தோறும் காற்று, நம்முள் சென்று வருகிறது. அதன் இயல்பென்ன?

காற்று மெலிய தீயை அவித்துவிடுவான். வலிய தீயை வளர்ப்பான். இது தெரிந்த உண்மை. இதிலிருந்து உணர வேண்டியது 'அவன் தோழமை நன்றி' என்பதை, தோழமைக்கு வழி சொல்லுகிறார் பாரதியார்.

இதோ பாரதி காட்டும் வழி:

..................மானிடரே வாருங்கள்
வீடுகளைத் திண்மையுறக் கட்டுவோம்
கதவுகளை வலிமையுறச் சேர்ப்போம்
உடலை உறுதிகொள்ளப் பழகுவோம்.
உயிரை வலிமையுற நிறுத்துவோம்
உள்ளத்தை உறுதி செய்வோம்
இங்ஙனம் செய்தால், காற்று நமக்குத்
தோழனாகி விடுவான்.,

இந்நிலை யெய்த தனித்தனி முயற்சி அவ்வளவு பலன் கொடுக்காது. சமுதாயத்தின் கூட்டு முயற்சியே ஆதாயமாகும்.

பிள்ளைகளுக்கு அதிகப்படியான செல்லம் கொடுத்துவிடுவதுண்டு. அப்பிள்ளைகள் அனிச்ச மலர்களாக மாறிவிடுவார்கள்; வாழ்க்கைப் போராட்டங்களைத் தாக்குப்பிடிக்க இயலாதவர்க ளாகிவிடுவார்கள்.

தமிழர்களாகிய நம்மில் அதிகம் பேர், இப்படிச் செல்லங் கொடுத்துப் பாழாக்கப்பட்டவர்களோ என்று எண்ண இடமுண்டு.

நம்மளவு தொட்டாச் சுருங்கிகள் பிற மொழியாளர்களிடையே உண்டா என்பது கேள்விக்குறி.

கண்டிக்க வேண்டியபோது, கண்டிக்கத் தவறாத பாரதியாரின் குற்றச் சாட்டைக் கேட்போம்.

தமிழ் மக்கள் எருமைகளைப்போல எப்போதும் ஈரத்திலேயே நிற்கிறார்கள். ஈரத்திலேயே உட்காருகிறார்கள்; ஈரத்திலேயே நடக்கிறார்கள்; ஈரத்திலேயே படுக்கிறார்கள். ஈரத்திலேயே சமையல்; ஈரத்திலேயே உணவு.

உலர்ந்த தமிழன் மருந்துக்குக்கூட அகப்படமாட்டான்.

ஓயாமல் குளிர்ந்த காற்று வீசுகிறது.

தமிழ் மக்களிலே பலருக்கு ஜுரம் உண்டாகிறது.

நாள்தோறும் சிலர் இறந்து போகிறார்கள். மிஞ்சியிருக்கும் மூடர்,

'விதிவசம்' என்கிறார்கள். ஆமடா, விதிவசந்தான்.

' அறிவில்லாதவர்களுக்கு இன்பமில்லை' என்பது ஈசனுடைய விதி.

' சாஸ்திரமில்லாத தேசத்திலே நோய்கள் விளைவது விதி' என்கிறார்.

இதைப் படித்ததும்,

'நம் பழம்பெரும் பாரதத்திலே சாஸ்திரங்கள் இல்லையா?' என்று வெகுளாதீர்கள். பாரதியார் இதுபற்றிக் கூறும் விளக்கத்தைத் தொடர்ந்து படியுங்கள்.

தமிழ் நாட்டிலே சாஸ்திரங்களில்லை. உண்மையான சாஸ்திரங்களை வளர்க்காமல், இருப்பனவற்றையும் மறந்துவிட்டுத் தமிழ்நாட்டுப் பார்ப்பார் பொய்க்கதைகளை மூடரிடங் காட்டி வயிறு பிழைத்து வருகிறார்கள்.

குளிர்ந்த காற்றையா விஷமென்று நினைக்கிறாய்?

அது அமிழ்தம், நீ ஈரமில்லாத வீடுகளில் நல்ல உடைகளுடன் குடியிருப்பாயானுல்,

'காற்று நன்று' என்கிருர் பாரதியார்.

ஈரமில்லாத வீடும் நல்ல உடையும் பெரும்பாலோருக்குக் கானல் நீராக அல்லவா உள்ளன? எல்லோரும் வாழும், நன்ருக வாழும், புதிய பாரதம் உருவானுல், எல்லோருக்கும் ஈரமில்லாத வீடும் போதிய உடையும் கிடைக்கும்.

அத்தகைய சமுதாயம் தானே உருவாகாது; நாமே உருவாக்க வேண்டும். அதற்காக முயல்வோமாக; தியாகம் செய்வோமாக.

தனி மனிதத் தூய்மையிலே, சராசரி இந்தியனுக்குள்ள அக்கறைபற்றி பெருமை கொள்ளலாம். ஊர்த் தூய்மையைப்பற்றி அவனுக்குள்ள அலட்சியம் ஈடு இணையற்றது.

அவன் அசுத்தப் படுத்தாத பொது இடம் உண்டா? தெருவெல்லாம் துப்பிக்கொண்டே போகும் வள்ளல்கள் நாம். சளியை எங்கே சிந்துவது என்னும் வரன்முறை இல்லாதவர்கள் நாம்.

சுவர் கண்டதும் சிறுநீர் கழிப்பது நாயின் இயல்பு. உரிமை பெற்றுள்ள இந்தியன் அதோடு போட்டி போடுகிருன் என்பது மிகையல்ல.

தன் வீட்டு எச்சில் இலையை எதிர்வீட்டுப்பக்கம்—அவர்கள் பாராத வேளையில்—எறிவதில், நம் தாய்க்குல வள்ளல் தன்மைக்கு ஈடேது.

தன்னுட்சி பெற்ற பிறகு, இவ்வுரிமைகள் விரிந்துள்ளன. நம் மக்கள் பாரதி சொல்வதைக் கேட்டால் நல்லது; பின்பற்றினுல் அதிலும் நல்லது.

ஊர்க்காற்றை மனிதர் பகைவனுக்கி விடுகின்றனர்.

அதனுல் காற்றுத்தேவன் சினமெய்தி அவர்களை அழிக்கிருன்.

அவன் வரும் வழியில் சேறு தங்கலாகாது, நாற்றம் இருக்கலாகாது. அழுகின பண்டங்கள் போடலாகாது. புழுதி படிந்திருக்கலாகாது. எவ்விதமான அசுத்தமும் கூடாது.

அவன் வரும் வழியை நன்ருகத் துடைத்து நல்ல நீர் தெளித்து வைத்திடுவோம்.

அவன் வரும் வழியிலே, கர்ப்பூரம் முதலிய நறும் பொருள்களைக் கொளுத்தி வைப்போம்.

அவன் நல்ல மருந்தாக வருக!

அவன் நமக்கு உயிராக வருக!

அமுதமாகி வருக!

—என்கிருர் பாரதியார்.

கோயில் சுற்றுப்புறங்களில் அசுத்தம் செய்யாதிருக்கவே இனித்தான் கற்றுக்கொடுக்கவேண்டும்.

கல்விக்கூடங்களாவது வாழ்க்கைக்கு வேண்டிய துப்புரவான பழக்கங்களைக் கற்றுக்கொடுக்க முடிகிறதா?

பாடச் சருகுகளை ஏற்றுவதும் இறக்குவதுமே அவற்றின் வேலைகளாகி நின்றுவிடுகின்றன.

என்றைக்கு நச்சுக் காற்றிலிருந்து விடுதலையோ?

1916இலேயே அண்ணல் காந்தியடிகள்,

"கங்கை நதிக்கரைகளின் மேல் அசுத்தம் செய்யும் இளைஞர்கள் எத்தனைப் பட்டங்கள் பெற்றும் பயனென்ன?" என்று குமுறினுர்

அறுபதாண்டுகளுக்குப் பின், நிலைமை மேலும் மோசமாகியுள்ளது.

மக்களுக்கும் தெரியாது; பெரியவர்கள் சொன்னதும் நெஞ்சில் பதியாது. புதிய சமுதாயத்தின் நாற்றங்கால்களாகிய கல்வி நிலையங்களும் திருத்தியனுப்பா. அப்புறம்; நாம் எருமை மாடுகளாகத் தொடர வேண்டியதுதானே!

# 19

பாயசத்தில் நாட்டஞ் செலுத்தியவன், எதிரில் குவித்திருக்கும் வெண்சோற்றை மறந்துவிடுவதுண்டு. அதுபோல, பாரதியின் பாடல்களில் சொக்கியுள்ள நாம், அவருடைய உரைக்குவியலை மறந்துவிடுகிறோம். பாரதியார் உரை நடையில் எழுதியுள்ளவையும் நிறைய. அவை சத்தான உணவுக்கு ஒப்பானவை.

பழகு தமிழில் பற்பலவற்றைப் பற்றி பாரதியார் எழுதினார்.

அவருடைய உரை நடையில் உயிர் துள்ளுகிறது. அது ஊருக்கு நல்லதைச் சொல்லுகிறது. விளைபொருள்கள் பல. அத்தனையும் அப்படியே பயன்படுத்தலாமா? ஆகாது. ஒவ்வோர் வேளை ஒன்றையோ, சிலவற்றையோ கையாளலாம். அப்படிப் பயன்படுத்துகையில், சிலவற்றைப் பச்சையாக, சிலவற்றை அவித்து உண்கிறோம். பாரதியாரின் வெவ்வேறு கட்டுரைகளை, வெவ்வேறு நிலைகளில், வெவ்வேறு பக்குவத்தில் மக்கள் உண்ணவேண்டும். அவை நம் அறிவில் செறிந்தால், வாழ்க்கை ஓட்டத்தில் புதிய தெம்பும் ஒளியும் விளங்கும்.

பாரதியார், காசியில் சில காலம் தங்க நேர்ந்தது. அப்போது, இந்து பல்கலைக்கழகத்திற்கு அடிப்படைக் கல் நாட்டப்பட்டது, வரலாற்றுச் சிறப்புடைய அப்பெரு விழா வில் அறிஞர் சிலர் உரையாற்றினர். அவர்களில் ஜகதீச சந்திரவசு என்னும் உயிரியல் அறிஞர் ஒருவர்.

'வேத ரிஷிகளின் கவிதை' என்னும் தலைப்பில், வசுவினுடைய உரையைப் பற்றி எழுதுகிறார் பாரதியார். நவீன சாஸ்திர பண்டிதர்களின் சிகாமணியாக விளங்கும் வசு என்று, பாரதியார் அவரைப் பற்றி குறிப்பது சாலப் பொருத்தம். உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானியாக விளங்கி யவர் வசு.

'லௌகீக சாஸ்திர ஆராய்ச்சிகளிலே மறுபடியும் பாரத தேசம் தலைமை வகிக்கும்படி செய்வது நம்முடைய கடமை' என்று கோடிட்டுக் காட்டினார். அதைப் பாரதியின் கட்டுரை வழியாக, நாம், அடிக்கடி நினைவுபடுத்திக்கொள்ளுதல் நல்லது.

வசுவின் உரையைக் கருப் பொருளாகக்கொண்டு எழுதும் பாரதியார், "நம்முடைய இடைக்காலத்து மடமை களை எல்லாம் மகிமைகள் என்று நினைத்து வீண் பெருமை கொள்வோரின் பேச்சை நாம் உதறிவிடுதல் நியாயம். ஆனால், வசு பண்டிதர் கூறியதை நாம் மதிப்புடன் ஏற்றுக் கொள்ளுதல் தகும். இடைக்காலத்திலே நமது சாதி, பொய் களும் சோர்வுகளும் குவித்த குப்பையின் கீழே அழுந்திக் கிடந்தது. பாரதமாதா நித்திரையில் இருந்தாள். இப்போது மறுபடியும் அந்தக் குப்பையிலிருந்து வெளிப் பட்டு, தைரியமென்னும் கங்கா நதியில் ஸ்நானம் செய்து விட்டு, நமது பாரத ஜாதி வானத்திலே தோன்றும் சூர்யோதயத்தை அன்புடன் அழைத்து வாழ்த்துக் கூறுகின்றது." என்கிறார். எவ்வளவு நம்பிக்கையூட்டும் எழுத்து!

காலைக் கதிரவனின் பேரொளியைக் காணக்கூசும் நாம், முப்பதாண்டு தன்னாட்சிக்குப் பிறகும், இந்தியர்களாக மாறாமல், பற்பல சாதியினராக இருந்து கொண்டு, சாதிப்போர்கள் என்னும் புகை மண்டலத்தை நாள் தோறும் எழுப்பிக் கொண்டிருப்பது சரியா?

"வெறும் சொல்லுக்கு மகிமையில்லை. அச்சொல் உள்ளத்துணிவை உணர்த்துமாயின், அதற்கு மகிமையுண்டு. 'எதனை நினைக்கிறாயோ அதுவேயாகிறாய்' என்பது தவறாத உண்மை. நினைப்பு நிஜ நினைப்பாக இருக்க வேண்டும். ஆழ்ந்த நினைப்பு, அசையாத நினைப்பு, வலிய நினைப்பு, மாறாத நினைப்பு—அத்தகைய நினைப்பு, விரைவில் உலகமறியத்தக்க வெளியுண்மையாக மாறிவிடும்" என்று பாரதியார் கூறுவது வெற்றுரையல்ல; உண்மையான உயிருள்ள உரை. முகப்பூச்சாக இருப்பதைத் துடைத்து விடுவீர்: உள்ளத்தின் பாதாளத்தில் இருந்து ஒலிப்பீர். 'நாம் அனைவரும் இந்திய சாதி; நாம் அனைவரும் சமத்துவ சாதி; நம்மில் மேலும் இல்லை; கீழும் இல்லை!

கழிந்து கொண்டிருக்கும் எங்கள் தலைமுறை எப்படி நடந்தாலும், நீங்களாவது உண்மையான இந்தியர்களாக உறுதியாக நின்றுவிட்டால்,

உலகியல் வளர்ச்சி மளமளவென்று நம்மை அணைத்துக்கொள்ளும்.

உலகியல் வளர்ச்சி தேவையா? இவ்வுலகம் பொய்யல்லவா? இக் கானல் நீரைத் துரத்திக்கொண்டிருக்க வேண்டுமா? பல்லைக் கடித்துக்கொண்டு எப்படியோ இருப்போம்; இம்மையைச் சீராக்குவதைப்பற்றிக் கவலையேன்? மறுமைக்கு நல்ல இடத்தைத் தேடிக்கொள்வதில் முனைவோம்; இத்தகைய கருத்துகள் பழையன. அடிக்கடி நம் செவிகளில் வீழ்வன பொதுமக்களைக் குழப்புவன.

தலைமுறை தலைமுறையாகக் குழம்பி வரும் இக்கருத்துகளை, பாரதியார், நன்ருக அறிவார். எனவே, பாரதியாரின் தராசு எடைபோட்டுக் காட்டுவதைக் கவனிப்போம்:

"உலகம் பொய்; அது மாயை; அது பந்தம்; அது துன்பம்; அது விபத்து; அதைவிட்டுத் தீரவேண்டும். இந்த வார்த்தைதான் எங்கே பார்த்தாலும் அடிபடுகிறது. ஒரு தேசத்தில் படித்தவர்கள் அறிவுடையோர் சாஸ்திரக்காரர் எல்லோரும் ஒரே மொத்தமாக இப்படிக் கூச்சலிட்டால், அங்கே லௌகீக காரியங்கள் வளர்ந்தேறுமா? மனம் போல வாழ்க்கையன்ருே!

"பூர்வமதாசார்யர், பரமார்த்திகமாகச் சொல்லிப் போன வார்த்தைகளை, நாம் ஓயாமல் லௌகிகத்திலே சொல்லிக்கொண்டிருப்பது சரியா? வெகுஜன வாக்கு நமது தேசத்தில் பலித்துப்போய்விடாதோ? இகலோகம் துன்பமென்று நம்பினுல், அது துன்பமாகத்தான் முடியும்.

"இந்த உலகம், இதிலுள்ள தொழில், வியாபரம், படிப்பு, கேள்வி, வீடு, மனைவி, மக்கள், எல்லாவற்றிலும் ஈசன் அளவிறந்த இன்பத்தைக் கொட்டி வைத்திருக்கிருன்" என்று பாரதியார் கூறுவதை ஒதுக்காமல்,

"நாம் இகலோகத்து அறிவிலும் மேம்பாடு பெற வேண்டும். தெரியாத சாஸ்திரங்களின் ஆரம்பங்களைப் பிறரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். பிறகு அவற்றை நமது ஊக்கத்தாலும் உயர்மதியாலும் மேன்மேலும் வளர்த்து மீளவும் உலகத்தோடு ஊட்ட வேண்டும்.

நெல் விதை முளைத்தல் மட்டும் போதாது. உயர்ந்து வளர்தல் மட்டும் போதாது, விளைய வேண்டும். பல பத்து மணிகளுடைய கதிராக விளைய வேண்டும். விளைந்த நெல் மக்களுக்கு உணவாக வேண்டும். இதுவே இயற்கை நெறி.

புதுப்புது சாத்திரங்களை நாம் கற்பதும் வளர்ப்பதும் மட்டும் போதாது; அவற்றை உலகத்தாருக்கு ஊட்ட வேண்டும் என்பது பாரதியாரின் அறிவுரை. உலகத்தாருக்கு ஊட்டுவதற்கு முன்னர் அக்கம் பக்கத்தாருக்காவது ஊட்ட வேண்டாமா? அண்மைக் காலத்தில், உலகியலின், அறிவியலின், பல்வேறு துறைகளிலும் எண்ணற்ற இந்திய மேதைகளைப் பெற்று விட்டோம், சமுதாயம் அதனால் பலன் பெற்றதா? இல்லை. நாடு அதனால் நன்மையடைந்ததா? இல்லை. அறிவு வெள்ளப் பெருக்கால் பொதுமக்கள் எட்டுணைப் பலனும் அடையாமையில், நம்நாட்டோடு போட்டிபோடக்கூடிய மற்றோர் நாடு உண்டா இல்லையென்றே கூறிவிடலாம். ஏன் அப்படி? தாமரை இலைத் தண்ணீராகி விட்டது நம் அறிவு வெள்ளம்? பார்வையில் பழுது ஏற்பட்டுவிட்டது. நோக்கு திசை மாறி விட்டது. எனவே, வேடிக்கை மனிதர்களாக இருக்கிறோம். தேவையில்லாதவற்றைத் தேடித்தேடி, ஏங்கி ஏங்கி, கணந்தோறும் கிழடு தட்டுகிறோம்

இந்நிலை இயற்கை அல்ல; நோய் நிலை. இதை முயன்று மாற்றிக்கொள்ள வேண்டும். தொடர்ந்து பயின்று நேர்ப் பார்வை நோக்கிலுள்ள கோணலை நிமிர்த்திக்கொள்ள வேண்டும்.

## 20

உயிர் வாழும் வரை மூச்சு விட்டுக்கொண்டே இருக்கிறோம். இது இயற்கை. மூச்சு நின்றால் உயிர் இல்லை. மூச்சுவிடும் செயல் உயிரிலிருந்து பிரிக்க முடியாத ஒன்றாகும் அதைப்போன்றே, தொழில் புரிதல், தொண்டு புரிதல், உயிர்களைப் பாலித்தல், வாழும் மக்களின் இன்றியமையாத கடமையாகும்.

முறையாகப் புகுந்தும், வெளியேறியும் இயங்கும் மூச்சு கைம்மாறு கேட்பதில்லை; பொன்னைப் பொருளை அவாவி வெம்புவதில்லை. புகழைப் போற்றுதலை விழைந்து குழைவதில்லை; எதையும் எதிர்பாராமல் மூச்சு இயங்குகிறது. நாமும் எதையும் எதிர்பாராமல் தொழில் புரிதல் கடமை; தொண்டு செய்தல் உரிமை; பாலித்தல் பண்பு; அந்தோ! பரிதாபத்திற்குரிய நாம்?

'கண்ணை மூடினால் காணமுடியாத பொருளே எல்லாம்' என்று நம் பார்வையைக் கெடுத்துக்கொண்டுள்ளோம். கண்ணை மூடுவதற்கு முன்பாவது, கணக்கில் எழுதிவைத்துக் கொண்டுள்ளதைத் தவிர, நாள்தோறும் கோடிகோடியைத் தொட்டுத் தொட்டு மகிழ முடியுமா? உண்டு உண்டு செரிக்க முடியுமா? முகர்ந்து முகர்ந்து மயங்க முடியுமா? முடியாது; முடியாது.

தன் இயற்கைக்கு நிறைவு செய்யத் தொழிலோ தொண்டோ ஆற்றவேண்டியவர்கள், நாம். "என்ன ஆதாயம் கிடைக்கும் என்னும் பொய்மான் வேட்டையில் முனைந்து அல்லற்படுவது அழகல்லவே. எனவே, 'பலன் கருதாப் பணி'யை நமக்குக் கட்டளையிட்டார்கள் ஆன்றோர்கள். அதை மறந்து, பலன், வேளைக்கு வேளை ஆதாயம், புகழ், பாராட்டு என்பனவற்றைக் குறிக்கோளாக்கி கொண்டோம். எனவே, நம் அறிஞர்களின் ஒளி, சுற்றியுள்ளோருக்கு எள்ளளவும் உதவுவது இல்லை. இனியாவது நாட்டின் அறிஞர்களும், மக்களின் தலைவர்களும் தொண்டின் தேவையை முன்னிறுத்துவார்களாக. எவ்வளவு கிடைக்கும், என்ன கிடைக்கும் என்பதைச் சிந்தனை செய்யாமல், எப்போது தொண்டாற்ற வேண்டும், எவ்வளவு தொண்டாற்ற வேண்டும், எவருக்கு நியாயம் வழங்கவேண்டும் என்பனவற்றையே சிந்திக்கக் கற்றுக் கொள்வார்களாக.

எவருக்கு நியாயம் வழங்குவது என்றதும், பாரதியாரின் கதைக்கொத்து நினைவிற்கு வருகிறது. 'மிளகாய்ப் பழச் சாமியார்' என்னும் கதை மூலம், பாரதியார் இக்கால இந்தியர்களுக்குத் தேவையான அரிய கருத்துகளை மிக அழகாக வெளியிடுகிறார். பாரதியாரின் மிளகாய்ப்பழச் சாமியார், உலகம் அறியாத சாது அல்ல. அவர் கூறுகிறார்:

"ஹா, ஹா, பொறுத்துப் பொறுத்துப் பொறுத்து இருந்தது போதுமடா, போதுமடா, போதும்." உலகத்திலே நியாயக்காலம் திரும்புவதாம்.

"ருஷியாவிலே கொடுங்கோல் சிதறிப்போய்விட்டதாம்.

"ஐரோப்பாவிலே ஏழைகளுக்கும் பெண்களுக்கும் நியாயம் வேண்டும் என்று கத்துகிறார்களாம்.

"ஆண் பெண்ணுக்கு நடத்தும் அநியாயம் சொல்லுக் கடங்காது. அதை ஏட்டில் எழுதியவர் இல்லை. அதை மன்றிலே பேசியவர் யாருமில்லை.

"மறையவனுக்குப் பார்ப்பானும், கறுப்பு மனுஷனுக்கு வெள்ளை மனுஷனும் நியாயம் செய்யவேண்டும் என்று சொல்லுகிறீர்கள்.

"பெண்ணுக்கு ஆண் நியாயம் செய்வது அதையெல்லாம்விட முக்கியமென்று நான் சொல்லுகிறேன்.

"தெருவிலே வண்டி தள்ளி, நாலணா கொண்டு வருவது மேல் தொழில் என்றும், அந்த நாலணாவைக்கொண்டு நாலு வயிற்றை நிரப்பி வீடு காப்பது, தாழ்ந்த தொழிலென்றும் நினைக்கிறான்.

"ஆணும் பெண்ணும் சமானம். இந்த நியாயத்தை நிலை நிறுத்துவதற்கு நீங்கள் உதவிசெய்ய வேண்டும்." நெஞ்சில் நிறைந்து செயல்படவேண்டிய உரை.

சமத்துவம் பிறர் கொடுக்கும் கொடைப்பொருள் அல்ல. உரியவர்கள் உழைத்துப் பெறவேண்டிய உரிமை. நம் நாட்டுப் பெண்கள் உரிமைக்கு உழைத்து விடப் போகிறார்கள் என்னும் அச்சத்தால் அல்லவா, பதினாறு முழச்சேலையையும், கழுத்தை அழுத்தும் சுமைகளையும் சிறப்புகளாக்கி ஏமாற்றி வைத்துள்ளோம்.

படிக்காத பாட்டிக்கு பேய்க்கதைகள் மேல் நம்பிக்கை.

படித்த பெண்களுக்கோ, பேய்ப் படங்கள்மேல் தணியாக் காதல். அவையிருக்க, ஆண்களாகிய நமக்குப் பயன் ஏன்?

இக்காலத்தவருக்குக் கசப்பானவற்றை, குள்ளசாமியார் வாயால் கூறுகிறார்:

"முதலாவது நாக்கை வெளுக்க வேண்டும். பொய் சொல்லக்கூடாது. புறஞ்சொல்லக்கூடாது. முகஸ்துதி கூடாது. தற்புகழ்ச்சி கூடாது. வருந்தச் சொல்லலாகாது; பயந்து பேசக்கூடாது" என்று பாரதியார், குள்ளச் சாமியாரைக்கொண்டு, நமக்கு அறிவுறுத்துகிறார். இது நம் உயிரில் கலந்தால், உண்மை தழைக்கும். உண்மை படரப் படர, வாழ்வு மலரும்.

"எப்போதும் பாடுபடு. எப்போதும் உழைத்துக் கொண்டிரு, உழைப்பிலே சுகமிருக்கிறது. வறுமை, நோவு முதலிய குட்டிப் பேய்களெல்லாம், உழைப்பைக் கண்டவுடன் ஓடிப்போய்விடும்" என்று சித்தக் கடலில் பாரதியார் கூறுகிறார்.

இதை ஏற்கவேண்டாமா?

'தன்னைத்தான் ஆள வேண்டும்
தன்னைத்தான் அறிய வேண்டும்
தன்னைத்தான் காக்க வேண்டும்
தன்னைத்தான் உயர்த்த வேண்டும்'

பாரதியாரின் 'தராசு', வேணு முதலியார் வழியாக' அறிவு கொளுத்துகிறது.

இந்த அறிவை நாம் பெற்றிருந்தால், பிற நாட்டு உதவிக்குக் கையேந்தி நிற்பதே நம் வாழ்க்கை முறை என்னும் நிலை உருவாகியிராது. நம் காலில் நின்று, நம் முயற்சியால் உருவாக்கி, நம் முதலீட்டால் வளர்த்து, நாம் வாழ்ந்திருப்போம். எல்லோரையும் வாழ வைத்திருப் போம்.

'நல்ல விளக்கிருந்தாலும் கண்வேண்டும்; பெண்ணே
நாலு துணையிருந்தாலும் சுயபுத்தி வேண்டும்
வல்லவர்க்கு மித்திரர்கள் பலருண்டு; பெண்ணே
வலிமையிலார் தமக்குலகில் துணையேது, பெண்ணே'

என்று, வேணு முதலியாரைப் பாட வைக்கிறார் பாரதி யார். இந்த 'டானிக்' நமக்குத் தேவை. உடனடியாகத் தேவை.

அந்தரடிச்சான் சாஹிப் கதை கற்பனையேயானாலும். அப்போது காணும் காட்சியே, எந்த வித்தைக்காகவோ எந்த வேலையோ பொத்தென்று மடியில் வீழ்வது பொய் யல்ல; நடைமுறைக் கேலி.

'சாஸ்திரியார் மகன்' என்னும் பதினான்கு வரிக் கதை யின் வழியாக, பாரதியார் யாரையும் புண்படுத்த முடிய வில்லை. கசப்பான உண்மையொன்றைக் கிண்டலோடு காட்டுகிறார். சாஸ்திரியாரின் நிலைக்கு தங்களைத் தள்ளிக் கொண்டவர்கள், இக்காலத்தில் பலராவர்.

'அமெரிக்காவுக்குப் போன சீன ராஜகுமாரன்' நல்ல நகைச்சுவைத் துணுக்கு ஆகும்.

பிராமணப்பிள்ளை நாலு சாஸ்திரம் படித்த கதை'யும் நல்ல பாடத்தை நயம்படக் கற்பிக்கிறது. காலத்தின் கோலத்தால் வெற்றிபெற்று அதையே முதலாக்கி வாழ்வோர்—நுனிப்புல் திறமைசாலிகள்—எல்லாத் துறைகளிலும் காட்சியளிக்கிறார்கள்.

பாரதியாரின் கவிதைகளைக் கற்பதைப்போன்று, அவருடைய கட்டுரைகளையும் கதைகளையும் படித்தல் பயன் உள்ள செயலாகும். அவருடைய உரைநடை, வெறும் சொற்கோவையல்ல. பொருள் நிறைந்த எழுத்துகள். உயிர் மின்னும் எழுத்துகள்; தெளிவூட்டும் சொற்கள்.

மறைமலையடிகளாருக்குப் பிந்திய தமிழல்ல பாரதியாரின் உரைநடை. ஆயினும், அது 'தமிழா' என்று மலைக்கும் அளவிற்கு மணிப்பிரவாள நடையும்ல்ல. எளிய அக்கால மக்கள் மொழியில் பல விஷயங்களைப் பற்றி பாரதியார் எழுதியுள்ளார். அவற்றின் தொகுப்பிற்கு; 8-3-36ல் முன்னுரை தந்த சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்:

"பாரதியார் எடுத்த விஷயங்க்ள் மிகப் பெரியவை. விஷயங்களின் கவுரவம் ஒரு புறமிருக்க, தற்காலத்தில் தமிழ் வாசக நடை எவ்வாறிருக்க வேண்டுமென்பதை, பாரதியார் எழுதிய இச்சிறு புஸ்தகத்தில் கண்டு கற்கலாம். அர்த்த புஷ்டியில்லாத அரற்றலின்றி, சொன்னதையே சொல்லி பக்கங்கள் நிறைப்பதுமின்றி, ஸ்படிகம் போன்ற தெளிவும், வைரம் போன்ற உறுதியும் பெற்று, இலக்கணப் பிழைக்ள் ஒழிந்த பேச்சுத் தமிழையே எவ்வாறு, ஆழ்ந்த கருத்துக்களை எழுதவும் சித்திரிக்கவும் உபயோகப்படுத்த

லாம் என்பதைப் பாரதியார் வசன நடையில் நாம் பார்க்கலாம். தமிழுக்குள் கிடக்கும் எல்லையற்ற சக்தியையும் லாவகத்தையும் பாரதியார் எழுத்துகளில் தமிழ் மக்கள் பார்த்து அறிந்து கொள்ளவேண்டும்'' என்று கூறுகிறார்.

பாரதியாரைப் படிப்போம்; மேலும் மேலும் படிப்போம். கொழுந்துவிட்டெரியும் நாட்டன்பைப் பெறுவோம். அதே அளவு சுடர்விடும் சமத்துவத்தைச் சிக்கெனப் பிடிப்போம். வாழ்வோம்; வாழவைப்போம்.